மே 2021

ஓம் சக்தி

நிறுவனர் : நா.மகாலிங்கம்

₹15/-

ஆழித்தேர் வித்தகனை ஆரூரில் கண்டேனே..!

கு ம ர கு ரு

பொறியியற் கல்லூரி । வணிக மேலாண்மைப் பள்ளி । வேளாண்மைக் கல்லூரி
பன்முகக் கலை அறிவியல் கல்லூரி । சக்தி மேம்பாட்டுக் கல்வி மையம்

ஒழுக்கமே வாழ்வு

"கல்வியைப் போலவே தொழில்களும் கடவுளுக்குச் சமமானவை. படிக்கும் காலத்திலேயே தொழிலுக்கான பயிற்சியை மாணவர்கள் பெறவேண்டும்."

அருட்செல்வர் டாக்டர்.நா.மகாலிங்கம்

குமரகுரு பன்முக கலை அறிவியல் கல்லூரி

KCLAS KUMARAGURU

அடிப்படை அறிவியலிலிருந்து சமூக அறிவியல் வரையும், இலக்கியத்திலிருந்து நுண்கலைவரையும் அனைத்தையும் வழங்கி, சமூக முன்னேற்றத்திற்கான ஆய்வுகளை முன்னெடுத்து, வாழ்நாள் முழுதும் கற்றலில் ஆர்வம் கொண்டு, உலகியலின் போக்கில் தாக்கத்தை ஏற்படுத்தும் தனியாத ஆர்வம் கொண்ட இளைஞர்களை உருவாக்கும் கல்வி நிறுவனம்.

குமரகுரு தொழில்நுட்பக் கல்லூரி

150 ஏக்கர் வளாகத்தில் 6000 மாணவர்களுடனும் 400 பேராசிரியர்களுடனும் 34 ஆண்டுகளாக 'ஒழுக்கமே வாழ்வு' எனும் உயர் குறிக்கோளுடன், ஆராய்ச்சியையும் தொழில் இணைவையும் அடிப்டையாகக் கொண்டு தேசிய தர வரிசையில் முதல் நூறு நிறுவனங்களில் ஒன்றாகத் திகழ்கிறது.

கே.சி.டி. வணிக மேலாண்மைப் பள்ளி

KCT BUSINESS SCHOOL

தொழிலகங்கள் மற்றும் சமூகத்தின் முன்னேற்றத்தில் முனைப்புடன் செயல்படும் இளைய தலைமுறைக்கான தலைவர்களை உருவாக்கும் இந்தியாவின் முதல் 100 நிறுவனங்களில் ஒன்றாகும் கல்வி, மனித வளம், மாணவர்கள் சேவை, ஐ.டி. தொழில்நுட்பம், தொழிலினைவு, சமூக பங்களிப்பு போன்றவைகளில் மிகுந்த ஈடுபாட்டுடன் செயல்படும் இணையற்ற நிறுவனம்.

குமரகுரு வேளாண்மைக் கல்லூரி

KUMARAGURU institute of agriculture

தொழில்நுட்பம் மூலமாக வேளாண்மை உற்பத்தியைப் பெருக்கி, வேளாண்மையைத் தற்சார்புத் தொழிலாக மாற்றுவதற்குரிய வேளாண்மைக் கல்வியை, கிராமப்புற மாணவர்களுக்கு வழங்குவதை நோக்கமாகக் கொண்ட நிறுவனம்.

ஆராய்ச்சி அமைப்புகள்

மாணவர் ஆராய்ச்சிகள்

iQube Innovate · Incubate · Incorporate

GARAGE

re KCT'S PLATFORM FOR RESEARCH & EXPLORATION

தொழிலக ஆராய்ச்சிகள்

KUMARAGURU KC.IRI CENTRE FOR INDUSTRIAL RESEARCH & INNOVATION

TECHNOLOGY VISION 2020 TIFAC MISSION REACH

FORGE போர்ஜ்

கே.சி.டி.யின் ஒர் அங்கமான 'போர்ஜ்' வளர்ந்து வரும் நவீனத் தொழில்நுட்பத்தையும், கணினி அறிவியலையும் இணைத்து ரோபோட் தானியங்கிஇயந்திரங்களையும் செயற்கை அறிவூட்டல் கருவிகளையும், டிஜிட்டல் வணிகத்தையும் வளர்த்தெடுத்துப் பல்வேறு தொழில் துறைகளிலும் இந்த நுண்ணறிவுப் பயன்பாட்டைக் கொண்டுசெல்லும் நோக்கில் செயல்படுகிறது.

குமரகுரு கல்வி வளாகம்
சரவணம்பட்டி
கோயம்புத்தூர்
0422 2661100
kct.ac.in
kctbs.ac.in
kclas.ac.in
kia.ac.in

அன்புடன்...

வணக்கம்,

சித்திரை தமிழ்ப் புத்தாண்டு பிறந்துவிட்டது. மனதை வசப்படுத்தும் இயற்கை எழில் மிகுந்திருத்தலால் வசந்தகாலம் என்ற சிறப்பித்துச் சொல்லப்படும் இந்தக் காலத்தில்தான், வைகாசி விசாகத்தன்று தமிழ்க் கடவுளாம் முருகப் பெருமானின் திருஅவதாரம் நிகழ்ந்தது. எனவே, முருகன் சிறப்பிதழாக வெளிவந்திருக்கும் இந்த இதழில், ஆற்றுப்படை அழகன்; தணிகைமலைக் குமரன் கட்டுரைகளுடன் ஆறுமுகப் பெருமானைப் பற்றிய அபூர்வ தகவல்களும் இடம் பெற்றிருக்கின்றன.

'சக்தி களஞ்சி'யத்தில், இந்தியாவின் இதிகாச நாயகர்களான ராமனும் கிருஷ்ணனும் வெறுமனே கற்பனை பாத்திரங்கள் அல்ல, இந்த மண்ணில் பிறந்து மகிமை சேர்த்தவர்கள்தான் என்பதை வானியல் சான்றுகளுடன் விவரிக்கும் கட்டுரையும், தமிழ்மொழியின் தொன்மைச் சிறப்பை எண்ணற்ற சான்றுகளுடன் விளக்கிக் கூறும் கட்டுரையும் தமிழர்க்கு பெருமை சேர்க்கின்றன.

ஆலயங்களில் நடைபெறும் திருவிழாக்களில், தேர்த்திருவிழா ஊர்மக்களை ஒன்றிணைக்கும் சிறப்புத் திருவிழாவாகும். அதிலும் குறிப்பாக திருவாரூர்த் தேர்த்திருவிழா பற்றி சொல்லவே வேண்டாம். கடல் போல் மிக பிரமாண்டமாக அமைந்திருப்பதால் 'ஆழித்தேர்' என்று சிறப்பித்து அழைக்கப்படும் ஆழித்தேரோட்டம் பற்றிய அட்டைப்படக் கட்டுரை, நேரில் பார்த்தது போன்ற அனுபவத்தை ஏற்படுத்தவே செய்யும்.

விடுதலை வேள்வியில் ஆண்கள் மட்டுமல்ல, எண்ணற்ற வீராங்கனைகளும் தங்களை ஆகுதியாக அர்ப்பணித்துக்கொண்டது வரலாறு. அவர்களுள் குறிப்பிடத்தக்க ஒருவர் பிரீத்திலதா வதேதார். சிட்டகாங் ஆயுதக் கிடங்கை கைப்பற்றியதில் பெரும் பங்கு வகித்தவர். அவருடைய பிறந்த தினத்தை முன்னிட்டு இதழில் இடம் பெற்றிருக்கும் கட்டுரை பெண்குலத்துக்குப் பெருமை சேர்க்கும் என்பது உறுதி.

மேலும் தெய்வ மூலிகைகள், அனுபவ மருத்துவம், சாதனைப் பெண்களுடன் நேர்காணல் என்று புதிய பகுதிகளும் இந்த இதழில் இடம்பெற்றிருக்கின்றன.எப்போதும்போல் வாசகர்களின் அன்பும் ஆதரவும் கிடைக்கும் என்ற நம்பிக்கையுடன்...

பொறுப்பாசிரியர்

எஸ்.கே
க.சதீஷ்குமார்



'திருவாரூர்த் தேரழகு' என்றொரு வழக்கு மொழி உண்டு. 'திருவாரூரில் பிறக்க முக்தி' என்ற பெருமைக்கு உரிய திருவாரூர்த் தலத்தில் ஆழித் தேர் மட்டும்தானா அழகு? எல்லாமே அழகின் பிறப்பிடம்தான்; அருளின் இருப்பிடம்தான்.

இந்த ஊரின் பெயரையும் அங்கு வீற்றிருக்கும் இறைவனின் பெயரையும் கேட்கும் எவருமே பித்தாகிவிடுவார்களாம்!

அதனால்தான் அப்பர்பெருமான்,

'முன்னம் அவன் நாமம் கேட்டாள்' என்று தொடங்கும் பாடலில் 'பின்னை அவன் ஆரூர் கேட்டாள்; பெம்மான் அவனுக்கே பிச்சியானாள்' என்று பாடியிருக்கிறார்.

அத்துடன் அவர் நின்றுவிடவில்லை. அதற்கும் மேலாக திருவாரூரின் தொன்மைச் சிறப்பினை இப்படிப் பாடியிருக்கிறார்:

'மாடமொடு மாளிகைகள் மல்கு தில்லை
மணி திகழும் அம்பலத்தே மன்னிக் கூத்தை
ஆடுவான் புகுவதற்கு முன்னோ பின்னோ
அணியாரூர் கோயிலாக் கொண்ட நாளே'

என்று வியந்து பாடியிருக்கிறார். சைவர்களுக்குக் கோயில் என்றாலே சிதம்பரம் தான். அந்த சிதம்பரத்து பொன்னம்பலத்தில் கூத்தன் ஆனந்த நடனம் ஆடுவதற்கு முன்பே இந்தத் தலம் தோன்றிவிட்டதாம்!

சப்த விடங்கத் தலங்களுள் முதன்மையான தலம் இந்தத் திருத்தலம். முசுகுந்த சக்கரவர்த்தி, தான் இந்திரனிடமிருந்து பெற்று வந்த சப்த விடங்க மூர்த்திகளில், இந்திரனால் தினமும் வழிபடப் பெற்ற வீதிவிடங்க மூர்த்தியை பிரதிஷ்டை செய்த தலம் திருவாரூர்த் திருத்தலம். இந்தத் தலத்தில் பாடல் பெற்ற இரண்டு கோயில்களான, அரநெறி (அசலேசம்) மற்றும் மூலவராகத் திகழும் புற்றிடங்கொண்ட ஈசனின் பூங்கோயில் சேர்ந்தே தியாகராஜர் திருக்கோயில் என்று அழைக்கப்படுகிறது.

ஆழியிலே தோன்றிய அலைமகளுக்கு, ஆரூர் ஈசன் அருள்புரிந்ததற்கு நன்றி

ஆழித்தேர் வித்தகனை ஆரூரில் கண்டேனே..!

கமலாலயத்தின் கதை...

திருமகள் கடலரசனின் மகளாக வளர்ந்து வந்தபோது, திருமால், மதுகடைடபர்கள் என்ற இரண்டு கொடிய அரக்கர்களை வதம் செய்த தகவல் கேட்டு, அவரையே மணந்துகொள்ள வேண்டும் என்பதற்காக, இந்தத் தலத்துக்கு வந்து திருமூலட்டானேஸ்வரராகிய வன்மீகநாதரை வழிபட்டு வேண்ட, ஐயனும் அப்படியே வரம் அருளினார். தொடர்ந்து, திருமகள் இந்தத் திருத்தலத்தில் அமைந்திருக்கும் திருக்குளம், தன் பெயரால் கமலாலயம் என்று வழங்கப்படவேண்டும் என்று வரம் கேட்டாள். ஐயனும் அப்படியே அருள்புரிய, இந்தத் திருக்குளத்துக்குக் கமலாலயம் என்ற பெயர் வழங்கலாயிற்று.

செலுத்துவதே போல், அந்த ஆழியே தேராக வந்துவிட்டதோ என்று சொல்லும்படி, மிகப் பிரமாண்டமாக அமைந்ததுதான் திருவாரூர்த் தேர். அதனால்தான் திருவாரூர்த் தேர், ‘ஆழித்தேர்’ என்ற சிறப்பினைப் பெற்றது போலும்!

தேரில் திக்பாலகர்களின் ஓவியங்களுக்கு நடுவே அமைந்துள்ள திருவாயில் வழியாகத் தியாகேசனின் தரிசனம் காணக் கிடைக்காத அற்புதத் திருக்காட்சி!

சின்னஞ்சிறு மணிகள் கிண்கிணியென்று ஒலியிசைக்க, அலங்காரத் துணி உருளைகள், வசந்தகாலத் தென்றலின் தாலாட்டில் மெல்ல மெல்ல அசைந்தாட, சிவப்பு, மஞ்சள் நிறக் கொடிகள் காற்றினில் படபடவென்று பறந்தபடி பரமனின் புகழினைப் பாட, பறையொடு வெண்சங்கும் ஒலிக்க ஆழித்தேர் அசைந்து வருவதை திருநாவுக்கரசர் தன் பாடல் வரிகளில் அழகாகக் கூறியிருக்கிறார்;

“போழ் ஒத்த வெண் மதியம் சூடிப் பொலிந்து இலங்கு
வேழத்து உரிபோர்த்தான் வெள்வளையாள்தான் வெருவ
ஊழித்தீ அன்னானை ஓங்கு ஒலிமாப் பூண்டது ஓர்
ஆழித்தேர் வித்தகனை நான் கண்டது ஆரூரே!”

திருநாவுக்கரசர் தம்முடைய தேவாரப் பதிகத்தில், ‘ஆழித்தேர் வித்தகனை நான் கண்டது ஆரூரே!’ என்று பாடி இருப்பதி லிருந்து, திருவாரூரில் கி.பி. 5-6 ஆம் நூற்றாண்டுக்கும் முன்பிருந்தே தேர்த் திருவிழா நடைபெற்று வந்திருப்பதை நாம் தெரிந்துகொள்ளலாம். கதிரவன் கீழ்வானில் உதயமாகும்

காலைப் பொழுதில் கிழக்கு வீதியில் புறப்படும் தேரானது தெற்கு வீதியைக் கடந்து, கமலாலய திருக்குளத்தின் வழியாக மேற்கு வீதிக்குச் செல்லும். தியாகராஜ பெருமான் ஆலயத்துக்கும், ஆழித்தேரின் கம்பீரத்துக்கும் ஈடுகொடுப்பதைப் போலவே மிகச் சிறப்பாக அமைந்திருக்கும் கமலாலய திருக்குளத்தின் நீரலைகளில் பிரதிபலிக்கும் தேரின் அழகைக் காண நமக்கு இரண்டு கண்கள் போதாது என்பது முற்றிலும் உண்மை.

ஆழித்தேர் வரலாற்றுக் குறிப்புகள்:

1748-ஆம் ஆண்டு ஆழித் தேரோட்டம் நடந்தது பற்றிய விவரம் தஞ்சை சரஸ்வதி மகால் நூலகத்தில் உள்ள ஆவணங் களிலிருந்து தெரிய வருகிறது. மேலும் 1765 -ஆம் வருடம் தஞ்சையை ஆட்சி செய்த மராட்டிய மன்னர் இரண்டாம் துளஜா, ஆழித் தேரோட்டத்தில் கலந்துகொண்டது பற்றிய குறிப்புகளும் உள்ளன. முற்காலத்தில் 10,000-த்துக்கும் மேற்பட்ட பக்தர்களால் தேர் இழுத்துச் செல்லப்பட்டதாகச் சொல்கிறார்கள். அப்போது தேருக்கு பத்து சக்கரங்கள் இருந்தன. திருச்சி பாரத மிகுமின் நிறுவனத்தினர், ஆழித் தேரில் இரும்பு அச்சுகள், சக்கரங்கள், பிரேக் போன்ற சாதனங்களைப் பொருத்தினார்கள். 10 சக்கரங்களுக்கு பதிலாக நான்கே சக்கரங்கள் பொருத்தப்பட்டன. இந்த மாற்றங்களால் இப்போது மூவாயிரம் பக்தர்கள் இழுத்தாலே போதும், தேர் நகர ஆரம்பித்துவிடும்.

அலங்கரிக்கப்படாத நிலையில் தேரின் உயரம் 30 அடி. உச்சி விமானம் வரை துணி போன்ற தேர்ச் சீலைகளால் அலங்கரிக்கும் பகுதி 48 அடி. விமானத்தின் உயரம் 12 அடி. தேரின் கலசம் 6 அடி. ஆக, தேரின் மொத்த உயரம் 96 அடி. இரும்பு அச்சுகள், சக்கரங்கள் உள்பட அலங்காரமற்ற நிலையில் மரத் தேரின் எடை சுமார் 220 டன். தேர்ச் சீலைகளும், பனஞ்சப்பை களும், மூங்கில்களும் பயன்படுத்தப்பட்டு, அலங்கரிக்கப்பட்ட நிலையில் தேரின் எடை சுமார் 300 டன். ஆழித்தேர் நான்கு நிலைகளையும், பூதப்பார், சிறுஉறுதலம், பெரிய உறுதலம், நடகாசனம், விமாசனம், தேவாசனம், சிம்மாசன பீடம் என்ற ஏழு அடுக்குகளையும் கொண்டதாக உள்ளது. எண்கோண வடிவத்தில் அமைந்திருக்கும் இந்தத் தேரை இழுத்துச் செல்லும் சிற்ப குதிரைகளின் நீளம் 32 அடி. உயரம் 11 அடி.

சுமார் 400-க்கும் மேற்பட்ட சிற்பங்கள் தேரில் காணப்படுகின்றன. திருவிளையாடல் புராணம், சிவபுராணம், நாயன்மார்கள் வரலாறு போன்றவற்றை சித்திரிக்கும் வகையில் அந்தச் சிற்பங்கள் காணப்படுகின்றன. ஆழித்தேர் ஒரு வீதியிலிருந்து மற்றொரு வீதிக்குத் திரும்புவதற்கு 8 முதல் 10 இரும்பு பிளேட்டுகளை சிறு வளைவான வரிசையில் வைத்து, அந்த பிளேட்டுகளின் மீது தேர்ச் சக்கரங்கள் ஏறித் திரும்பும் காட்சி அதியற்புதமான காட்சியாக இருக்கும்.

ராமனும் கிருஷ்ணனும்
கற்பனை பாத்திரங்களா..?

இதிகாச நாயகர்களான ராமனும் கிருஷ்ணனும் வால்மீகி மற்றும் வியாசரின் கற்பனை பாத்திரங்கள் அல்ல. அவர்கள் இந்த பூவுலகில் தோன்றியது உண்மைதான் என்றும், அவர்களுடைய காலம் எப்போது என்பதையும், நா.மகாலிங்கம் அவர்கள் ஓம்சக்தி 1984 ஏப்ரல் இதழில் விளக்கியுள்ள ஆராய்ச்சிபூர்வமான கட்டுரை இங்கே சக்தி களஞ்சியமாக...

பொறுப்பாசிரியர்

இன்று விண்வெளி விஞ்ஞானம் வேகமாக வளர்ந்திருக்கிறது. விண்வெளி ஆராய்ச்சிக்கு வேண்டிய நவீன வசதிகள் கொண்ட விஞ்ஞானக் கூடங்கள் ஆங்காங்கே ஏற்பட்டு இருக்கின்றன. மனிதன், சந்திரனுக்கும், செவ்வாய்க்கும் கூடச் செல்கிறான். ஆனால், விஞ்ஞான வசதிகள் இல்லாத அந்த நாளிலேயே, தமிழன் வானவெளி ஆராய்ச்சியில் வல்லுநனாக இருந்தான். அன்று அவன் கண்ட வான ஆராய்ச்சி அடிப்படையில்தான் இன்று விண்வெளி விஞ்ஞானம் விரிவடைந்து கொண்டிருக்கிறது.

வானத்தில் இருந்த நட்சத்திரக் கூட்டங்களை இருபத்தியேழு நட்சத்திர மண்டலங்களாகப் பிரித்துக் கொண்டு, ஒரு நட்சத்திர மண்டலத்திலிருந்து இன்னொரு நட்சத்திர மண்டலத்துக்கு, சூரியன் நகர்வதற்கு ஆயிரம் ஆண்டுகள் ஆகின்றன என்று துல்லியமாகக் கணக்கிட்டு இருக்கிறார்கள்.

சூரியன் பரணி நட்சத்திரத்திலிருந்து புறப்பட்டு மீண்டும் பரணி நட்சத்திரத்திற்கு வந்து சேர்வதற்கு 27,000 ஆண்டுகள் ஆகும் என்று அந்த நாளிலேயே வான சாத்திர நிபுணர்கள் கணக்கிட்டுவிட்டார்கள்.

இந்தக் கணக்கைக் கண்டுபிடித்த வான சாத்திரிகள், வைவஸ்வத மனு என்கிற இந்திய மன்னனின் அரசவையில் அமைச்சர்களாக இருந்தவர்கள். இவர் காலம் கி.மு.8,756 என்று இப்போது கண்டுபிடித்திருக்கிறார்கள். சேக்கிழார் இவரைத் தொன்மனு என்று சிறப்பித்துப் பாடுகிறார்.

இந்தக் கணக்கு, நமக்கு வரலாற்று இருளில் ஓர் அருங் கைவிளக்குப் போல அமைந்துவிட்டது. ஏராளமான வரலாற்று நாயகர்களின் காலத்தைக் கணக்கிட உதவுகிறது.

ராமனும், கிருஷ்ணனும் இதிகாச கற்பனை நாயகர்கள் அல்ல. இந்த நாட்டை ஆண்ட மன்னர்களில் மிக முக்கியமானவர்கள் என்பதையும் அறிய முடிகிறது. ராமர், கிருஷ்ணர் ஆகிய இதிகாச புருஷர்களான மன்னர்களின் காலத்தையும், ராவணனின் காலத்தையும்கூட கண்டுபிடிக்க முடிகிறது.

கி.மு. 4,400 -ஆம் ஆண்டில் ராமர் பிறந்திருக்கிறார். கி.மு.3,200 -ஆம் ஆண்டில் கிருஷ்ணர் பிறந்திருக்கிறார். கி.மு.1,500-ஆம் ஆண்டில் ஆதிசங்கரர் பிறந்திருக்கிறார் என்று தெளிவாகத் தெரிந்து கொள்ள முடிகிறது. இதை எப்படித் தெரிந்துகொள்ள முடிகிறது? ராமாயணத்திலும், மகாபாரதத்திலும், ஆதிசங்கரர் வரலாற்று நூலிலும், அவர்கள் பிறந்தபோது சூரியன் எந்த நட்சத்திரத்தில், எந்த பாதத்தில் இருந்தான் என்று தெளிவாகக்

சக்தி களஞ்சியம்

நா.மகாலிங்கம்

குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதை வைத்து வான சாத்திரக் கணக்கைக் கொண்டு ஆராய்ந்தால் ராமர், கிருஷ்ணர், ஆதிசங்கரர் தோன்றிய காலத்தைத் திருத்தமாகக் கணக்கிட்டுக் காண முடிகிறது.

ராமனும் கிருஷ்ணனும் ஆண்ட காலத்தில், அவர்கள் வழிபட்ட கடவுளாக சிவபெருமான் இருந்திருக்கிறார்.

காலத்தால் ராமனும் கிருஷ்ணனும் கடவுளானது போல, ராமனும், கிருஷ்ணனும் வாழ்ந்த காலத்தில், அவருக்கு முன் சக்கரவர்த்தியாக இருந்த சிவன், நாளடைவில் சிவபெருமானாக வழிபடப்பட்டு இருக்கிறார். சிவன், ஞான சித்தனாக இருந்ததுடன் மன்னராகவும் இருந்திருக்க வேண்டும். சக்கரவர்த்தி தட்சன் மகளைச் சிவன் திருமணம் புரிந்துக் கொண்டதிலிருந்து இதை உணரமுடிகிறது என்று வீரசைவ ஞானிகள் கருதுகிறார்கள்.

சிவன், சக்கரவர்த்தி தட்சன் மகளைத் திருமணம் செய்துகொண்ட காலத்தில் சூரியன் இந்த நட்சத்திரத்தில், இந்த பாதத்தில் இருந்தான் என்று சமஸ்கிருத சிவ புராணத்தில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

அதைக் கொண்டு சிவன் திருமணம் செய்து கொண்டது கி.மு.17,000-ஆம் ஆண்டில் என்று கணக்கிட்டிருக்கிறார்கள்.

அதேபோல, வானசாத்திரத் தின் துணையால், ராமனின் காலம் 6,400 ஆண்டுகளுக்கு முற்பட்டது என்று உறுதிப்படுத்தி இருக்கிறார்கள். ராமனுக்கு இளவரசுப் பட்டம் கட்ட, பாரத நாட்டு அரசர்களை எல்லாம் கூட்டி, தசரதர் ஆலோசனை நடத்துகிறார் என்ற செய்தி வால்மீகி ராமாயணத்தில் வருகிறது. இந்த ஆலோசனை சபையில் தமிழ் மன்னனான பாண்டியனும் கலந்துகொள்கிறான். அவனுடைய ஆலோசனையை யும் தசரதர் கேட்கிறார்.

அனுமன், சீதையைத் தேடி இலங்கைக்குப் போகிறான். அவனுக்குத் தென்திசையில் செல்லும் வழிகள் பற்றி விளக்கும்போது, "தமிழ்நாட்டின் இயற்கை அழகிலும், தமிழின் இனிமையிலும் தமிழ்ப் பண்பாட்டிலும் மயங்கி நின்றுவிடாதே" என்று அவனை எச்சரித்து அனுப்பியதாக வால்மீகி ராமாயணத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

ராவணன் சபையில், கும்பகர்ணனும் ராவணனும் உரையாடுகிறார்கள். இந்த உரையாடலைப் பற்றி, சொல்லும் ரிஷி, ராவணனும், கும்பகர்ணனும் பேசிக் கொண்ட மொழி 'தமிழ்' என்று தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறார்.

ராமன் வாழ்ந்த காலத்தி லேயே, 6,400 ஆண்டுகளுக்கு முன்னதாகவே, தமிழ்ப் பண்பாடு மிக உயர்ந்த நிலையில் இருந்தது என்பதைப்பற்றி வால்மீகி பேசவேண்டுமானால் தமிழ்ப் பண்பாடு அந்த அளவிற்கு வளர, அதற்கு எத்தனை ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் அது தோன்றியிருக்க வேண்டும்!

குறைந்தபட்சம், தமிழ்ப் பண்பாடு பத்தாயிரம் ஆண்டுகளுக்கு முன்னதாகவே சிறப்பாக இருந்திருக்க வேண்டும் என்பதை இதன்மூலமாகத் தெரிந்துகொள்ளலாம்.

நவீன வானசாத்திரம், நமது புராதனத் தமிழ்ப் பண்பாட்டின் தொன்மையை உலகம் நன்கு தெரிந்து கொள்வதற்கு உதவி செய்திருக்கிறது

வானசாத்திரத்தின் மூலமாகக் கணித்திருக்கும் இந்த உண்மைகளை யாரும் கற்பனை என்று ஒதுக்கித் தள்ளிடமுடியாது. ●

நா.மகாலிங்கம்

குமரிக் கண்டமும் சிந்துவெளியும்...

ஐரோப்பாவில் குமரிக்கண்டத் தமிழர்கள் மூன்று வகைகளில் குடியேறி இருக்கிறார்கள்.

வடக்கு ஆப்பிரிக்கா மூலமாக, பலர் குடியேறி இருக்கிறார்கள். மேற்கு ஆசியாவில் இருந்தும் பலர் குடியேறி இருக்கிறார்கள்.

வேறு சிலர் கடல் மார்க்கமாகச் சென்று உலகின் பல பகுதிகளில் குடியேறி இருக்கிறார்கள். ஐரோப்பாவில் குமரிக்கண்ட மக்கள் எப்படிக் குடியேறினார்கள்? எங்கே குடியேறினார்கள்? என்னென்ன பெயர்களைப் பெற்றார்கள் என்பதைப் பற்றியெல்லாம் சாத்தூர் சேகரன் குமரிக் கண்டம் என்ற தமது ஆய்வு நூலில் ஆதாரபூர்வமாக விளக்கி இருக்கிறார்.

ஐரோப்பாவில் முதலில் குடியேறிய குமரிக்கண்டத் தமிழர்களை செல்டிக் மக்கள், பாஸ்க் மக்கள், எத்ருஸ்கள் மக்கள், மத்திய தரைக்கடல் மக்கள் என்று நாலு வகையாகப் பிரித்திருக் கிறார்கள்.

கிரீட் தீவிலிருந்து குடிபெயர்ந்து கிரேக்கப் பகுதிகளில் குடியேறிய குமரிக்கண்ட மக்கள் கிரேக்கர் ஆயினர்.

மேற்கு ஆசிய ஹிடைட் பகுதிகளி லிருந்து குமரிக்கண்ட மக்கள் ஐரோப்பா வில் பல இடங்களில் குடியேறினார்கள்.

இன்றைக்கு 2 ஆயிரத்து 500 ஆண்டு களுக்கு முன்னால் ஆயுதங்களுடன் சிற்சில ஐரோப்பியப் பகுதிகளை வென்று அவற்றில் குமரிக் கண்ட மக்கள் குடியேறி இருக்கிறார்கள்.

மேற்கு ஆசியாவில் குடியேறிய குமரிக்கண்ட மக்கள் பலர். இவர்களில் பலர் வட இந்தியாவில் இருந்து, மேற்கு ஆசியா, ஐரோப்பா முதலிய நாடுகளுக்குச் சென்றவர்கள்.

கடைசியாகச் சென்ற ஐரோப்பியர் இவர்கள்தான். ஆதலின் இவர்கள் மொழியிலும் ஏராளமான நல்ல தமிழ்ச் சொற்கள் இருக்கின்றன.

`கோன்' என்ற சொல் அரசனைக் குறிப்பிடும் சொல். கோன் என்ற சொல்லே மேற்கு ஆசியாவில் `கான்' என்று திரிந்து வழங்கி வருகிறது.

ஜெர்மன் மொழியில் இதே சொல் `கொனிக்' என்று திரிந்து வழங்கி வருகிறது.

ஆங்கில மொழியில் `கிங்' (KING) என்று திரிந்து ஒலிக்கிறது.

`தாரகை' என்ற சொல் `விண்மீன்' என்ற பொருளில் தமிழில் வழங்கப்படுகிறது.

'தாரா' என்று வட இந்தியாவில் வழங்கப்படுகிறது.

`சித்தாரா' என்று அரபி மொழியில் வழங்கப்படுகிறது.

`ஸ்டெல்லா' என்று லத்தீன் மொழியில் வழங்குகிறது.

`ஸ்டார்' என்று ஆங்கிலத்தில் வழங்கப்படுகிறது.

இந்தோனேசியா, மலேசியா, தாய்லாந்து போன்ற நாடுகளில் நல்ல தமிழ்ச் சொற்கள் ஆயிரக்கணக்கில் இப்போதும் வழக்கத்தில் இருக்கின்றன. திரிந்த நிலையில் பல தமிழ்ச் சொற்களும் வழக்கத்தில் இருக்கின்றன.

ஒரு வேடிக்கை என்னவென்றால் மரக்கப்பலை 'மரக்கப்' என்று அரேபிய மொழியும் கூறுகிறது. தமிழ்ச் சொற்கள் எப்படி எல்லாம் சிதைந்து இருக்கின்றன என்பதையும், தமிழின் கிளை மொழிகள்தான் உலகமொழிகள் என்பதையும் சாத்தூர் சேகரனின் நூல்கள் மூலமாக எளிதில் தெரிந்துகொள்ளலாம்.

இந்தோனேசியா, மலேசியா, தாய்லாந்து போன்ற நாடுகளில் வாழும் மக்களின் பெயர்கள் திரிந்த

தமிழாகவே இருக்கின்றன.

ஊர்ப் பெயர்கள், ஏன் தெருப் பெயர்கள் கூட நல்ல தமிழாகவோ, திரிந்த தமிழாகவோ இருப்பதைப் பார்க்கலாம்.

பெருமாள் சுல்தான், லீலா சுல்தான் என்றுகூட இசுலாமிய சுல்தான்களின் பெயர்கள் இருக்கின்றன என்று சாத்தூர் சேகரன் ஆதாரபூர்வமாக விவரித்தபோது நான் வியந்தேன்.

இந்தோனேசிய தலைவர் சுகர்னோவினுடைய இசுலாமிய மனைவியின் பெயர் இரத்னா தேவி என்பது நமக்கு தெரிந்த செய்திதான்!

கப்பல், மரக்கப்பல் என்பதை பாலினேஷிய மக்கள் `கெப்பல்' என்றும் `மரக்கப்' என்றும் வழங்குகிறார்கள்.

இன்றைய தாய்லாந்து மன்னரின் சிறப்புப் பெயர் சுழலும் கரன். இதற்கு வாளை வேகமாகச் சுழற்றும் வீரன் என்று பொருள்.

அரசரின் மனைவியின் பெயர் சீர்கீர்த்தி.

தோண்டத் தோண்ட பொன்னும் மணியும் கிடைப்பதுபோல ஆராய ஆராய தமிழுக்குச் சாதகமான செய்திகளே மிகுந்துள்ளன.

எனவே குமரிக்கண்ட மாநாடு இப்படிப்பட்ட வரலாற்றுச் செய்திகளை வாரி வாரி வழங்குகிறது. குமரிக்கண்ட ஆய்வின் ஒவ்வொரு துளியும் தமிழுக்குப் பெருமை அளிப்பதாக இருக்கிறது; அதன் தொன்மையைக் காட்டுகிறது.

இரண்டாம் நாள் மாநாடாக சிந்துவெளி மாநாடு நடைபெறுகிறது.

நூற்றுக்கு மேற்பட்ட உள்நாட்டு, வெளிநாட்டு அறிஞர் பெருமக்கள் சிந்துவெளி நாகரிகம் தமிழ் நாகரிகமே என்று அறுதியிட்டு கூறி இருக்கின்றனர்.

சில அறிஞர் பெருமக்கள் தக்க காரணமோ சான்றுகளோ தராமல், மறுக்கின்றனர். இதை ஏற்றுக்கொள்ள முடியாது.

இருப்பினும் இன்று வேர்ச்சொல் அகரமுதலித் திட்ட இயக்குநர், இரா. மதிவாணன், சிந்துவெளி முத்திரைகளைத் தமிழ் என்று தெளிவாகப் படித்துக்காட்டி இருக்கிறார். யாராலும் மறுக்கமுடியாதபடி சிந்துவெளியில் வழங்கிய மொழி தமிழ்தான் என்றும், சிந்துவெளி எழுத்துகள் தமிழ் மொழியின் ஆதி வரிவடிவங்கள் என்றும் நிரூபித்துக் காட்டி இருக்கிறார்.

நான், வேர்ச்சொல் அகரமுதலித் திட்ட இயக்குநர் இரா. மதிவாணன் கண்டுபிடிப்பைச் சரிபார்க்கும்படி சாத்தூர் சேகரனிடம் கேட்டுக் கொண்டேன்.

அவரும் 400-க்கும் மேற்பட்ட சிந்துவெளி முத்திரைகளைச் சரிபார்த்து `தமிழ் எழுத்துகளே'



என்றும், டாக்டர் இரா. மதிவாணன் ஆய்வுகள் அசைக்க முடியாத சான்றுகளுடன் இருக்கின்றன என்றும் கூறினார். ஒருநாள் சாத்தூர் சேகரன் உலக எழுத்துகள் அடங்கிய ஒரு கோப்புடன் என்னைச் சந்தித்தார்.

சிந்துவெளி எழுத்துகளின் தொடர்ச்சியே தமிழ் வட்ட எழுத்தும், தமிழ் பிராம்மி எழுத்தும் ஆகும். குமரிக்கண்ட காலத்திலேயே தமிழுக்குச் சில வகை எழுத்து வரிவடிவ வகைகள் இருந்திருக்க முடியும் என்று பல எழுத்துகளை எழுதிக் காட்டினார்.

திருமூலர் தமிழ் 51 எழுத்துகளைக் கொண்டது என்று கூறி இருக்கிறார்.

தொல்காப்பிய இலக்கணமோ தமிழ் எழுத்துகள் உயிர் எழுத்துகளும் மெய் எழுத்துகளும் ஆக 33 எழுத்துகள்தான் என்று சொல்கிறது. மொழி இயல் நிபுணர்களும் போனிம்ஸ் ஒலியன்கள் உலக மொழிகளுக்கெல்லாம் முப்பத்து மூன்றுதான் என்று சொல்லி இருக்கிறார்கள்.

எனவே உலக எழுத்துகள் எல்லாம் தமிழ் எழுத்துகளில் இருந்துதான் தோன்றி இருக்கின்றன என்பதைத் தகுந்த ஆதாரத்துடன் சாத்தூர் சேகரன் கூறினார்.

அவர் அதற்குச் சான்றாக எடுத்துக்காட்டி இருக்கும் எழுத்துகளைப் பாருங்கள். தமிழ் சிந்துவெளிப் பகரம், வட்ட எழுத்துப் பகரம் இந்த வடிவங்களையே உலக மொழிகள் பக்கவாட்டு வசமாகவோ வலம் இடமாகவோ, கோடுகளைச் சாய்த்தோ தம் எழுத்தை உருவாக்கியுள்ளன.

இங்கு குறிக்கப்பட்டுள்ள எழுத்துகள் யாவும் சிந்துவெளி எழுத்து. தமிழ் வட்ட எழுத்து, தமிழ் பிராம்மி எழுத்து இவற்றின் திரிபே என்பதைத் தெளிவாகப் புரிந்துகொள்ளலாம்.

தமிழில் இருப்பதைத் தலைகீழாகவோ பக்கவாட்டிலோ போட்டிருக்கின்றன பிற மொழிகள். சிலவற்றில் பக்கக்கோடு, உயரக் கோடு ஆகியவை இருக்கின்றன. சில எழுத்துகள் தமிழின் வடிவங்களான `ப' போன்றன இடுங்கிக் கோணக்கோடுகளாக மாறியுள்ளன.

ஒலிப்புப் பகரம். இரட்டைத் தமிழ்ப் பகரமாகக் கூடிச் சில மொழிகளில் அமைகின்றன.

இதுபோல உலகில் உள்ள எல்லா எழுத்துகளும் தமிழில் இருந்தே தோன்றியுள்ளன என்பதற்கான சான்றுகளைச் சாத்தூர் சேகரன் வைத்திருக்கிறார். விரைவில் சாத்தூர் சேகரனின் உலக எழுத்துகளின் ஆய்வை, நூலாக வெளியிடுவதற்கும் ஏற்பாடு செய்து வருகிறேன்.

சில சான்றுகளற்ற வாதங்களால் தமிழ் மொழியையும் அதன் வளமையான இலக்கியங்களையும் அசோகன் கல்வெட்டுக் காலத்திற்குப் பின் வந்தவை என்று சொல்வது எத்தனை அறியாமை என்பது புலனாகிறது.

`ஓம் சக்தி' இதழில் திராவிடர், ஆரியர் பற்றிச் சில கட்டுரைகள் எழுதி இருக்கிறேன். எல்லாரும் தமிழர்கள்தான். ஆரியர் என்று ஓர் இனம் இருந்ததே இல்லை. ஆரியர் என்ற சொல்லை இனவழியில் பயன்படுத்துவதை ஐக்கிய நாடு மன்றம் தடை செய்து இருக்கிறது.

``யாதும் ஊரே; யாவரும் தமிழர் !'' இதுதான் உலகில் நின்று நிலைக்கப்போகிற தத்துவம்.

இந்தியா அன்று மட்டுமல்ல; என்றுமே தமிழ் இந்தியாவாகவே இருந்து வருகிறது.

நாகரிகம், பண்பாடு, கலை, இசை, நாட்டியம், சித்திரம், சிற்பம் என்று எதை எடுத்து ஆராய்ந்தாலும் எல்லாம் தமிழின் சார்பாகவே இருக்கின்றன.

இந்திய மக்களின் பெயரும் பல லட்சக்கணக்கான ஊர்களின் பெயர்களும் தமிழாகவே இருக்கின்றன என்பதைத் தகுந்த சான்றுகளுடன் சாத்தூர் சேகரன் தம் புத்தகங்களில் விளக்கி இருக்கிறார்.

தமிழும் சம்ஸ்கிருதமும் இந்திய நாட்டின் கலாசார மொழிகள்.

தமிழில் `மகள்' என்ற சொல் சம்ஸ்கிருதத்தில் `மகிளா' என்று வழங்குகிறது. `மகிளா' என்ற சொல்லே `மகிஷா' என்று இப்போது மாறி வழங்குகிறது.

தமிழ் மொழி ஒன்றுக்கு மட்டுமே ஒரு மொழி வேர்ச் சொற்கள் உண்டு. தமிழின் அரும் பெரும் நூல்களை நம் முன்னோர்கள், தமிழைத் தாய்மொழியாகக் கொள்ளாதவர்களுக்காக சம்ஸ்கிருத வைப்பு அறையில் வைத்துள்ளனர்.

டாக்டர்தசரதன்,புலவர்கன்னையன் போன்றோர் நான் பொருளாளராக இருக்கும் ஆசிய இயல் நிறுவனத்தில் ஆய்வாளர்களாக இருக்கிறார்கள். பெருமுக்கல்லில் சிந்துவெளிக்கு முற்பட்ட கல்வெட்டுகளை அவர்கள் கண்டுபிடித்திருக்கிறார்கள். இன்னும் பல அறிஞர்கள் பல புதிய கண்டுபிடிப்புகளைக் கண்டு அறிந்து வெளியிட்டு இருக்கிறார்கள்.

மறுக்க முடியாத இந்த ஆய்வுகளைத் தமிழ் மக்களுக்கும், இந்திய மக்களுக்கும், உலக மக்களுக்கும் புரியும்படி செய்ய வேண்டும் என்பது என் விருப்பம்.

குமரிக்கண்டத்தைப் பற்றியும், சிந்துவெளி நாகரிகத்தைப் பற்றியும் ஒருநாள் மாநாடு நடத்த லாம் என்றார் சாத்தூர் சேகரன்.

ஒரேநாளில் குமரிக் கண்டத்தைப் பற்றியும் சிந்துவெளிப் பற்றியும் தெளிவாக விளக்க முடியாது. ஒரு நாள் குமரிக்கண்ட மாநாடு நடத்தலாம்; மற்றொரு நாள் சிந்துவெளி மாநாடு நடத்தலாம் என்றேன்.

என்னுடைய கருத்தைச் சாத்தூர் சேகரன் ஒப்புக்கொண்டார்.

சாத்தூர் சேகரனும் மற்ற நண்பர்களும் தமிழ் மொழியின் பழைமையை நிலைநிறுத்த முயன்று வருகிறார்கள். இதற்கு இன்னும் ஆழ்ந்த ஆய்வுகள் தேவை. இன்று தமிழ் அறிஞர்கள் மத்தியில் எளிய இலகுவான தலைப்புகளில்தான் ஆய்வுகள் நடைபெறுகின்றன.

ஆழ்ந்த பொருள் பற்றியும் பழங்காலத்து சரித்திரங்கள் பற்றியும் ஆய்வுகள் செய்ய வேண்டும். இவ்வாறு ஆய்வுகள் செய்வதற்குப் பல் மொழிப் புலமை வேண்டும். சீனம், ஜப்பான், லத்தீன், கிரேக்கம், அரபி, பாரசிகம் முதலிய மொழிகளில் ஞானம் இருக்க வேண்டும். இந்த மொழிகள் எல்லாவற்றிலும் ஆழ்ந்த புலமையுடன் நடுநிலையில் இருந்து ஆய்வுகள் செய்ய வேண்டும்.



இந்த மொழிகளை எல்லாம் படிப்பதற்குத் தமிழகத்தின் பல்கலைக்கழகங்களில் வசதி இல்லை. நமது கனவை நிலைநிறுத்துவதற்குப் பெரும் முயற்சி செய்ய வேண்டும். தொடர்ந்து முயற்சிகள் செய்துகொண்டே இருக்க வேண்டும்.

அந்தத் திடமான பல்மொழிகளின் ஞானத் துடன் கூடிய முயற்சியை எதிர்காலத் தமிழ் இளைஞர்களும், இந்திய மக்களும் செய்ய வேண்டும். மறைக்கப்பட்ட இந்திய வரலாற்றை வெளிக்கொணர வேண்டும். இந்தியாவின் பண்பாடு, நாகரிகம், ஆன்மிக ஞானம், பொருளாதார வளர்ச்சி, அறிவியல் வளர்ச்சி எல்லாவற்றிலும் தமிழ் மக்கள்தான் முன்னோடி கள் என்பதைச் சரித்திரம் அறிவுறுத்துகிறது. ●

மு.அரி வர்மக்கலை மற்றும் தொல்லியல் துறையில் DMR பட்டமும் சுவடி ஆய்வு மற்றும் கல்வெட்டு இயலில் இளங்கலை பட்டமும் பெற்றவர். களரி, வர்மம், வர்ம வைத்திய முறைகள், யோகா முதலானவற்றை பயிற்றுவித்தலில் பத்தாண்டு கால அனுபவம் பெற்றவர். தமிழ்க் கலைகள் குறித்த ஆய்வுகளில் ஐந்தாண்டு கால அனுபவம் பெற்றவர். அழிந்து போகவிருந்த பல ஓலைச்சுவடிகளை படியெடுத்தும் கல்வெட்டுகள் குறித்து ஆய்வுகள் செய்தும் பல அபூர்வ தகவல்களை எடுத்துச் சொன்னவர். தொடர்ந்து தமிழகத்தின் கிராமம்தோறும் சென்று நமது போர்க் கலைகளையும் ஆதி கல்வியையும் மூலிகைகளின் பயன்பாட்டையும் பயிற்றுவிப்பதில் ஆர்வம் கொண்டவர்.

பொறுப்பாசிரியர்

ஆடாதொடை

"ஆடாதோடைப் பன்ன மையறுக்கும் வாதமுதற்
கோடாகோ டிச்சுரத்தின் கோதொழிக்கும் நாடின
மிகுத்தெ முந்தசன்னி பதின்மூன்றும் விலக்கும்
அகத்துநோய் போக்கு மறி."

அகத்தியர் குணவாகடம்

மனிதர்களுக்கு மட்டுமல்ல வனத்தில் வாழும் விலங்கினங்களுக்கும் மூலிகைகளின் பயன்பாடு தெரிந்துள்ளன. பாம்பு கடித்த கீரி, அதற்குரிய மூலிகையைத் தின்று உயிர் தப்பிக் கொள்ளும். தாவர உண்ணிகள் தேர்ந்தெடுத்து உண்ணும் உணவுகளே அதற்கு மருந்தாகவும் செயல்படும். இப்படி ஆதிகாலத்தில் இருந்தே சகல ஜீவராசிகளுக்கும் உணவாகவும் மருந்தாகவும் இருந்து வந்த மூலிகைகளின் மகத்துவத்தை ஞானிகளும் சித்தர்களும் எடுத்துக் கூற, அது மாபெரும் மூலிகை சித்த வைத்திய முறையாகவே வளர்ந்தது. அகத்திய மாமுனிக்கு வைத்தியநாதராக, மருந்தீசராக வந்திருந்து ஈசனே அருளிய வைத்திய முறையே சித்த வைத்தியம். இந்த முறையில் எல்லா நோய்களும் எந்தவித பக்கவிளைவும் இன்றி எளிய வழியில் தீர்ந்து போகும் என்பதே சிறப்பு.

ஆயிரக்கணக்கான உயிர் காக்கும் தெய்வீக மூலிகைகள் நம் நாட்டில் மலிந்து கிடக்கின்றன. அதில் நாம் முதல்முதலாக காணவிருப்பது ஆடாதொடை. அது ஏன் இந்த மூலிகை என்றால், இப்போது நிலவும் கொரானா நோய் தொற்றுச் சூழலில் இந்த மூலிகையைப் பற்றி அறிந்து கொண்டே ஆக வேண்டும் என்பதால்தான். 'ஆடாதோடைக்குப் பாடாத நாவும் பாடும்' என்ற முதுமொழிக்கேற்ப இந்த மூலிகைச் சாறு நல்ல குரல் வளத்தை அளிக்கும்.

ஆடு தொடாத இலை என்பதால் இந்தப் பெயர் உருவானது. வாசை என்றும் இதை அழைப்பார்கள். வேலிப் பயிராக இது மானாவாரியாக வளர்ந்து கிடக்கும். இந்தத் தாவரத்தின் இலை, பூ, பட்டை, வேர் எல்லாமே மருத்துவப் பயன் கொண்டவை. மாவிலை போன்று ஈட்டி வடிவில் கசப்புத் தன்மை கொண்டவை இதன் இலைகள். சூட்டைக் கிளப்பும் தன்மை கொண்டது இது. அதிகமான ஆக்சிஜனை இவை வெளியிடுவதால் பிராண மூலிகை என்றும் இவை சொல்லப்படுகிறது.

காயகல்ப மூலிகைகளில் முக்கியமானது ஆடாதொடை. சித்தர்கள் கூறியபடி இந்த மூலிகையை முறைப்படி எடுத்துக் கொண்டால் இந்த உடல் அழியாமல் நீண்ட காலம் இருந்து வரும் என்கிறது இயற்கை மருத்துவம். ஆடாதொடை ரத்தக் கொதிப்பு, மஞ்சள் காமாலை, எலும்புருக்கி நோய்களுக்கு மிகச் சிறந்த மருந்து. இது சிறந்த ஆன்டிபயாடிக் மருந்தாகவும் உதவுகிறது. அதனால் இந்த நோய்த் தொற்று காலத்தில் இந்த மருந்து மிகவும் அவசியம் எனலாம்.

இந்தச் செடியில் உள்ள வாசிசின், அராக்கிடிக், பெஹினிக், வசாக்கின், வாசினால், வாசினோன், ஆடாதோடின், கேலக்டோஸ் போன்ற வேதிப் பொருள்கள் உடலுக்கு நன்மை செய்பவை. குறிப்பாக வாசிசின் என்ற அல்கலாய்டு, நுரையீரல் பகுதியில் பரவி அதை விரிவடையச் செய்வதால் ஆஸ்துமா, நாள்பட்ட இருமல், சளி போன்ற தொல்லைகளை நீக்குகிறது. நுரையீரலை சுத்தப்படுத்தி நுரையீரல் தொற்று என்ற உயிர் போக்கும் நோயை நீக்குவதால் 'மரண மாற்று மூலிகை' என்றே ஆடாதொடை போற்றப்படுகிறது.

மூச்சுத் திணறல், வயிற்றுப் பூச்சிகள், ஜலதோஷம், கக்குவான், இருமல், வயிற்றுப் போக்கு, தொண்டை நோய்கள், ஆறாத புண்கள் என நூற்றுக்கும் அதிகமான நோய்களை குணமாக்கும் இந்த தெய்விக மூலிகை இறைவன் நமக்கு அளித்த கொடை என்றே சொல்லலாம். •

தெய்வ மூலிகைகள் 1

இந்தப் பகுதியில் நம் முன்னோர்கள் தங்களுக்கு ஏற்பட்ட சிறுசிறு உடற்பிணிகளுக்கு மேற்கொண்ட சிகிச்சை முறைகளைப் பார்க்கலாம். இந்த முறையை 'பாட்டி வைத்தியம்' என்றும், 'நாட்டு வைத்தியம்' என்றும் குறிப்பிடுவது உண்டு. இந்த வைத்திய முறையினால் பக்கவிளைவுகள் எதுவும் ஏற்படாது என்பது குறிப்பிடத்தக்கது. பத்திரிகையாளரும், இயற்கை ஆர்வலருமான எம்.மரிய பெல்சின், அனுபவ மருத்துவ முறைகளை இந்தப் பகுதியில் பகிர்ந்துகொள்கிறார்.

பொறுப்பாசிரியர்

கோடை நோய்களை தடுப்போம்

இயற்கை இனிது... நாம் வசிக்குமிடங்களில் வளரும், கிடைக்கும் காய் கனிகள், கீரைகள், மூலிகைகள் என எல்லாமே நம் உடல்நலத்துக்கு நன்மை பயக்கக் கூடியவையே. அந்த வகையில் நம்மைச் சுற்றி கிடைக்கும் இயற்கைப் பொருள்களைக் கொண்டு நோய்களைக் குணப்படுத்தும் எளிய முறைகளைப் பார்ப்போம்...

கோடை வெயில் வறுத்தெடுக்கத் தொடங்கி விட்டது. பருவகாலம் மாறும்போது நோய்களின் தாக்கமும் அதிகமாக இருக்கும். ஒவ்வொரு சூழலிலும் ஒவ்வொருவிதமான நோய் வீறுகொள்வது வாடிக்கை. அதேநேரத்தில் அந்தந்த பருவ காலங்களில் இயற்கையாக வளரும் புல், பூண்டுகள்கூட நம் நோயை தீர்க்கக்கூடியவை என்கிற உண்மை நம்மில் பலருக்குத் தெரிவதில்லை.

கோடைக் காலத்தில் வேப்பமரம் துளிர்த்து பச்சைப் பசேலென காட்சியளிக்கும். கூடவே வேப்ப மரத்தில் மஞ் சள் கலந்த வெள்ளை நிறப் பூக்கள் பூத்துக் குலுங்கும். அந்த வகையில் வேப்பிலையும், வேப்பம்பூவும் நமக்கு உணவாகவும், மருந்தாகவும் பயன்படுகின்றன. கபம், பித்தம் சம்பந்தப்பட்ட நோய்களை வேப்பம்பூ கட்டுப்படுத்தும். குடலில் தங்கியுள்ள கிருமிகளை அழிக்கும் ஆற்றல் வேப்பம்பூவுக்கு உண்டு. குறிப்பாக புற்றுநோயை உருவாக்கும் செல்களை அழிக்கும் தன்மை வேப்பம்பூவுக்கு உண்டு என்று ஆராய்ச்சிகள் தெரிவிக்கின்றன. எனவே, கோடைக் காலத்தில் அதிகமாகக் கிடைக்கும் வேப்பம்பூவை சேகரித்து, நிழலில் உலர்த்தி பயன்படுத்தலாம். இல்லையென்றால் நாட்டு மருந்துக்கடைகளில் உலர்ந்தநிலையில் கிடைக்கும் வேப்பம்பூவை வாங்கி பயன்படுத்தலாம்.

வேப்பம்பூ மருத்துவம்:

வேப்பம்பூவில் பச்சடி செய்து சாப்பிடுவது ருசியாக இருக்கும். சிறிய எலுமிச்சைப்பழம் அளவு புளியை எடுத்துக் கரைத்து அதனுடன் இரண்டு டேபிள்ஸ்பூன் வெல்லம் சேர்த்து நன்றாகக் கொதிக்கவிட வேண்டும். இதற்கிடையே 50 கிராம் அளவு வேப்பம்பூவை எடுத்து நெய்விட்டு வதக்கி கடுகு, காய்ந்தமிளகாய் சேர்த்து தாளித்து எல்லாவற்றையும் ஒன்றாகச் சேர்த்தால் பச்சடி தயார். வேப்பம்பூ ரசமும் நல்லது. புளியைக் கரைத்து, ரசப்பொடி கலந்து நன்றாக கொதிக்கவிட

வேண்டும். வேப்பம்பூவை வதக்கிச் சேர்ப்பதுடன் பருப்பு வேக வைத்த தண்ணீரைச் சேர்க்க வேண்டும். கடுகு, உளுந்தம்பருப்பு தாளித்துவிட்டு எல்லாவற்றையும் ஒன்று சேர்த்தால் வேப்பம்பூ ரசம் தயாராகி விடும். உப்பு, பெருங்காயம் கலந்து இறக்கவேண்டும். இதை உணவுக்கு முன்பாக சூப்பாகவும் பருகலாம். வாரம் ஒரு தடவை இந்த ரசத்தை சாப்பிட்டு வந்தால் வயிற்றில் உள்ள புழு, பூச்சிகள் அழியும். பசியின்மை, வயிற்றுக் கோளாறுகள் நீங்கும், செரிமான சக்தி அதிகரிக்கும். வேப்பம் பூவுடன் புளி, உளுந்தம்பருப்பு, காய்ந்த மிளகாய், பெருங்காயம், உப்பு சேர்த்து துவையல் செய்தும் சாப்பிடலாம்.

அம்மை நோய் வராமல் தடுக்க:

கோடைக் காலத்தில் வரும் நோய்களில் ஒன்று அம்மை. இந்த அம்மை நோய் வருவதற்கு முன் சில அறிகுறிகள் தென்படும். தலைவலி, தலைபாரம், தும்மல் வரும். சிலநேரம் உடல் சூடாகி காய்ச்சல் வரும். மூன்றுநாளில் கொப்புளம் கொப்புளமாக வரும். இந்த மாதிரி அறிகுறிகள் சிலருக்கு சாதாரண காய்ச்சலின் அறிகுறியாகக்கூட இருக்கலாம். எதுவாக இருந்தாலும் உடலில் சூடு அதிகரிக்காமல் பார்த்துக்கொண்டால் அம்மைநோய் வராமல் தடுக்கலாம். அரை டீஸ்பூன் வெந்தயம் அதே அளவு மிளகு சேர்த்து இரண்டையும் ஒன்றிரண்டாக தட்டிப்போட்டு தண்ணீர்விட்டு நன்றாகக் காய்ச்ச வேண்டும். இதை காலை, மாலை என மூன்று நாள்கள் அவ்வப்போது தயார் செய்து குடித்து வந்தால் அம்மை நோய் நெருங்காது.

அம்மை நோய் வராமல் தடுப்பதில் கத்தரிக்காய்க்கு முக்கிய பங்கு உண்டு. முதலில் முற்றிய கத்தரிக்காயை தீயில் சுட வேண்டும். அதன்பிறகு தேவையான அளவு காய்ந்த மிளகாயை எடுத்து தீயில் சுட்டு எடுக்க வேண்டும். இவற்றுடன் சிறிது சின்ன வெங்காயம், உப்பு சேர்த்து நன்றாகப் பிசைந்து உணவுடன் இணை உணவாக சேர்த்து வந்தால் அம்மை நோய் தாக்காது. வீட்டிலோ அல்லது பக்கத்து வீட்டில் யாருக்காவது அம்மை வந்திருந்தால் இதேபோல் கத்தரிக்காயை தீயில் சுட்டுப் பிசைந்து சாப்பிட்டால் அம்மைநோய் நெருங்காது. அந்த அளவுக்கு சக்திவாய்ந்த தடுப்பு மருந்து இது.

இதேபோல் சின்ன வெங்காயத்தை தோல் உரித்து பாதியாக வெட்டி பூமாலை போன்று கட்டி வீட்டின் உள்ளேயும் வாசல் பகுதியிலும் தொங்கவிட வேண்டும். இப்படிச் செய்தால் அம்மை நோய்க் கிருமிகளை இந்த சின்ன வெங்காய மாலை உள்ளிழுத்துக்கொண்டுவிடும்.

ஒருவேளை அம்மை நோய் நம்மை பாதித்தாலும் வேப்பங்கொழுந்துடன் மஞ் சள் சேர்த்து அரைத்து உடம்பு முழுவதும் பூச வேண்டும். அதேபோல் இந்தக் கலவையை சிறுசிறு உருண்டையாக உருட்டி சாப்பிட்டு வந்தாலும் நோய் தீவிரமடையாது. மேலும் வெள்ளைப்பூண்டினை கசாயம் வைத்து தொண்டையில் படும்படி வைத்திருந்து வாய் கொப்புளித்தாலும் அம்மை சீக்கிரம் குணமாகிவிடும். துளசி, இஞ்சி, ஓமம் சேர்த்து நீர் விட்டு அரைத்து உடம்பில் தடவி வந்தால் காய்ச்சல் தணிவதுடன் அம்மை நோயின் தீவிரம் குறையத் தொடங்கும். துளசி இலைகளுடன் குங்குமப்பூ சேர்த்து அரைத்து சாப்பிட்டு வந்தால் அம்மை நோயின் பாதிப்பு சீக்கிரம் குறைந்துவிடும். வெயில் காலத்தில் உடல் சூடு அதிகரிக்காமல் பார்த்துக் கொள்ளவேண்டும். இளநீர், தர்பூசணி, வெள்ளரிபழம், நுங்கு, பதநீர் போன்றவற்றை அடிக்கடி எடுத்துக்கொள்வது நல்லது. நெல்லிக்காய், எலுமிச்சை, ஆரஞ்சு போன்ற வைட்டமின் சி அதிகம் உள்ள பழங்களையும் சாப்பிடலாம். சளி, காய்ச்சல் பிரச்னைகள் வராமல் பார்த்துக் கொள்வதுடன் அந்தப் பிரச்னைகளுக்கு உரிய மருத்துவம் எடுத்துக் கொள்ள வேண்டும். இந்த வழிமுறைகளைப் பின்பற்றினால் எந்த நோயும் வராமல் பார்த்துக் கொள்ளலாம். •

நல்வாழ்த்துக்களுடன்!

ஜோதி ஜோதி ஜோதி சுயஞ் ஜோதி ஜோதி ஜோதி அருள்

ஜோதி ஜோதி ஜோதி பரஞ் ஜோதி ஜோதி ஜோதி சிவம்

ஏ.பி.டி. இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட்

சக்தி பைனான்ஸ் பில்டிங், டாக்டர் நஞ்சப்பா ரோடு,

கோயமுத்தூர் - 641 018 போன் : 0422-2233982, 2233983

Sri Chamundeswari Sugars Limited

Regd. Office :

88/5, Richmond Road, Bangalore - 560 025

Tel : 080-25002500, Fax : 080-25002510

Email : ho@chamundisugars.com

‘என்னுடைய சாதனைகள் எதுவும் இல்லை’

தண்பொருநை தவழும் நெல்லை மாவட்டம் திருக்குறுங்குடியைச் சேர்ந்த பத்மப்ரியா பாஸ்கரன், கூவம் நதிக்கரையில் அமைந்திருக்கும் ஆலயங்களைக் கண்டறிந்து வெளிப்படுத்தி வருபவர். அது பற்றி ஒரு புத்தகமும் ஆங்கிலத்தில் எழுதியுள்ளார். மேலும் ஒவ்வொரு மாதமும் வழிபாட்டுக்கே கடினமாக திகழும் ஆலயங்களில் ஏதேனும் ஒன்றிற்கு தீபத்திற்கு தேவையான எண்ணெய், நெய், சுவாமிக்கு வஸ்திரம், போன்றவற்றை 'ஆலயம் கண்டேன் அறக்கட்டளை' மூலம் வழங்கி வருகிறார். அந்த ஆர்வம் அவருக்கு எப்படி ஏற்பட்டது என்பதைத் தெரிந்துகொள்ள ஒரு மாலைப்பொழுதில் அவருடன் செல்பேசி மூலம் உரையாடியதன் தொகுப்பு...

*** உங்களைப் பற்றி..?**

என்னுடைய பூர்வீகம் திருநெல்வேலி மாவட்டம் திருக்குறுங்குடி. நான் பிறந்தது கோயம்புத்தூர். என் தந்தை ஆர்மியில் வேலை பார்த்ததால் இரண்டு வருடங்களுக்கு ஒருமுறை பணியிடமாற்றத்தின் காரணமாக வெவ்வேறு இடங்களுக்கு செல்லவேண்டி இருந்தது. நான் கல்லூரி படிக்கும்போதுதான் சென்னைக்கு வந்தேன். படிப்பைத் தொடர்ந்து திருமணம் நடந்துவிட்டதால் கடந்த 33 வருடங்களாக சென்னையில்தான் வசித்து வருகிறேன். ஐ சி டபிள்யூ முடித்ததும் கடந்த 22 வருடங்களாக பணி புரிந்து வருகிறேன். தற்போது லண்டனில் இருக்கும் ஒரு என்.ஜி.ஒ. நிறுவனத்தின் இந்தியாவுக்கான தலைமை நிர்வாகியாக பொறுப்பில் இருக்கிறேன்.

*** ஒரு நிறுவனத்தின் முக்கியமான பொறுப்பில் இருக்கும் உங்களுக்கு ஆன்மிகத்தில் ஈடுபாடு ஏற்பட்டது எப்படி?**

சிறு வயது முதலே கதைகள் கேட்பதில் எனக்கு விருப்பம் அதிகம். நான் கூட்டுக் குடும்பத்தில் வளர்ந்தேன். என்னுடைய பாட்டியிடம் தினமும் சாப்பிடும்போது கதை கேட்பது வழக்கம். ராமாயணம், மகாபாரதம் போன்ற கதைகளை மட்டும் சொல்லாமல், அவர்களுடைய வாழ்க்கையில் நடந்த விஷயங்களை மிகவும் சுவாரசியமாகக் கதை போன்று கூறுவார்கள். என் பாட்டியின் சிறு பிராயத்தில் நடந்தவை, என் பாட்டியோட அப்பா சிறு வயதில் இருந்தபோது நடந்தவை போன்ற வற்றை சுவாரசியமாகக் கூறுவார்கள்.

நான் இரண்டாம் வகுப்பு அல்லது மூன்றாம் வகுப்பு படிக்கும்போதுதான் அம்மு சித்திர கதைகள் வந்தது. அது கதைகள் மீதான என்னுடைய ஆர்வத்தை அதிகரித்தது. என் அப்பா அடிக்கடி வேறு

வேறு ஊர்களுக்குச் செல்லவேண்டி வரும்போது என் அப்பா, அம்மா இருவரும் புது இடத்துக்குப் போகிறோமே, புது மொழி கற்றுக்கொள்ளவேண்டி வருமே என்றெல்லாம் சோர்ந்துவிடாமல், அந்தந்த ஊர் மொழியைக் கற்றுக்கொள்ள ஆர்வம் காட்டியதுடன், அந்தந்த ஊர்களின் கலாசாரம், புதுப் புது விஷயங்கள் போன்றவற்றைக் கற்றுக் கொள்ளவேண்டும் என்ற எண்ணம் அவர்கள் இருவருக்கும் இருக்கும். அந்த ஆர்வம் என்னையும் தொற்றிக்கொண்டது.

*** அதற்கும் நீங்கள் கோயில்களைப் பற்றி எழுதத் தொடங்கியதற்கும் என்ன தொடர்பு? அதன் பின்னணி என்ன?**

புதுப் புது விஷயங்களைக் கற்றுக்கொள்வதில் எனக்கு ஆர்வம் ஏற்பட்டது போலவே, எனக்கு ஆன்மிகத்தில் நாட்டம் இருந்ததால் புதுப் புதுக் கோயில்கள் அதுவும் வெளியில் தெரியாத, பலருக்கும் அவ்வளவாக அறிமுகம் இல்லாத கோயில்கள் பற்றிச் சொல்லலாமே என்று எண்ணி, ஆர்குட், ஃபேஸ்புக் போன்ற சமூக வலைதளங்களில் புகைப்படத்துடன் குறிப்புகளாக எழுதி வந்தேன். 2010-ம் வருடம் என்னுடைய உறவினர் ஒருவர், 'நாங்கள் எப்போது இந்தியாவுக்கு வந்தாலும் தரிசித்த ஆலயங்களையே திரும்பத் திரும்ப தரிசிக்கவேண்டி உள்ளது. நீங்கள் எழுதும் ஆலய வரலாறு எல்லாமே சுவாரசியமாக இருக்கிறது. இவற்றையெல்லாம் ஒரே இடத்தில் படிக்கும்போது மிகவும் வசதியாக இருக்குமே' என்று கூறினார். அப்படி நான் தொடங்கியதுதான் 'ஆலயம் கண்டேன்' என்னும் வலைப் பதிவு.

*** அந்த வலைப் பதிவுக்கு வரவேற்பு எப்படி உள்ளது?**

நல்ல வரவேற்பு இருந்தது. நான் அந்தப் பகுதியை தொடங்கிய இந்த பன்னிரண்டு வருடங்களில் பதினெட்டு லட்சம் பேர் படிக்கும் அளவுக்கு இருக்கிறது. கோயில் மற்றும் கோயிலில் உள்ள கடவுள் சார்ந்த கதைகள், தகவல்கள் அளிப்பதில் தொடங்கி, கொஞ்சம் கொஞ்சமாக வளர்ந்து கல்வெட்டு படிப்பது, படிமவியல் போன்றவற்றிலும் கவனம் செலுத்தினேன். ஆலயங்களில் உள்ள சிலைகளைப் பற்றி அறிந்துகொள்ள, அது பற்றிய கதைகள் தெரிந்திருந்தால்தான் முடியும். இந்த விஷயங்களை மற்றவர்களிடம் கேட்டும், தெரிந்தும் கொண்டதுதான் இவையெல்லாம்.

*** நீங்கள் கூவம் நதிக்கரையில் இருக்கும் ஆலயங்கள் பற்றி எழுதி இருப்பதாகக் கேள்விப்பட்டு இருக்கிறோம். அதைத் தவிர வேறு ஏதேனும் செய்திருக்கிறீர்களா?**

நிறையவே இருக்கின்றன. இந்த பன்னிரண்டு வருடங்களில் 'ஆலயம் கண்டேன்' வலைப் பதிவில் 140 முதல் 150 பதிவுகள் வரை எழுதியிருக்கிறேன். பார்ப்பதெல்லாம் எழுதவேண்டும் என்றில்லாமல் பலருக்கும் அதிகம் தெரியாத விஷயங்கள் பற்றி எழுதவேண்டும்

என்பதே என்னுடைய எண்ணம். 'Gods of the Holy Koovam' என்ற புத்தகமானது, கிட்டத்தட்ட இரண்டரை வருடங்கள் கூவம் நதிக்கரையில் அமைந்திருக்கின்ற கோயில்கள் பற்றி ஆராய்ந்ததன் வெளிப்பாடுதான். அதைத் தவிர 'பாடல் பெறும் பரந்தாமன் ஆலயங்கள்' என்று மற்றொரு புத்தகமும் வெளிவந்திருக்கிறது. ஒரு ஆன்மிக மாத இதழில் 'அற்புத ஆலயங்கள்' என்ற தொடர் எழுதியிருந்தேன். அதைப் பார்த்துவிட்டு திவாகரத்தனயன் என்ற கவிஞர், அந்தக் காலத்தில் ஆழ்வார்கள் பாசுரங்கள் இயற்றியது போல், அந்தத் தொடரில் இடம் பெற்றிருந்த ஆலயங்களுக்கு பாசுரங்கள் இயற்றித் தந்தார். அந்தத் தொகுப்பே, 'பாடல் பெறும் பரந்தாமன் ஆலயங்கள்' என்ற புத்தகம்.



*** உங்களின் எழுத்துக்களால் பழங்கால ஆலயங்கள், கவனிக்க ஆள் இல்லாத ஆலயங்கள் ஏதேனும் புதுப்பிக்கப்பட்டிருக்கிறதா?**

நிறைய இருக்கின்றன. ஒன்றை மட்டும் நான் இங்கு குறிப்பிடுகிறேன். சென்னை மதுரவாயலுக்கு அருகில் நெற்குன்றம் என்ற இடத்திலுள்ள கரிவரதராஜ பெருமாள் ஆலயம். இந்தக் கோயில் மூலவருக்கு தீபாராதனைக் காட்டும் நேரத்தில் அனைத்து கதவுகளையும் மூடிவிட்டு, மின்விளக்குகளையும் அணைத்துவிட்டு, அந்த தீபத்தை சுவாமியின் கண்களுக்கு அருகில் கொண்டு செல்லும்போது, சுவாமியின் கண்கள் திறந்து பார்ப்பது போல் இருக்கும். மற்ற நேரங்களில் அவரின் கண்கள் மூடிய நிலையிலேயே இருக்கும். இத்தனை சிறப்பு வாய்ந்த ஆலயம் கீற்று கொட்டகையில்தான் செயல்பட்டு வந்தது. இந்த ஆலயத்தைப் பற்றி நாங்கள் "ஆலயம் கண்டேன்" வாசகர்களிடம் ஒரு வேண்டுகோள் வைத்தோம். அப்போது அந்த ஆலயம் அமைப்பதற்கு அவர்களுக்கு தேவையாக இருந்தது 2,50,000. அதாவது 250 பேர் ஆளுக்கு 1,000 ரூபாய் கொடுத் தாலும் அவர்களுக்குத் தேவையான பணம் கிடைத்துவிடும். ஆனால் நாங்கள் எதிர்பார்த்ததற்கு மேலாக சுமார் ரூ. 4 லட்சம் கிடைத்தது. இந்த ஆலயம் 2013-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் முழுமையாக அதாவது தனித் தனியாக தாயார் சந்நிதி, ஆண்டாள் சந்நிதி, ஆழ்வார்கள் சந்நிதி, கொடிமரம் போன்றவை அமைத்து மிகச் சிறப்பாக கும்பாபிஷேகம் நடை பெற்றது. இதேபோல் மேலும் சில கோயில்கள் புதுப்பொலிவு பெற்றிருக்கின்றன.

*** கூவம் நதிக்கரையில் பயணித்தபோது உங்களால் மறக்க முடியாத நிகழ்வு ஏதேனும் இருக்கிறதா?**

கேசாவரம் என்னும் இடத்தில் (கூவம் நதி ஆரம்பமாகும் இடம்) அமைந்துள்ள ஆலயத்துக்குச் செல்வதற்கு வழியில்லாமல் இருந்தது. அப்போது 'ஆலயம் கண்டேன்' மூலமாக சமூக வலைதளங்களில் வேண்டுகோள் வைத்து அதன் மூலம் கிடைத்த சுமார் ரூ.1,15,000 செலவு செய்து அந்த ஆலயத்திற்கு செல்ல பாதை அமைத்துக் கொடுத்தோம். அந்த ஆலயத்தில் பிரதோஷம், அன்னாபிஷேகம் போன்ற விழாக்களின்போது 500 முதல் 600 பேர் வரை கலந்துக் கொள்கிறார்கள். இவை அனைத்தும் என்னுடைய சாதனை அல்ல. இது ஒரு கூட்டு முயற்சியே ஆகும்.

இந்த பதிலில் அவருடைய தன்னடக்கம் பளிச்சிட்டது. அற்புதமான ஆன்மிகப் பணியில் தன்னை ஆத்மார்த்தமாக அர்ப்பணித்துக்கொண்டிருக்கும் அவருடைய பணிகளுக்கு பாராட்டும் நன்றியும் தெரி வித்துக்கொண்டோம்.

●

கடவுள் பெண்களை அதிகமாக

ஒவ்வொரு வருடமும் மே மாதம் இரண்டாவது ஞாயிற்றுக்கிழமை அன்னையர் தினம் கொண்டாடப்படுகிறது. பெண்ணின் பெருமை என்பதே தாய்மை யில்தான் இருக்கிறது.

ஆனால், பெண்கள் குழந்தை பெற்றுக் கொள்வதால் சமுதாயத்தில் அடிமைப்படுத்தப் படுகிறார்கள். எனவே, பெண்களின் கர்ப்பப்பை நீக்கப்பட வேண்டும் என்று பல வருடங்களுக்கு முன்பு ஒரு தலைவர் பேசினார். பெண்களின் கர்ப்பப்பையை, குப்பை சுமக்கும் கோணிப்பையாக அவர் நினைத்துவிட்டாரா?

சுவாமி விமூர்த்தானந்தர்,
ஸ்ரீராமகிருஷ்ண மடம், தஞ்சாவூர்

அவர் ஏதோ ஒரு வேகத்தில் அப்படிப் பேசி விட்டார். அது எப்படி இருக்கிறது என்றால், 'தலைவலி வந்தால் தலையையே எடு' என்று கூறுவது போல் உள்ளது.

ஆணுக்கு எதிராகப் பெண்ணைத் திருப்பி, பெண்ணைத் தூண்டினால்தான் பெண் முன்னேறுவாள் என்று பல காலமாக சிலர் போதித்து வருகிறார்கள்.

இவ்வாறு கூறியதால் இன்றளவும் எத்தனை நல்ல பெண்களின் மனதில் குழப்பம் நிலவுகிறது? அதனால் எவ்வளவு பேருடைய காலம் விரயம் ஆகி வருகிறது?

காலணியைக்கூட பிறரிடம் ஒப்படைத்து விட்டுச் செல்ல இன்று மனிதன் தயாராக

இல்லை. பெண், தன்னைத் தானே நம்பாத நிலையைப் பார்க்கிறோம்; பெண்களைப் பிறர் நம்பாத நிலையையும் பார்க்கிறோம்.

ஆனால், இறைவன் பெண்களை மிகவும் நம்புகிறான். எப்படி?

கர்ப்பப்பை பெண்ணுக்கு இறைவன் தந்த ஒரு பெரிய ஆசீர்வாதம். தான் படைக்கும் சிசுக்களின் வளர்ப்பை, பாதுகாப்பை இறைவன் ஓர் ஆணிடமல்ல, ஒரு பெண்ணிடமே ஒப்படைக்கிறார். இறைவனின் நம்பிக்கைக்குப் பாத்திரமான உயிர், பெண்தான் என்பது பெண் இனத்திற்கே பெருமை.

மகாபாரதத்தில் யட்சன், தர்மராஜரிடம் கேட்ட கேள்விகளில் ஒன்று: பூமியைவிடக் கனமானது எது?



அதற்கு தர்மராஜர் அளித்த பதிலை, இந்துக் கடவுளை மட்டுமே மறுப்பவர்கள் படித்திருந்தால் இது போன்ற இலவச ஆலோசனையைக் கூறியிருக்க மாட்டார்கள்.

'பூமியைவிடக் கனமானது மக்களைத் தாங்கும் தாய், அதாவது தாயின் கருவறை' என்றார் தர்மராஜர்.

மனிதன் பிறந்த பின்பே பூமி அவனைத் தாங்குகிறது. பிறக்கும் முன் சிசு கருவாகப் பூமியில் விடப்பட்டால் அது இறந்துவிடும். அந்த நிலையிலுள்ள சிசுவைத் தாய் பேணுகிறாள். அனைத்து உயிரும் தாயின் கர்ப்பத்திலிருந்தே பூமிக்கு வருகின்றன. ஆகவே தாய் பூமியைவிட மதிப்பில் உயர்ந்தவள். கனமானவள்.

ஆகா, ஓர் உடலில் இரண்டு உயிர்கள். கருவறையில்தான் மனிதன் தனது ஆரம்பக்கல்வியைத் தொடங்குகிறான். அந்தக் கல்வியைத் தாய் மூலமாக இறைவனே வழங்குகிறார். பிறந்து வளரும்போதும்கூட தாய்தான் அந்தக் குழந்தையை நெறிப்படுத்துகிறாள். தந்தை அதற்குத் துணை நிற்கலாமே தவிர, அந்தக் குழந்தையை நல்லவனாக வளர்த்தெடுக்கும் பொறுப்பு அன்னைக்குத்தான் அதிகமாக இருக்கிறது.

ஆட்டிஸம் என்ற மூளை வளர்ச்சிக் குறைபாட்டின் இயல்பு என்ன தெரியுமா? பார்த்தல், கேட்டல் என உணரும் விஷயங்களை மூளை சரியாகப் பயன்படுத்த முடியாமல் குழந்தைகளின் நடவடிக்கைகள் மாறிப் போவதுதான் ஆட்டிஸம் எனப்படும்.

கர்ப்பத்தில் சிசு இருக்கும்போது தாய் மகிழ்ச்சியாக இல்லாமல், மன அழுத்தத்துடன் இருந்து பிறருடன் நன்றாகப் பழகாதபோது அது

நம்புகிறார்–எப்படி?



குழந்தையைப் பாதிக்கிறது. அந்தப் பாதிப்புதான் ஆட்டிஸத்தின் அடிவேர்களுள் முக்கியமானது.

கர்ப்பம் தரித்த பெண்களுக்கு நமது சாஸ்திரங்கள் பல நெறிமுறைகளைக் கற்றுத் தருகிறது. அதன் மூலம் கருவில் திருவுற்றவர்கள் பலர்.

அப்படிப்பட்ட கர்ப்பப்பையையா அகற்றுவது? இப்படிப்பட்ட சிறுபிள்ளைத் தனமான யோசனை சொன்னவர்களின் தாய்மார்கள் மக்கட்செல்வம் இல்லாத வறியவர்களாக இருந்திருந்தால், தமிழகத்தின் ஆன்மிக மகிமையை உலகம் இன்னும் அதிகமாக அறிந்திருக்கும்.

●

காய்களும் மருந்தாகுமே!

சுரைக்காய்: உடல் வெப்பத்தை வெகுவாகக் குறைத்து உடலை எளிதாகக் குளிர்ச்சியடைய வைக்கும் சுரைக்காயை அடிக்கடி உணவில் சேர்த்துக்கொள்வதன் மூலம் பல்வேறு நோய்கள் வராமல் பாதுகாக்கும்.

பூசணிக்காய்: சிறுநீரகம் மற்றும் கல்லீரல் சார்ந்த பிரச்னைகளை சந்தித்துக் கொண்டு இருப்பவர்கள் அடிக்கடி பூசணிக்காய் சாப்பிடுவதன் மூலம் நிவாரணம் பெறலாம்

நிலக்கடலை: உடல் சோர்வாக இருப்பதுபோல் உணர்ந்தால், உடனே ஒரு கைப்பிடி நிலக்கடலையை சாப்பிட உடலுக்குத் தேவையான சக்தியைக் கொடுப்பதுடன், உடலிலுள்ள தேவையற்ற கொழுப்பை கரைத்துவிடவும் செய்யும்.

முட்டைகோஸ்: முட்டைகோஸ் உடலில் நோய் எதிர்ப்புச் சக்தியை அதிகரிக்கும் திறன் கொண்டது. சாப்பிடும் உணவு செரிமானமாகவும் உதவுகிறது.

நெல்லிக்காய்: பெரிய நெல்லிக்காய் அல்லது சிறிய நெல்லிக்காய் இரண்டில் எது கிடைத்தாலும் உணவில் சேர்த்துக்கொள்ளலாம். இதன் மூலம் சளித் தொந்தரவு ஏற்படாது. அதிக உஷ்ணத்தினால் வாயில் ஏற்படும் புண்களையும் விரைவாக குணப்படுத்தும்.

கருணைக்கிழங்கு: இந்தக் கிழங்கின் காரல் தன்மை நாக்கை அரிக்கும் என்பதால், புளிக் கரைசலில் ஊறவைத்து சமைக்கலாம். கருணைக்கிழங்கு ரத்த அழுத்தத்தைக் கட்டுப்படுத்தும் ஆற்றல் கொண்டது.

சின்ன வெங்காயம்: பெரிய வெங்காயம் மற்றும் சாம்பார் வெங்காயம் (சின்ன வெங்காயம்) இரண்டிலும் எண்ணற்ற மருத்துவ குணங்கள் அடங்கியுள்ளன. பெரிய வெங்காயத்தை விட சின்ன வெங்காயத்தை தினசரி உணவில் சேர்த்துக்கொண்டு வந்தால், எப்படிப்பட்ட கொடிய நோய்த்தொற்றும் ஏற்படாமல் நம்மைப் பாதுகாக்கும்.

முருங்கைக்காய்: ரத்தத்தில் இருக்கும் நச்சுக்கழிவுகளை நீக்கி சுத்தமாக்கும் தன்மை முருங்கைக்காய்க்கு உள்ளது. இதையும் அடிக்கடி உணவில் சேர்த்துக்கொண்டு வருவது நல்லது.

மனதில் நின்றவை...

தேவார மூவர்களில் ஒருவரான சுந்தரர் தாம் அருளிய திருமுறையின் முதல் பாடலில் சிவபெருமானை, 'பித்தா பிறைசூடி பெருமானே' என்று இறைவனை பித்தன் என்று அழைக்கிறார். தேவார மூவரில் சுந்தரருக்கு தனிச் சிறப்பு ஒன்று உண்டு. அதுதான் தம்பிரான் தோழர் என்ற தனிப்பெரும் சிறப்பு! கயிலையில் சிவபெருமானின் அணுக்கத் தொண்டராக இருந்து பின்னர் சாபத்தின் காரண மாக பூமியில் சுந்தரராகப் பிறந்து இறைவனால் ஆட்கொள்ளப்பட்டவர். தம்பிரான் தோழர் என்ற சிறப்புப் பெயர் உண்டு என்பதற்காக இறைவனை பித்தன் என்று அழைக்கலாமா?

இப்படி ஒரு கேள்வி மகாவித்வான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்கள் முன்னிலையில் எழுந்தபோது, 'பித்தன்' என்பதற்கான பெயர்க் காரணத்தை நகைச்சுவை இழையோட ஒரு பாடலின் மூலம் விளக்கியுள்ளார்.

அந்தப் பாடலும் அதன் விளக்கமும் அப்படியே என் மனதில் பதிந்துவிட்டது.

அளவறு பிழைகள் பொறுத்தருள் நின்னை
அணியுருப் பாதியில் வைத்தான்
தளர்பிழை மூன்றே பொறுப்பவள்தன்னை
சடைமுடி வைத்தனன் அதனால்
பிளவியல் மதியம் சூடிய பெருமான்
பித்தன் என்றொரு பெயர் பெற்றான்

இந்தப் பாடலின் பொருள்:

'தாயே, அளவற்ற பிழைகள் பொறுக்கும் உன்னைத் தன் திருவுருவில் பாதியாக வைத்தான். ஆனால், தன்னில் தவறி விழுந்த ஒருவனை மூன்று முறையே பொறுக்கும் கங்கையைத் தன் தலைமேல் வைத்து ஆடுகிறான். அதனால்தான், பிளந்தது போன்ற இளம் சந்திரனைச் சூடிய பெருமான் 'பித்தன்' என்பதாக ஒரு பெயரினைப் பெற்றான்' என்பதே அம்பிகையிடம் சொல்வது போல் அமைந்த இந்தப் பாடலின் பொருள். ●

தன்னைப் பூரணமாக சரணடைந்த பக்தை ஒருத்திக்காக, இறைவனே முனிவர் வடிவில் நேரில் வந்து சாட்சி சொன்னதால், சாட்சிநாதர் என்னும் திருப்பெயர் கொண்ட தலம்தான் திருஅவளிவ நல்லூர் தலம். காவிரியின் தென்கரைத் தலங்களில் நூறாவது தலமான இந்தத் தலம் சுமார் 2,000 வருடங்கள் தொன்மைச் சிறப்பு வாய்ந்தது. அப்பரும், சம்பந்தரும் பாடிப் பரவிய தலம் இது.

சருமப் பிணிகள் நீக்கும் சாட்சிநாத பெருமான்!

பரிகாரக் கோயில்கள்

அவளிவநல்லூர்

ஆலயத்தை தரிசிக்கச் செல்கிறோம்....

கோயில் சிறியதுதான். நான்கு புறமும் உயர்ந்த கல் மதில் சுவர்களும் நுழைவாயிலுமாக அமைந்திருக்கும் ஆலயத்துக்குள் செல்கிறோம். பலிபீடம், நந்திதேவரைக் கடந்துசென்றால், தெற்கு நோக்கிய தனிச் சந்நிதியில், அழகே உருவாக நம்மை ஆட்கொள்கிறாள் அருள்மிகு செளந்தரநாயகி. அதையடுத்து, மூலவர் சந்நிதி. கருவறையில் லிங்கத் திருமேனியின் பின்புறத்தில், இத்தலத்தில் அடியாருக்குக் காட்சி கொடுத்த இறைவனும் இறைவியும் ரிஷப வாகனத்தில் எழுந்தருளியிருக்கும் பெரிய சிலாரூபம் அமைந்திருக்கிறது.

கோயிலின் உள்பிராகாரத்தில் விநாயகர், ஷண்முகர், மகாலட்சுமி ஆகிய தெய்வங்களும், கோஷ்டத்தில் தட்சிணாமூர்த்தி, லிங்கோத்பவர், பிரமா, துர்கை ஆகியோர் அருள்புரிகின்றனர். இங்கே அகத்தியர் வழிபட்டதாகப் புராணங்கள் கூறுவதால், அகத்தியர் திருவுருவமும் கோஷ்டத்தில் காணப்படுகிறது. மேலும் சண்டிகேஸ்வரர், நடராஜர் சிவகாமியம்மை, நவகிரகங்கள், நால்வர், பைரவர், சூரியன் ஆகியோரையும் தரிசிக்கலாம். சிவனடியாரின் மகள்களான சுசீலை, விசாலாட்சி ஆகிய இருவரின் சிலா உருவங்களும் ஆலயத்தில் அமைந்திருக்கின்றன. இந்த சிலைகளின் பின்னணியில் ஆலயத்தின் தலவரலாறு அமைந்திருக்கிறது.

அந்த ஊரைச் சேர்ந்த நம் நண்பர் ஒருவர் ஆலயத்தின் வரலாற்றையும், ஊருக்கு அவளிவநல்லூர் என்ற பெயர் வந்த காரணத்தையும் நமக்குக் கூறினார்.

முன்னொரு காலத்தில் இந்த ஊரில் சிவத்தொண்டையே உயிர்மூச்சாக நினைத்து, சிவாலயத்தில் இறைத்தொண்டு செய்து வாழ்ந்து கொண்டிருந்தார் ஒரு சிவாசார்யர். அவருக்கு சுசீலை, விசாலாட்சி என்று இரு மகள்கள். சோழ மன்னரின் அவையில் புலவராக இருந்த காசிபரின் மகன் விஷ்ணுசர்மா் என்பவருக்கு, மூத்த மகள் சுசீலையை மணம் செய்து வைத்தார் சிவனடியார்.

திருமணம் முடிந்த சில மாதங்கள் கழித்து, காசி யாத்திரைக்குப் புறப்பட்ட விஷ்ணுசர்மர், சுசீலையை அவருடைய பிறந்தகத்தில் விட்டுச்சென்றார். வருடங்கள் கழிந்தன.

திடுமென சுசீலையை அம்மை நோய் தாக்கியதில், கண்கள் பாதிக்கப்பட்டுப் பார்வையை இழந்தாள். அத்துடன், அம்மைத் தழும்புகளால் அவளின் முகமும் பொலிவிழந்தது. யாத்திரை முடிந்து திரும்பிய விஷ்ணுசர்மர் மனைவியை அழைத்துச்

செல்ல மாமியார் வீட்டுக்கு வந்தார். அங்கே, சுசீலையின் கோலம் கண்டு அதிர்ச்சியுற்றார்.

‘இது என் மனைவி சுசீலையே அல்ல!’ என்று அலறிய அவரிடம், நடந்த விஷயங்களை எடுத்துச் சொன்னபோதும் நம்பவில்லை.

இடைப்பட்டக் காலத்தில், அர்ச்சகரின் இளைய மகள் விசாலாட்சி பருவமடைந்து, நன்கு வளர்ந்து, அக்காவைப் போலவே அழகாக இருந்தாள். அவளைப் பார்த்த விஷ்ணுசர்மர், ‘இவள்தான் என் மனைவி சுசீலை!’ என்று சொல்லி, அவளையே அழைத்துச் செல்வேன் எனப் பிடிவாதம் பிடித்தார். நடந்ததையெல்லாம் பார்த்து மனம் பேதலித்த சிவனடியார், கோயிலுக்குச் சென்று இறைவனிடம் கண்ணீர் மல்கக் கசிந்துருகி பிரார்த்தித்தார்.

அவருடைய ஆழ்ந்த பக்திக்குக் கட்டுப்பட்ட பரமன், ஒரு முனிவர் உருவத்தில் தோன்றி, ‘நாளை காலை அனைவரும் இங்குள்ள சந்திர தீர்த்தத்தில் நீராடி வாருங்கள்’ என்று சொல்லி மறைந்தார்.

மறுநாள் அனைவரும் கோயிலுக்கு எதிரே உள்ள சந்திர தீர்த்தம் எனும் குளத்தில் நீராடி, இறைவனை வழிபட்டனர். என்ன அதிசயம்... தீர்த்தத்தில் மூழ்கி எழுந்த சுசீலையின் முகம், பழைய அழகோடு பளிச்சிட, கண் பார்வையும் திரும்பியிருந்தது. அப்போது அங்கே முனிவர் உருவில் தோன்றிய இறைவன், ‘அவளே இவள்!’ என்று சாட்சி கூறியருளினார். அவள்தான் இவள் என்று சிவனார் சாட்சி சொன்னதால் இந்த ஊருக்கு அவளிவள்நல்லூர் என்ற பெயர் ஏற்பட்டு, தற்போது அவளிவநல்லூர் என்று அழைக்கப்பட்டு வருகிறது.

விஷ்ணுசர்மர் தன் பிழை உணர்ந்து வருந்தினார். பின்னர் சுசீலையுடன் புது வாழ்க்கையைத் தொடங்கினார்.

தனது அழுகுரலைக் கேட்டு ஓடிவந்து, மகளின் வாழ்வை மீட்டுத்தந்த பரமனின் பெரும் கருணையை நினைத்து கண்ணீர் வடித்த சிவனடியாருக்கு ரிஷபவாகனத்தில் உமாதேவி சமேதராகத் திருக்காட்சி அருளினார் சிவபெருமான். தன்னுடைய வழிபாட்டிற்கே முழுவதுமாக அர்ப்பணித்துக் கொண்ட அடியாரின் குறை தீர்க்க முனிவர் வடிவில் நேரே வந்து சாட்சி சொன்னபடியால்,

‘சாட்சி நாதர்’ என்ற திருப்பெயர் இறைவனுக்கு ஏற்பட்டது.

ஒருகாலத்தில் பாதிரி வனமாக இருந்த இத் தலத்தின் தல விருட்சம் பாதிரி மரம். ‘பாதிரி' என்பது சிறந்த மூலிகையும்கூட. இந்த மரம் பூக்கும், காய்க்கும். ஆனால், விதை இருக்காது என்பது இதன் சிறப்பம்சம். ஆண்டுக்கு இரு மாதங்கள் பூக்கும். இதன் பூவைத் தண்ணீரில் போட்டு வைத்து, அந்தத் தண்ணீரை அருந்தினால் தோல் தொடர்பான பிணிகள் நீங்கும் என்பது பக்தர்களின் நம்பிக்கை.

விஷ்ணுசர்மரையும் சுசீலையையும் சேர்த்து வைத்த தலம் என்பதால், இந்தத் தலத்துக்கு வந்து ஈசனையும் அம்பிகையையும் அபிஷேக ஆராதனைகள் செய்து மனமுருக வழிபட்டு பிரார்த்தித்தால், பிரிந்திருந்த தம்பதி ஒன்று சேருவர் என்பது ஐதிகம். ●

அன்றும்

குடும்பத்தினர்க்கு மட்டுமல்ல, உறவுகளுக்கும், நண்பர்களுக்குமான மகத்தான உற்சாகம் நிறைந்த ஓர் ஒருங்கிணைப்புதான் திருமணம் என்பது. எவ்வித மனக்கவலையானாலும் அதை மறந்து எல்லோருமாக, அதீத மகிழ்வடைவதற்கான ஒரு நிகழ்வுதான் திருமணவிழா. காலமாற்றத்தால் திருமணவிழாவின் நிகழ்வுகளும், மகிழ்வின் நிலைப்பாடு களும் வெகுவாக மாறி, சிதைந்து விட்டன என்பது நிதர்சன உண்மை. இது, கால மாற்றத்தால் மட்டுமல்ல, அறிவியல் தொழில் நுட்ப வளர்ச்சிகளால் ஏற்பட்டுள்ள மாறுதல்களாகவும், தலைமுறைகளின் அவசர வாழ்வுச் சிந்தனைகளின் விளைவுகளாகவும் கூட ஆயிற்றென்பதும் உண்மையே.

சென்ற மாதம் பெரியம்மாவின் மகளுடைய ஐம்பதாமாண்டுத் திருமண விழா கொண்டாடப் பட்டபோது, அன்றைய காலகட்டத்தில் அவரது திருமண விழா நடந்த நிகழ்வுகள் நினைவில் வட்டமிட்டன. திருமணத்துக்கு இரண்டு மாதங்களுக்கு முன்னரேயே அழைப்புகள் நேரிலும், தபாலிலுமாகச் சென்று உறவுகளையும் நட்புகளையும் சேர்ந்துவிடும். தொலைபேசி கூட இல்லாத காலமாதலால், ஒவ்வொருவருக்குமான அழைப்புக் கடிதமும் பாசமும் அன்பும் நிறைந்த மையால் எழுதப்பட்டு ராமாயணம் போல அனுப்பப்பட்டிருக்கும். கடிதம் கண்டவுடன், அவர்கள் நேரிலேயே வந்து அழைத்தது போன்ற உணர்வு தோன்ற, உடனடியாகவே அனைவரும் திருமணத்தில் பங்கு கொள்ள திட்டமிட்டு, பதில் கடிதத்தையும் எழுதி அனுப்பி விடுவர்.

அன்றைய கிராமங்களில் ஒரு பெரியதனக் குடும்பமும், அந்தக் குடும்பத்துக்கென்று நான்கு கட்டுகளுடன் கூடிய பெரிய வீடும் கண்டிப்பாக இருக்கும். அந்த கிராமத்தில் எவருடைய திருமணமானாலும், திருமணத்துக்குப் பத்து நாள் முன்பே அந்த வீட்டின் பெரிய முற்றத்தில் மிகப் பெரிய பந்தலை அக்கம் பக்கத்து வீட்டாரின் துணையோடு போட்டு, தென்னங்குருத்தோலை, மாவிலை, வாழை என இயற்கையைச் சார்ந்தவற்றைக் கொண்டு அழகுடன் அலங்கரிக்கப்படும். பல ஊர்களிலிருந்தும் அனைத்து உறவினர்களும், நண்பர்களும் தத்தம் குடும்பம், குழந்தைகளுடன் புடைசூழ ஒரு வாரத்துக்கு முன்னதாகவே பேருந்து, புகைவண்டி, மாட்டு வண்டி, நடை வழியாக வந்து சேர, திருமண வீடு மட்டுமல்லாமல் அந்த கிராமமே ஒரே கலகலப்பாக இருக்கும்.

வீட்டின் பின்கட்டில் கால்வாய் போல் தோண்டப்பட்டு தயாராக இருக்கும் பெரிய அடுப்பில் கட்டைகள் போட்டு எரியச் செய்து, விதவிதமான உணவு வகைகளை ஒவ்வொரு வேளைக்குமாக வீட்டுப் பெண்களும், வந்து சேர்ந்த பெண்களுமாகச் சேர்ந்து சமைக்க, ஆண்களெல்லாம் பந்தல் நடுவிலமர்ந்து சீட்டு ஆடியும், அவரவர் கதைகளைக் கூறிச் சிரித்தும் களித்துமிருக்க, அடுத்த தலைமுறை குழந்தைக ளெல்லாம் ஒருவருக்கொருவர் அறிமுகம் செய்யப்பட்டு, (பிற்காலத்தில் உறவுகளும் நட்புகளும் தொடரும் பொருட்டு) ஒன்று சேர்ந்து ஆனந்தமாக விளையாடிக் கொண்டிருக்க, திருமணம் என்ற மகத்துவமான நிகழ்வு அன்றைய நாளில், உறவுகளின் அன்பும், அரவணைப்பும், பாசமும், மனிதநேயமும் உயர்ந்தோங்கும் வகையில் அமைந்திருந்தது.

திருமண நாளன்று அத்துணை பேரும் அவரவர்களால் முடிந்த உதவிகளையும் பணிகளையும் ஓடியாடிச் செய்ய, வீட்டுப் பெரியவர்கள் மேற்பார்வை புரிய, அந்தக் குடும்பத்தைப் பற்றி நன்கறிந்த உள்ளூர் புரோகிதர் நிறைந்த மனதோடு மந்திரங்களை ஓத,

வாசகர்களே, அன்றைய திருவிழாவுடன் இன்றைய திருவிழாவை ஒப்பிட்டு ஓம் சக்தி வாசகர் ஒருவர் அனுப்பிய கட்டுரை இது. இதேபோல் நீங்களும் **அன்றும்... இன்றும்...** என்ற பகுதிக்கு உங்கள் படைப்புகளை அனுப்பி வைக்கலாம். எந்த ஒரு விஷயத்தைப் பற்றியும் நீங்கள் இந்தப் பகுதிக்கு எடுத்துக்கொள்ளலாம். நீங்கள் அனுப்பும் கட்டுரை அன்றைக்கும் இன்றைக்குமான ஓர் ஒப்பீடாக இருக்கவேண்டுமே தவிர, சர்ச்சையை ஏற்படுத்துவதாக இருக்கக்கூடாது என்பது முக்கியம்.

அனுப்பவேண்டிய முகவரி: பொறுப்பாசிரியர், ஓம் சக்தி மே/பா. சக்தி சுகர்ஸ் லிமிடெட், ஏபிடி காம்ப்ளெக்ஸ், புது எண். 72,மவுண்ட் ரோட், கிண்டி, சென்னை 600032 (தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம் அருகில்) போன்: 044 – 22350238 / 42328097

திருமணங்கள்
அன்றும், இன்றும்

மணமக்களிருவரும் அனைத்து முதியோர்களின் தாள்களிலும் விழுந்து வணங்கி நல்லாசிகளை முழுமனதுடன் பெற்றிட, மங்களங்களனைத்தும் நிறைந்த தெய்விகமான ஒரு விழாவாக இருந்தன, அன்றைய திருமணங்கள்.

திருமணம் முடிந்த பின்பும் இரண்டு மூன்று நாள்கள் கழித்துதான் பிரிந்து போவார்கள். அந்தப் பிரிவில், பிரிவுத் துயரிருப்பினும், ஆனந்தக் கண்ணீரோடுதான் பிரிவார்கள். அந்தத் திருமண நிகழ்வுகளையும், மகிழ்வையும் பல காலம் முதியவர்கள் முதல் குழந்தைகள் வரை அசைபோட்டு அனுபவிப்பதொரு தனி ஆனந்தமாக இருந்தது. ஒவ்வொருவருக்கும் மனக்கவலைகளை மறக்கச் செய்து மனதுள் புத்துணர்ச்சியையும் இன்பத்தையும் ஊட்டும் மருந்தாக அன்றைய திருமணங்கள் விளங்கின. ஆனால், இன்றைய திருமணங்கள்?

`பரபரப்பு' நிறைந்த காலமென்ற பாவனையில், வெளிநாட்டில் பணிபுரியும் மணமகனோ மணமகளோ, அவர்களது சொந்தத் திருமண நிகழ்வுக்கே இரண்டு மூன்று நாள் விடுப்பில் வந்து செல்வர். `வாட்ஸ்அப்'பிலும், `எஸ்.எம்.எஸ்'ஸிலும், மின்னஞ்சலிலுமாக அனுப்பப்பட்ட குறுஞ் செய்தி அழைப்புகள். யாரோ கட்டி வைத்த மண்டபத்தில், செயற்கை பிளாஸ்டிக் பூக்கள் இலைகளென அலங்காரம் செய்யப்பட்டிருக்க, உறவுகளும் நட்புகளும் குடும்பத்துக்கொருவர் அல்லது இருவரென (`பரீட்சை, படிப்பு' என்று குழந்தைகளை அழைத்து வருவதேயில்லை) முகூர்த்த நேரத்துக்கு எட்டிப் பார்க்க, ஒரு கை குலுக்கலுடன் `விஷ்' செய்து புகைப்படத்துக்காக `இளித்தபடி' ஒரு நிமிடம் நின்று, ஒரு `ஹலோ'வுடன் கூடிப் பிரிந்து, அவசர அவசரமாக வெந்ததையும் வேகாததையும் பாதியாக அள்ளிப்போட்டு, மீதியைக் களைந்து, வேலைக்கோ அல்லது வேறொரு திருமணத்துக்கோ `டென்ஷ'னுடன் ஓட, மூன்று மணி நேரத்துக்குள் எல்லாம் முடிந்துவிடும்.

வாழ்த்துகளைப் பெறவும், அளிக்கவும் மணமக்களுக்கும் அவசரம், மற்றவர்களுக்கும் அவசரம். எதிலும் ஆத்மார்த்தமான அன்போ, பாசமோ, உறவோ, நட்போ இல்லாத, போலிச் சடங்குகள் நிறைந்த மணித்துளிகள். விடுமுறை நாள்களைத் தேர்வு செய்து திருமணம் நடத்தினாலும்கூட, இதே அவசரங்கள்தான். கவலைகளை மறக்க எண்ணாத, விரும்பாத மனித மனங்கள். இது, காலத்தின் கட்டாயமென்று கூறப்பட்டாலும், குறைந்தது திருமண நாளன்று மட்டுமாவது ஒரு முழுநாளை ஒன்றாகக் கூடி மகிழ்வுடனிருக்க ஏன் மறுக்கிறார்கள்? புரியவில்லை.

சரியோ, தவறோ, இன்றைய இந்த அவசரத் திருமணங்களில் ஆத்மார்த்தமில்லாத காரணத்தினால்தான் மணமுறிவுகளும் அதிகமாகி வருகிறதோ என்னவோ? அன்றைய காலத்தின் மனம் நிறைந்த நல்லாசிகளைப் பெற்றிருந்த மணமக்கள் ஐம்பதாமாண்டுத் திருமண நாளை ஆனந்தமாய் ஒருபுறம் கொண்டாடிக் கொண்டிருக்க, `கடனே' என்று மேல்பூச்சான அன்புடன் கூடிய, `மனம் நிறையாத(?) அவசரமான வாழ்த்துகளால்தாம் இன்றைய மணமக்களின் திருமண வாழ்வு நீண்டகாலம் நிறைவாக நிலைப்பதில்லையோ என்ற ஐயப்பாட்டு எண்ணம் எழத்தான் செய்கிறது. •

கல்லீரல் பிரச்னைகளும் அதன் தீர்வுகளும்

பொதுவாகவே நமது உடம்பில் ராஜ இந்திரியங்கள் எனப்படுகின்ற முக்கிய உறுப்புகள் உள்ளன. உதாரணத்திற்கு இதயம், கல்லீரல், சிறுநீரகம், நுரையீரல், கணையம், மூளை இவற்றையெல்லாம் சொல்லலாம்.

இவற்றுள் மிக முக்கியமானது கல்லீரல். பொதுவாக இதயம் நமது உடம்பிற்கு இரத்த ஓட்டத்தை அளிக்கிறது. மூளை உடலை இயக்குகிறது. சிறுநீரகம் உடலிலுள்ள கழிவுகளை வெளியேற்றுகிறது. நுரையீரல் சுவாசத்தை சரி செய்கிறது. இதேபோல் கல்லீரலுக்கு இதுதான் வேலையென்று சொல்ல முடியாது. சுமாராக 10-லிருந்து 20 வகையான வேலைகளை அது செய்கிறது. இதுவே கல்லீரலின் சிறப்பம்சம்.

கல்லீரலின் முக்கியமான பணிகள் :

நாம் அன்றாடம் எடுத்துக் கொள்கிற உணவுப் பொருள்களைச் சரிவரப் பிரித்துத் தேவையான சத்துக்களாக மாற்றி, தேவையற்ற கழிவுகளை நீக்கி, அதனை இரத்த ஓட்டத்தில் கலக்கச் செய்கிறது.

இன்னும் எளிதாகச் சொல்வதென்றால், மிகப்பெரிய ஒரு திடப்பொருளை உடைத்துச் சிதைத்துச் சிறுசிறு பகுதிகளாகப் பிரித்து பயன்படுத்துகிற வேலைகளைத்தான் கல்லீரல் செய்கிறது. அதாவது உடலில் ஏற்படும் சத்துக்களான மாவுச்சத்து, புரதச்சத்து, கொழுப்புச் சத்து இவற்றினை சரிவர நிர்வகித்து உடலில் செலுத்துகிறது. அதேபோல், தேவைக்கு அதிகமான மாவுச்சத்துக்களைத் தோல், அடிவயிறு, தொடை போன்ற பகுதிகளில் கொழுப்பாக மாற்றிச் சேமித்து வைத்துத் தேவைப்படும்போது நமக்குக் கொடுக்கிறது.

இந்தக் கல்லீரலை நமது சித்த மருத்துவத்தில் வலப்பாட்டீரல், கல்மதம், யஃகுதம் என்ற பெயர்களிலும் அழைப்பார்கள். இதில் சிறப்பம்சம் என்னவென்றால், மற்ற செல்களில் இல்லாததை கல்லீரல் செய்கிறது. கல்லீரல் தன்னைத் தானே புதுப்பித்துக் கொள்கிறது. உடலில் ஒரு புண் ஏற்பட்டால், அது ஆறியபின் பழைய தோல் மாறி, புதிய தோல் வருவதுபோல கல்லீரலிலும் செல்கள் பாதித்து இறந்தாலும், மறுபடியும் அவை தம்மை புதுப்பித்துக் கொள்கின்றன. ஆனால், இதயம், மூளை இவற்றிற்கு பாதிப்பு ஏற்பட்டால் அவ்வளவுதான். அவை இவ்வாறு புதுப்பிப்பதில்லை. இது கல்லீரலின் மிகப்பெரிய சிறப்பம்சம்.

கிரேக்க நாட்டில் ‘ஹெபர்’ என்னும் தேவதை பற்றிச் சொல்வார்கள். அது மீண்டும் மீண்டும் உயிர்ப்பித்துக் கொள்ளுமாம். அதன் அடிப்படையிலேயே கல்லீரை ‘ஹெபட்டோ’ என்று பெயர் சொல்லி அழைப்பார்கள். கல்லீரலின் செயல்கள் பற்றி இன்னும் கொஞ்சம் விரிவாகப் பார்ப்போம்.

கல்லீரலின் அமைப்பு : நம் உடலில் கல்லீரல் அமைந்திருக்கும் அமைப்பைப் பார்த்தோமானால், சராசரி எடையுள்ள மனிதனுக்குக் கல்லீரலின் எடை 2 1/2 கிலோவிலிருந்து 3 கிலோ வரை இருக்கும் என்று சொல்கிறார்கள். சில மனிதர்கள் உடல் பருமனாக இருக்கும் பட்சத்தில் அவர்களுக்குக் கல்லீரலின் எடையும் கூடுதலாக இருக்கும். உடல் ஒல்லியாக இருக்கும் மனிதர்களுக்குக் கல்லீரலின் எடை சற்றுக் குறைவாகவே இருக்கும். இந்தக் கல்லீரல் நமது உடலில் எங்கு இருக்கிறது என்று சரியாகச் சொல்வதென்றால், நமது வலது மார்புக்கூட்டுக்கும் (நெஞ்செலும்பு) வலது புறத்திலும் வயிற்றறைக்கு வலது மேல் பக்கத்திலும் வயிற்று விலாஎலும்பு முடிகிற பகுதியில் மெதுவாக அழுத்திப் பார்த்தால், கல்லீரல் தென்படும். கல்லீரல் நோய்வாய்ப்பட்டவர்களிடம் இதை நாம் நன்றாகவே அழுத்திப் பார்க்க முடியும். இந்தக் கல்லீரலின் வடிவம் நீண்ட முக்கோண வடிவில் இருக்கும்.

நாம் உட்கொள்கிற உணவுப் பொருள்களின் கொழுப்புப் பொருள்களால் கல்லீரல் அளவுக்கு அதிகமாகப் பித்தநீரைச் சுரக்கிறது. உணவு செரிமானம் ஆவதற்குத் தேவையான அளவுக்கு போக மீதமுள்ள பித்தநீரானது, உணவுக்குடலில் கலக்கும்போது, உணவின் செரிமானத்தன்மை குறைகிறது. இதனால் அதிகப் பசி எடுத்தல், சில நேரம் பசியின்மை, அதிகமாக உமிழ்நீர் சுரத்தல், வாய்க்கசப்பு, வாந்தி முதலிய அறிகுறிகள் ஏற்படும்.

கல்லீரலைப் பாதுகாப்பது எப்படி? : பாதுகாப்பு முயற்சிக்குப் போவதற்கு முன்பு கல்லீரலைப் பாதிக்கும் காரணிகள் பற்றிப் பார்ப்போம்.

கல்லீரல் பாதிப்பு, சாதாரணமாக நாம் குடிக்கும் குடிநீரிலிருந்து நாம் எடுத்துக் கொள்கிற உணவுப் பொருள்கள், மதுபானங்கள், செயற்கை ரசாயனங்கள் சேர்ந்த குளிர்பானங்கள், வலி நிவாரணி மாத்திரைகள், நச்சு சுரம், டைபாய்டு, மலேரியா காய்ச்சல் வருகிறபோதெல்லாம் கல்லீரல் பாதிக்கும்.

கல்லீரலைப் பாதிக்கும் முக்கியமானப் பிரச்னைகள் 3 - 4 வகைகளாக சொல்லலாம். சித்த மருத்துவத்தில் இதனை வாதக் கல்லீரல் நோய், பித்தக் கல்லீரல் நோய், கபக்கல்லீரல் நோய், முக்குற்றக்கல்லீரல் நோய் என நான்கு வகைப்படுத்துவார்கள். வளி, அழல், ஐயம் இதனை வாத, பித்தம், கபம் என்பார்கள். இந்த மூன்றையும் முக்குற்றம் (திரிதோஷம்) என்போம். இந்த நான்கும் சேர்ந்து கல்லீரலைப் பாதிப்படையச் செய்கிறது. இதில் ஒவ்வொன்றிற்கும் ஓர் அறிகுறி இருக்கும்.

வாதக் கல்லீரல் நோய் : கொஞ்சம் சாப்பிட்டாலே வயிறு உப்புசமாகிவிடும். அஜீரணக் கோளாறு ஏற்படும். புளிப்பு ஏப்பம், வாந்தி, வாய்க் கசப்பு, சுவையின்மை இவையெல்லாம் இருக்கும். வயிறு மேல் முடிச்சு முடிச்சாய் ரத்த நாலங்கள் (Veri-



நாம் சரியான அளவு தண்ணீர் அருந்தாமல் இருப்பது, அதிகக் கொழுப்புச் சத்து உணவுகளைச் சாப்பிடுவது, உடல்பருமன் போன்றவற்றால் இந்தப் பித்தநீர் கடினப்பட்டு கட்டியாகி விடுகிறது.

"

cose) தோன்றும். கால்களில் வீக்கம் தோன்றும். நகங்கள் வெளுத்துக் காணப்படும்.

பித்தக் கல்லீரல் நோய் : வாய்க் கசப்பு இருக்கும். கண்கள், நாக்கு, உடம்பெல்லாம் மஞ்சளாகவும், ஆங்காங்கே சிவப்புப் புள்ளிகளும் தென்படும். உள்ளங்கையும் மஞ்சளாகக் காணப்படும். தோல் அரிப்பு ஏற்படும். உடம்பு சூம்பியது போல் இருக்கும்.

கபக் கல்லீரல் நோய் : உடம்பு ஊதுதல், முகம் வீங்குதல், கண்களுக்குக் கீழுள்ள தசை இமை தடித்தல், கண்கள் உள்ளே போனதுபோல் காணப்படுதல் இதன் அறிகுறிகளாகும். இவர்களுக்கு ஹீமோகுளோபின் அளவு குறைந்து ரத்தசோகை (Anemia) ஏற்படும். உடல் முழுவதும் வெளுத்துக் காணப்படும்.

இந்த முக்குற்ற கல்லீரல் நோயில் இந்த மூன்று தன்மையும் சேர்ந்து காணப்படும். சித்த மருத்துவத்தில் நோயை இவ்வாறே நாங்கள் கண்டறிந்து சொல்கிறோம். மேலும் சிறுநீர் மஞ்சளாகக் காணப்படும். மலம் கட்டிபடும். மலம் மஞ்சளாக வெளுத்துக் காணப்படும். வயிற்றுப் போக்கும் இருக்கும். சில நேரங்களில் மலமானது ஆட்டுப்புழுக்கை போல் வெளிப்படும். சித்த மருத்துவத்தில் நான்கு வகையான கல்லீரல் நோய்களைப் பார்த்தோம். இதனை இனி நவீன மருத்துவ வகைகளில் பார்த்தோமானால், இதனையும் நான்கு வகைப்படுத்தலாம்.

1. கல்லீரல் அழற்சி (Hepatitis) : நமக்கு எப்படி சளி பிடித்து அலர்ஜி வருகிறதோ, அதேபோல் இதிலும் ஒருசில ஒவ்வாமை ஏற்படும். அதாவது ஒரு பொருள் நமக்கு ஒவ்வாமையினால் உறுப்பில் வீக்கம் (Inflammation) ஏற்படும். இதனை அலர்ஜி என்றும் சொல்வார்கள். இது வைரஸ் கிருமி நோயால் ஏற்படும் நோயாகும். இதனை ஏ, பி, சி என்று பல வகைகளில் வரிசைப்படுத்துவார்கள்.

2. கல்லீரல் செயலிழத்தல் (Hepatic Failure) : நீண்டநாள் மது அருந்துதல் மற்றும் கொழுப்பு உணவுப் பொருட்களை அதிகமாக உண்ணுதல், உடல் உழைப்பின்மை இவற்றால் கல்லீரல் தன் வேலையைச் சரிவரச் செய்யாமல் செயலிழந்து காணப்படுகிறது.

3. கொழுப்பு கல்லீரல் (Fatty Liver) : இது பொதுவாகக் கல்லீரலில் கொழுப்புப் படிதல், கல்லீரல் வீங்கிக் காணப்படுதல் போன்ற அறிகுறியால் வரும் நோயாகும். இதனை கிரேடு 1, கிரேடு 2 என்று பிரிப்பார்கள். பொதுவாகவே இன்றைய நவீனக் கால சூழ்நிலையில் உணவுப் பொருள்களில் ஏற்படும் மாற்றங்களினால் கல்லீரல் அளவில் பெரிதாகக் காணப்படும். இதனால் இதன் செயல்பாடுகள் மெதுவாக இருக்கும்.

இந்தக் கல்லீரலுக்கும் கீழ்ப்பகுதியில் பார்த்தோம் என்றால், பித்தப் பை என்று ஒன்றிருக்கும். இதனை ஆங்கிலத்தில் (Gall Bladder) என்பார்கள். இந்தப் பித்தப் பையில் பார்த்தால் பித்தநீர் இருக்கும். கல்லீரலைப் பொறுத்தவரை அதனை இரண்டு பகுதிகளாக வலது, இடது எனப் பிரிப்பார்கள். அந்தக் கல்லீரலின் நடுப்பகுதியின் கீழ்ப்பகுதியில் இந்தப் பித்தப்பை இருக்கும்.

4. மஞ்சள் காமாலை (Jaundies) : அதீத பித்தநீர் உற்பத்தியாவதால் வருவது. இந்தப் பித்தநீர் உற்பத்தியாகிற தன்மையைப் பார்த்தால், சில நேரங்களில் பித்தப் பை நாளங்களில் (Gall Bladder Vessels) கல் உருவாகி, அதன் செயல்களைத் தடைசெய்கிறது. இதனைத் தடை ஏற்பட்ட மஞ்சள் காமாலை என்பார்கள். இதற்குப் பொதுவாக நாம் எடுத்துக் கொள்கிற கொழுப்பு உணவுப் பொருள்களான எண்ணெய் பதார்த்தங்கள்,

குடிக்கிற குடிநீரில் உள்ள கிருமிகள் (Infection) இதனால் இந்த மஞ்சள் காமாலை வருவதற்கு வாய்ப்புள்ளது.

இதில் மிக முக்கியமானது என்னவென்றால், பித்தநீர் கல்லீரலில் சுரப்பி மூலம் பித்தநீர்ப் பையில் சேகரமாகும். இது உணவு உண்பதற்கு இடையில் நாம் எடுக்கின்ற உணவைப் பொறுத்து, அந்தப் பித்தநீரானது நமது இரைப் பகுதியின் கீழ்ப்பகுதியில் கணையம் உறுப்போடு சேர்ந்து பித்தநீரானது செரிமான சக்திக்கு உதவுவதற்காகச் சுரக்கிறது. சில நேரங்களில் இந்தப் பித்தநீர் திடத்தன்மையாகிவிடும். சரியாக நாம் தண்ணீர் அருந்தாமல் இருப்பது, அதிகக் கொழுப்புச் சத்து உணவுகளைச் சாப்பிடுவது, உடல்பருமன், அதிகமான வேதிப் பொருட்களைச் சாப்பிடுவது போன்றவற்றால் இந்தப் பித்தநீர் கடினப்பட்டு கட்டியாகி விடுகிறது. (உதாரணத்திற்கு வெல்லம் ரொம்ப நாளானால் கட்டியாவதுபோல்) பித்தநீரில் கட்டியாகி திடப்பொருளாக மாறுகிறது. சில நேரங்களில் சீழ்பிடிக்கவும் செய்கிறது. இவ்வாறு பித்தப் பையில் கல் உருவாவதால், இது உயிருக்கு ஆபத்தான நிலைக்குக் கொண்டு வந்துவிடும்.

கல்லீரலின் ஒரு பகுதி பித்தப் பை. அந்தப் பித்தப் பையில் கல் உருவாவதால், இதனைப் பித்தப்பை கல் என்று சொல்கிறோம். இனி இவைகளைத் தனித்தனியே பார்ப்போம்.

பித்தப் பையில் கல் உருவாகி, அதனால் ஏற்படும் நோய்க்குத் தீர்வு உண்டா என்றால், நிச்சயம் இதற்குத் தீர்வு உண்டு.

அளவுக்கு அதிகமான மதுபானங்களை அருந்துதல், நீண்ட காலத்திற்குத் தொடர்ச்சியாக எண்ணெய் பொரித்த உணவுகளை உட்கொள்ளுதல், நீண்ட நாள் வலி மாத்திரைகள் எடுத்துக் கொள்ளுதல் இவையெல்லாமே கல்லீரலைப் பாதிக்கும்.

தவிர்க்கக் கூடிய காரணிகள் : நிறைய நீர்ச்சத்துள்ள திரவ உணவுகளை உண்ணுதல், நீர், வெண்ணெய் எடுத்த மோர், கீழாநெல்லி, வெள்ளாட்டுப் பால், உடல் உழைப்போடு கூடிய நடைப்பயிற்சி ஆகியவற்றால் இந்த நோய் வராமல் இருக்கச் செய்ய முடியும்.

கல்லீரல் தன்மை மாறுபாடு அமைவதற்கான வியாதிகளை இதுவரைப் பார்த்தோம். அதனால் இந்த நோயிலிருந்து நம்மைக் காத்துக்கொள்ள நீர்ச்சத்துள்ள பொருள்களை அதிகளவு எடுத்துக் கொள்ள வேண்டும். அதேபோல் ஊறுகாய் போன்ற புளிப்புச்சுவை தன்மை கொண்ட உணவுகளைத் தவிர்க்க வேண்டும். எண்ணெயில் பொரித்த உணவுகளைத் தவிர்க்க வேண்டும்.

சித்த மருத்துவத்தைப் பொறுத்தவரை, கரிசாலைக் கற்பம், இஞ்சி ரசாயனம், மாதுளை மணப்பாகு, உடல் ஊதும் நோய் இருப்பவர்களுக்கு அயபிருங்க ராஜகற்பம், அன்னபேதி செந்தூரம், வெடிஉப்பு சுண்ணம் போன்ற சில பெருமருந்துகளும் பயன்தரும். நெருஞ்சிக் குடிநீர், மண்டுராதி அடைகஷாயம் போன்ற மருந்துகளுக்குக் கல்லீரல் வீக்கத்தை சரிசெய்து கல்லீரலைப் புதுப்பிக்கும் ஆற்றல் உண்டு.

பல்வேறு நோயாளிகள் இங்கு வந்து சித்த மருத்துவச் சிகிச்சைகள் எடுத்துக் கொண்டு, மீண்டும் கல்லீரலைப் புதுப்பித்து நல்லநிலைக்கு வந்து கொண்டிருக்கிறார்கள். ஆலோசனை மற்றும் சித்த மருத்துவச் சிகிச்சைத் தொடர்புக்கு

டாக்டர் ப. சரவணன், தலைமை மருத்துவர், கஸ்தூர்பா காந்தி நினைவு சித்த மருத்துவமனை மற்றும் ஆராய்ச்சி மையம், சிங்காநல்லூர், கோவை - 641 015. செல் : 9043212789.

இந்தியாவின் விடுதலைப் போராட்டம் என்பது நீண்ட நெடிய வரலாறு. வரலாறு என்றாலே வெற்றிகள் மட்டுமல்லாமல், தோல்விகளும், உயிர்த் தியாகங்களும் இருக்கத்தானே செய்யும். அப்படி எண்ணற்ற போராளிகள் இந்திய தேசத்தின் விடுதலை வேள்வியில் தங்கள் உயிரையே ஆகுதியாக சமர்ப்பித்திருக்கின்றனர். அவர்களில் பெண் போராளிகளும் அடக்கம். அத்தகைய பெண் போராளிகளில் இளம் பெண் போராளி ஒருவரின் வீரம் மிக்க வரலாறு இது...

பொறுப்பாசிரியர்

ப்ரீத்திலதா வதேதர்

மே – 5 பிறந்த தினம்

நிவேதிதா பிரேம்நாத்

படம் : **ஸ்யாம்**

சிட்டகாங் டாக்டர் கஸ்தாகிர் அரசு மகளிர் பள்ளி அது. அந்தப் பள்ளியின் வகுப்பறை ஒன்றில் மாணவிகளால் உஷா தி என்று அன்புடன் அழைக்கப்பட்ட ஆசிரியை பாடம் நடத்திக்கொண் டிருந்தார். அந்நிய ருக்கு எதிராகத் தீரத்துடன் போராடிய ஜான்சி ராணியின் வீர வரலாற்றை உணர்ச்சிப் பெருக்குடன் பாடமாக நடத்திக்கொண்டிருந்தார். அந்த வீரப் பெண்மணியின் தீரமிகு வரலாற்றைக் கேட்ட மாணவிகளில் இரண்டு பேர் ஓர் உத்வேகம் பெற்றனர். அவர்கள்தான் கல்பனா தத்தா, ப்ரீத்திலதா வதேதர். இந்த நிகழ்ச்சியைப் பற்றி கல்பனா தத்தா தான் எழுதிய, சிட்டகாங் ஆயுதக் கிடங்கைக் கைப்பற்ற மேற்கொண்ட முயற்சிகளை விவரிக்கும் புத்தகம் ஒன்றில், 'பள்ளிப் பருவத்தில் எங்கள் எதிர்காலம் பற்றித் தெளிவான முடிவு எதுவும் இல்லை. ஒருநாள் எங்கள் ஆசிரியை கூறிய ஜான்சி ராணி லட்சுமி பாயின் வீரமிக்க வாழ்க்கை வரலாறு எங்களுக்குள் ஓர் உத்வேகத்தை ஏற்படுத்தியதுடன், விடுதலைக் கனலையும் எங்கள் இதயங்களில் கனன்றெழச் செய்தது'

என்று தன்னுடைய சக வகுப்புத் தோழியான ப்ரீத்திலதா வதேதரையும் சேர்த்தே குறிப்பிட்டிருக்கிறார்.

ப்ரீத்திலதா சிட்டகாங் அருகிலிருந்த தால்காட் என்னும் கிராமத்தில் வைத்யா வம்சாவளியில் வந்த நடுத்தரக் குடும்பம் ஒன்றில் 1911-ம் வருடம் மே மாதம் 5-ம் தேதி பிறந்தார். இவருடைய தந்தை ஜகபந்து வதேதர் சிட்டகாங் நகராட்சியில் குமாஸ்தாவாகப் பணியில் இருந்தார். தாயார் பிரதீபாமாயி தேவி. பெற்றோரும் உறவினர்களும் ப்ரீத்திலதாவை 'ராணி' என்று அழைப்பார்கள். அதற்கேற்ப ப்ரீத்திலதாவும் ஒரு ராணிக்கே உரிய கம்பீரமும், துணிச்சலும் பெற்றிருந்தாள். மதுசூதன், கனக்லதா, சாந்திலதா, ஆஷாலதா, சந்தோஷ் ஆகியோர் உடன்பிறந்தவர்கள்.

ப்ரீத்திலதா சிட்டகாங்கில் உள்ள டாக்டர் கஸ்தாகிர் அரசு மகளிர் பள்ளியில் படித்தார். அவருடைய சக மாணவியாகவும் நெருங்கிய தோழியாகவும் இருந்தவர் கல்பனா தத்தா என்ற மற்றொரு விடுதலைப் போராளி.

ப்ரீத்திலதா படிப்பில் முதல் மாணவியாக வலம் வந்தார். அதன் காரணமாக அனைத்து ஆசிரியைகளுக்கும் செல்லப் பெண்ணாகத் திகழ்ந்தாள். கலை மற்றும் இலக்கியத்தில் மிகுந்த நாட்டம் கொண்டிருந்த ப்ரீத்திலதா, பள்ளிப் படிப்பை முடித்ததும் 1929-ம் வருடம் டாக்காவில் உள்ள ஏடென் கல்லூரியில் பயின்றார். கல்லூரியில் படித்துக்கொண்டிருந்தபோது சமூகசேவைகளில் தன்னை ஈடுபடுத்திக்கொண்டார். தொடர்ந்து மேற்படிப்புக்காக பெத்துனே கல்லூரியில் சேர்ந்து தத்துவ இயலில் முதல் வகுப்பில் தேர்ச்சி பெற்றார். ஆனால், அவர் விடுதலைப் போராளி என்ற காரணத்தினால் அவருடைய சான்றிதழ் ஆங்கிலேயர்களால் நிறுத்தி வைக்கப்பட்டு இருந்தது. இந்தியா விடுதலை பெற்று பல ஆண்டுகளுக்குப் பிறகே கடந்த 2012-ம் வருடம் சான்றிதழ் வழங்கப்பட்டது.

கல்லூரியில் படித்துக்கொண்டிருந்த காலத்திலேயே விடுதலைப் போரில் தன்னை ஈடுபடுத்திக் கொள்வதில் விருப்பம் கொண்டிருந்தார். அந்த விருப்பம் தந்த உத்வேகத்தின் காரணமாக, 1930-ம் வருடம் சூர்யா சென் என்பவரால் மேற்கொள்ளப்பட்ட மகத்தான ஒரு திட்டத்தைச் செயல்படுத்துவதில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டார் ப்ரீத்திலதா. சிட்டகாங் என்னும் துறைமுக நகரத்தில் இருந்த ஆங்கிலேயர்களின் ஆயுதக் கிடங்கைக் கைப்பற்றுவதே அந்த திட்டம். அந்த திட்டத்தின் முதற் படியாக சிட்டகாங் நகரத்தின் தொலைபேசி, தந்தி ஆகியவற்றை செயலிழக்கச் செய்வது, ரயில் பாதையைத் தகர்ப்பது போன்ற பணிகளை வெற்றிகரமாக நிறைவேற்றினார் ப்ரீத்திலதா. பின்னர் அங்கே இந்திய தேசியக் கொடியை ஏற்றி, ஆயுதங்களையும் சூறையாடினர். அப்போது ஆங்கிலேய காவல்துறையினருக்கும் புரட்சிகரக் குழுவினருக்குமிடையே நடைபெற்ற மோதலில் பன்னிரண்டு வீரர்கள் உயிர்த் தியாகம் செய்தனர்.

தொடர்ந்து கல்லூரிப் படிப்பில் கவனம் செலுத்திய ப்ரீத்திலதா, படித்து முடித்த பிறகு நந்தன்கனன் அபர்ணாசரண் பள்ளியில் குறுகிய காலத்துக்கு ஆசிரியையாகப் பணியாற்றினார். ஆனாலும், விடுதலைக்காகப் பாடுபடவேண்டும் என்ற எண்ணமானது, அவரை அந்தப் பணியில் தொடர்ந்திருக்க விடவில்லை.

எனவே, சிட்டகாங் எழுச்சிக்கு வித்திட்ட சூர்யா சென் அவர்களை 1932-ம் வருடம் ஜூன் 13-ம் தேதி தால்காட் முகாமில் நேரில் சந்தித்து தனது விருப்பத்தைத் தெரிவித்தார். அப்போது அந்தக் குழுவில் இருந்த பினோத் பிஹாரி சௌத்ரி என்பவர், பெண்களை

ப்ரீத்திலதாவின் நினைவாக பிர்கன்யா ப்ரீத்திலதா டிரஸ்ட் (தைரியப் பெண்மணி ப்ரீத்திலதா டிரஸ்ட்) என்ற அறக்கட்டளையை ஏற்படுத்தி, அதன் சார்பாக ப்ரீத்திலதாவின் பிறந்தநாள் இந்தியா மற்றும் வங்காளதேசத்தின் பல இடங்களில் சிறப்பாகக் கொண்டாடப் படுகிறது. அந்த அறக்கட்டளையானது ப்ரீத்திலதாவை, 'பெண்குலத்தின் கலங்கரை விளக்கம்' என்று சிறப்பித்திருக்கிறது.

சிட்டகாங்கில் அமைந்திருக்கும் ஒரு சாலைக்கு ப்ரீத்திலதா வதேதார் சாலை என்ற பெயர் சூட்டப்பட்டிருக்கிறது. 2012-ம் வருடம் பஹர்தலி ஐரோப்பிய கேளிக்கை விடுதிக்கு அருகிலுள்ள ரயில்வே பள்ளிக்கு முன்பாக ப்ரீத்திலதாவின் வெண்கலச் சிலை நிறுவப்பட்டுள்ளது.

விடுதலை இயக்கத்தில் சேர்க்கவேண்டாம் என்று கூறினார். நீண்ட ஆலோசனைக்குப் பிறகு பெண்களை ஆயுதப் போக்குவரத்தில் ஈடுபடுத்தினால் ஆங்கிலேயருக்கு சந்தேகம் வராது என்ற ஒரே காரணத்துக்காக ப்ரீத்திலதாவை விடுதலை இயக்கத்தில் இணைத்துக்கொண்டனர். இந்த வகையில் வங்காளத்தின் முதல் புரட்சிகரப் பெண்ணாக அவர் கொண்டாடப்படுகிறார்.

விடுதலை இயக்கத்தில் தன்னை ஈடுபடுத்திக் கொண்ட பிறகு ப்ரீத்திலதா பிரிட்டிஷாருக்கு எதிரான பல தாக்குதல்களில் தன்னை ஈடுபடுத்திக்கொண்டார். ஜலலாபாத் போரின்போது விடுதலைப் போராளிகளுக்கு வெடிமருந்துகளை விநியோகித்தார்.

ப்ரீத்திலதாவின் இறுதித் தாக்குதலாக அமைந்தது, பஹர்தலி என்ற இடத்தில் இருந்த ஐரோப்பியர்களின் கேளிக்கை விடுதியைத் தகர்த்ததுதான். அந்த கேளிக்கை விடுதியின் வாயிலில் 'நாய்களும் இந்தியர்களும் நுழைய அனுமதி இல்லை' என்ற அறிவிப்புப் பலகையைக் கண்ட சூர்யா சென், அந்த கேளிக்கை விடுதியைத் தகர்க்க விரும்பினார். அந்தத் தாக்குதலை தலைமையேற்று நடத்தும் பொறுப்பு ப்ரீத்திலதாவுக்குக் கிடைத்தது. காளிசங்கர் தே, பீரேஷ்வர் ராய், பிரஃபுல்லா தாஸ், ஷாந்தி சக்கரபர்த்தி, மஹேந்திர சௌத்ரி, சுசில் தே, பன்னா சென் ஆகியோருடன், பஹர்தலி சென்ற ப்ரீத்திலதா, மூன்று குழுக்களாகப் பிரிந்து தாக்குதல் தொடுக்க திட்டமிட்டார். அதற்கு குறிக்கப்பட்ட நாள் செப்டம்பர் 24, 1932. அந்தத் தாக்குதலில் பங்கேற்ற அனைவருக்கும் பொட்டாசியம் சயனைடு வழங்கப்பட்டது, திட்டமிட்ட படியே கேளிக்கை விடுதியின் மீது தாக்குதல் நடத்தப்பட்டது. ப்ரீத்திலதா காளிதேவியே போல் மிக உக்கிரம் கொண்டு தாக்குதல் தொடுத்தார். அப்போது நடந்த துப்பாக்கிச்சூட்டில் ப்ரீத்திலதாவின் காலில் காயம் ஏற்பட்டு ஓட முடியாத நிலைக்கு ஆட்பட்டார். ஆங்கிலேயர்களிடம் பிடிபடாமல் இருக்கவேண்டும் என்பதற்காக, தங்களுக்கு வழங்கப்பட்டிருந்த பொட்டாசியம் சயனடை அருந்தி தன்னுடைய 21-வது வயதிலேயே உயிர்த் தியாகம் செய்தார்.

ஓர் இரவு முழுவதும் பனியில் கேட்பாரற்றுக் கிடந்த அவரது உடல் மறுநாள் காலையில்தான் கண்டெடுக்கப்பட்டது. உடற்கூறு சோதனையில்தான் அவர் சயனைட் அருந்தி இறந்தது கண்டுபிடிக்கப்பட்டது. இந்திய சுதந்திர வரலாற்றில் எத்தனையோ பேர் தங்கள் இன்னுயிரை துச்சமென நினைத்து தியாகம் செய்திருக்கின்றனர். இருப்பினும் சயனைட் அருந்தி உயிர்விட்ட முதல் வீராங்கனை பிரீத்திலதாதான். என்றைக்கும் போற்றத் தக்கது ப்ரீத்திலதாவின் தியாகம்! ●

'சிவோஹம்' ஸ்வாமி விஜயானந்த சரஸ்வதி (யு.எஸ்.ஏ.)

குரு என்பவர் அவசியம்தானா?

ஸ்வாமி விஜயானந்த சரஸ்வதி, 'சிவோஹம்' என்ற பெயரில் திருவண்ணாமலை, உடுப்பி, அமெரிக்காவின் ஃப்ளோரிடா மாகாணத்திலும் ஆசிரமம் அமைத்து வேதாந்த தர்மத்தைப் பரப்பி வருகிறார். ஃப்ளோரிடாவில் இருக்கும் ஆசிரமத்தில் உலக நன்மையின் பொருட்டு ஞாயிறுதோறும் மாலை 6 மணி முதல் ஸ்ரீருத்ரம் ஜபம் மற்றும் அபிஷேகம் செய்து வருகிறார். குருவின் அவசியம் பற்றி அவர் நம்மிடம் உரையாடியதிலிருந்து சில பகுதிகள்...

தெளிவு குருவின் திருமேனி காண்டல்
தெளிவு குருவின் திருநாமம் செப்பல்
தெளிவு குருவின் திருவார்த்தை கேட்டல்
தெளிவு குருவின் திருஉரு சிந்தித்தல்தானே
என்பது திருமூலர் வாக்கு.

நம்முடைய சாஸ்திரங்களில் கூறப்பட்டுள்ள குறிக்கோள்களின்படி நாம் வாழ்வதற்கு வழிகாட்டுபவர் குருதான். நாம் பெறும் பட்டங்களும் பதவிகளும் உலக வாழ்க்கைக்கு பயன்படலாம். ஆனால், நம்முடைய ஆத்மா பிறப்பும் இறப்பும் இல்லாத பெருநிலையான மோட்சத்தை அடையவேண்டும் என்றே நம்முடைய சாஸ்திரங்கள் வலியுறுத்துகின்றன. அந்த உண்மைகளை நமக்குத் தெளிவாகப் புரிய வைப்பவர்தான் குரு. அதற்கு நமக்கு குரு என்று ஒருவர் அவசியம்தான்.



வேதநூல்களும், இன்ன பிற சாஸ்திரங்களும் குருவிடமிருந்து வாய்வழியாக சீடர்களுக்குச் சொல்லி ஏற்கப்பட்டு, இன்று நமக்குக் கிடைத்திருப்பவைதான். எனவே வாழ்க்கையின் லட்சியத்தை அடையச் செய்யக்கூடிய ஞானத்தை நமக்கு போதிக்கக்கூடிய குருவைத் தேர்ந்தெடுப்பது என்பது இயற்கையாகவே அமையவேண்டும். அப்படி ஒரு குருவை நாம் அடைவதற்கு இறைவனே நமக்கு வழிகாட்டி அருள்புரிவான். இதற்கு வரலாற்றில் இருந்து மேற்கோள் காட்டலாம்.

மறைஞானசம்பந்தர் பெரிய மகான். ஆனால், பார்ப்பவர்க்கு மிகவும் எளியவராகக் காட்சி தருவார். ஒருநாள் அவர் ஒரு வீட்டுத் திண்ணையில் அமர்ந்துகொண்டு இறை தியானத்தில் ஈடுபட்டிருந்தார். அப்போது பல்லக்கு மரியாதைகளுடன் உமாபதிசிவம் என்பவர் தெருவில் பவனி வந்துகொண்டிருந்தார். அதைப் பார்த்த மறைஞானசம்பந்தர், 'பட்ட கட்டையில் (காய்ந்த கட்டையில் செய்த பல்லக்கு) பகல்குருடு ஏகுதல் பாரீர்' என்றார். இதனைக் கேட்டவர் யாராக இருந்தாலும், தம்மைப் பழித்துக் கூறியதாக எண்ணி மிகுந்த கோபம் கொண்டிருப்பார். ஆனால், முதிர்ந்த ஞானியான உமாபதி சிவம், உடனே பல்லக்கிலிருந்து இறங்கி, தனக்கு வழிகாட்டக்கூடிய குரு இவரே என்று உணர்ந்து, மறைஞானசம்பந்தர் காலில் விழுந்து வணங்கி தனக்கு குருவாக இருந்து மறைஞானம் போதிக்கும்படிக் கேட்டுக் கொண்டார்.

மறைஞானசம்பந்தர் உடனே அவரை சீடராக ஏற்றுக்கொள்ளவில்லை. அவரை விலக்கிவிட்டு தன் வழியே நடக்கத் தொடங்கினார். உமாபதிசிவமும் விடாமல் அவரைப் பின் தொடர்ந்தார். செல்லும் வழியில் தறி நெய்யும் தொழிலாளர்கள் நூலில் முறுக்கேற்றுவதற்கு கஞ்சி போட்டு வைத்தார்கள். அதைத் தனக்கு உணவாகத்

“அவர்கள் சூடான கஞ்சியாயிற்றே என்று தயங்கியபடியே மறைஞானசம்பந்தர் கையில் ஊற்றினார்கள். சூடான கஞ்சி அவருடைய கைகளைச் சுட வில்லை. அதை ஏந்திக் குடிக்கும்படி உமாபதியைப் பணித்தார்.”

தரும்படிக் கேட்டார். அவர்கள் சூடான கஞ்சியாயிற்றே என்று தயங்கியபடியே மறைஞானசம்பந்தர் கையில் ஊற்றினார்கள். சூடான கஞ்சி அவருடைய கைகளைச் சுட வில்லை. அதை ஏந்திக் குடிக்கும்படி உமாபதியைப் பணித்தார். இதன் தாத்பர்யம் என்னவென்றால், கடினமான வேதப் பொருளைத் தான் வாங்கி பக்குவமாக சீடனுக்குத் தருவது குருவின் கடமை என்பதை உணர்த்துவதே. தொட்டிலிலே கூட குருநாதரின் அருள் சீடனுக்குக் கிடைத்துவிடும். கடவுளை அடைவதற்கு முதற்படி குருநாதர் என்பதை இந்துமதம் வலியுறுத்துகிறது.

நம் சாஸ்திரங்களில் குருவின் தேவையைப் பற்றியும், குரு எப்படிப்பட்ட வராக இருக்கவேண்டும் என்பது பற்றியும் கூறப்பட்டுள்ளது. திருமூலர் தம்முடைய திருமந்திரம் 6-வது தந்திரத்தில்,

குருட்டினை நீக்கா குருவைக் கொள்வர்
குருட்டினை நீக்கும் குருவைக் கொள்ளார்
குருடும் குருடும் குருட்டாட்டம் ஆடி
குருடும் குருடும் குழி வீழுமாறே

அஞ்ஞானமாகிய குருட்டுத் தன்மையை அகற்ற முடியாத, தகுதியற்ற ஒருவரை குருவாக ஏற்றுக் கொள்வது என்பது பார்வையற்ற ஒருவன், பார்வையற்ற மற்றொருவனை வழிகாட்டியாக ஏற்றுக் கொண்டு குழியில் விழுவதற்குச் சமமாகும்.

எனவே, நாம் நம்முடைய வாழ்க்கை லட்சியத்தை அடைய உதவி புரியக்கூடிய மேன்மையான குருநாதர் கிடைக்க, குருவிற்கெல்லாம் மேலான ஆதிகுருவாம் தட்சிணாமூர்த்தியை சரணடைவது ஒன்றே சிறந்த வழி. ●

பொருநைக் கரையில் புனித ஆலயங்கள்!

எஸ்.கண்ணன்கோபாலன்

தாமிரபரணி தியான ஸ்லோகம்

புண்யாயை புண்யபூதாயை
புத்ர்யை மலய பூப்ருத:
ஸர்வதீர்த்த ஸ்வரூபாயை
தாம்ரபர்ண்யை நமோ நம:

வடக்கில் கங்கை போன்ற நதிகள், மழைக் காலங்களில் பொழியும் மழையினாலும், கோடையில் இமயப் பனிமலை உருகி வரும் நீரினாலும் வற்றாத ஜீவநதிகளாகத் திகழ்கின்றன. அதேபோல் எந்நாட்டவர்க்கும் இறைவனாம் தென்னாடுடைய சிவபெருமான், தென்னாட்டிலும் ஒரு ஜீவநதி தோன்றவேண்டும் என்று திருவுள்ளம் கொண்டார் போலும். இமயமலையில் நடைபெற்ற பார்வதி திருக்கல்யாணம் அதற்குக் காரணமாக அமைந்தது. தென் திசை உயர்ந்து வட திசை தாழ்ந்த நிலையில், அகத்திய முனிவரை தென்திசைக்கு அனுப்பி உலகை சமநிலைக்குக் கொண்டு வரும்படி பணித்தார் சிவபெருமான்.

அப்போது பார்வதிதேவி தான் அணிந்திருந்த முத்துமாலையை அகத்தியரிடம் வழங்கினாள். உடனே அந்த முத்துமாலை ஒரு பெண்ணாக மாறியது. திகைத்து நின்ற அகத்தியரிடம் சிவபெருமான், 'அவள் பெண்ணுருவம் கொண்ட நதி. உன் மூலம் அவள் உலகத்துக்கு வளம் தருவாள்' என்று கூறினார்.

அகத்தியரும் தென்திசைக்குப் புறப்பட்டார். தாமிரபரணி எப்போதும் வற்றாத ஜீவநதியாக இருக்க வேண்டும் என்றால் அந்த நதி உற்பத்தியாகும் இடம் எப்போதும் மழைவளம் கொண்டதாக இருக்கவேண்டுமே. வடக்கிலுள்ளதைப் போல் தெற்கிலும் பனிமலை இருந்தால் பிரச்னை இல்லை. ஆனால், பனிமலை இல்லாத தென்னிந்தியாவில் வருடம் முழுவதும் மழைவளம் உள்ள பகுதியில்தான் தன் கமண்டலத்தில் இருக்கும் தாமிரபரணியை விடுவிக்கவேண்டும் என்று நினைத்த அகத்தியர், அதற்கு மிகவும் ஏற்ற இடம் எது என்று சிந்தித்தபோது பொதிகை மலை அவர் மனதில் தோன்றியது. அந்த மலைப் பகுதியில் தென்மேற்கு மற்றும் வடகிழக்கு ஆகிய இரண்டு பருவமழைக் காலங்களிலும் மழைப் பொழிவு இருக்கும் என்பதால், அந்த இடத்தில் தாமிரபரணியை தோன்றச் செய்தால், வற்றாத ஜீவநதியாக வளங்கள் பல கொண்டு சேர்க்குமே! அகத்தியர் பொதிகை மலைப் பகுதிக்கு வந்து சேர்ந்தார்.

கடல் மட்டத்தில் இருந்து சுமார் ஏழாயிரம் அடி உயரத்தில் அமைந்திருக்கிறது பூங்குளம். அங்கிருந்து சுமார் மூவாயிரம் அடி உயரத்தில் அமைந்திருக்கிறது அகத்தியர் கோயில். தற்போது அந்தக் கோயில் கேரள வனத்துறையின் கட்டுப்பாட்டில் இருப்பதால் அவர்கள் அனுமதியுடன் வருடத்தில் சில குறிப்பிட்ட நாள்கள்தான் செல்ல முடியும்.

இந்தப் பூங்குளம் என்ற இடத்தில்தான் அகத்தியர் தம் கமண்டலத்திலிருந்த தாமிரபரணியை உலகம் செழிக்க மனமுவந்து விடுவித்தார் என்கின்றன புராணங்கள்.

தாமிரபரணி நதி பல பெயர்களில் அழைக்கப்படுகிறது. வால்மீகி, வியாசர், காளிதாசன் ஆகியோர் தாமிரபரணி பற்றிக் குறிப்பிடும்போது, 'தாம்பிரபரணி' என்றே கூறியுள்ளனர். தாமிரபருணி,

படங்கள்: **மதன்சுந்தர்**

வற்றாது வளம் சேர்க்கும் ஜீவநதி!

தாமிரவருணி என்றும் அழைக்கப்பட்டு வந்த நதி தற்போது தாமிரபரணி என்று அழைக்கப்படுகிறது.

மற்றொரு செய்தியும் கலைக்களஞ்சியம் என்ற நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது. அதன்படி முற்காலத்தில் இலங்கைத் தீவுக்கு தாம்ரபன்னே என்றும் தாம்பபன்னி என்றும் பெயர்கள் இருந்ததாகவும், அந்தப் பகுதியிலிருந்து இங்கு வந்து குடியேறிய மக்கள், தங்கள் தீவின் பெயரால் இந்த நதியை தாம்பபன்னி என்று அழைத்ததாகவும், அந்தப் பெயரே தாமிரபரணி என்று மருவி அழைக்கப்படுவதாகவும் தெரிய வருகிறது. இலக்கியங்களில் தாமிரபரணி என்ற பெயர் காணப்படவில்லை. பொருநை என்றே இந்த நதி குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் பொருநல், தண்பொருநல், தண்பொருந்தம் என்ற பெயர்களும் வழங்கப்பட்டுள்ளது. சேக்கிழார் பெருமான் பாண்டியநாட்டைப் பற்றிக் குறிப்பிடுகையில், 'தண் பொருநைப் புனல் நாடு' என்றே குறிப்பிட்டுள்ளார்.

என்ன பெயர் கொண்டு அழைத்தால்தான் என்ன, அதன் சிறப்புக்கும், அதன் கரையில் வளர்ச்சி பெற்ற நாகரிகத்தின் மேன்மைக்கும், ஆன்மிகச் செழிப்புக்கும் குறைவேதும் இல்லை!

பொதிகை மலையிலிருந்து நீர்வீழ்ச்சியாக விழும் இடம் பாணதீர்த்தம் என்று அழைக்கப் படுகிறது. இந்தப் பகுதிக்குச் செல்லவும் வனத்துறையினர் அனுமதிப்பதில்லை. (வாசகர்களுக்காக பத்தாண்டுகளுக்கு முன்பு எடுக்கப்பட்ட படம் இங்கே கொடுத்திருக்கிறோம்)

பாணதீர்த்தத்துக்கு மேலேயே பேயாறு, உள்ளாறு என்னும் இரண்டு ஆறுகளும், பாபநாசம் மேலணையில் பாம்பாறு, காரியாறு ஆகிய சிற்றாறுகளும் தாமிரபரணியில் சங்கமிக்கின்றன.

இந்தத் தொடரில் முதலில் சொரிமுத்து ஐயனார் கோயிலை தரிசிக்கச் செல்கிறோம்.

களக்காடு முண்டந்துறை புலிகள் சரணாலய வனப் பகுதிக்குள், பச்சைப் பசேலென மரங்களும் செடிகொடிகளும் அடர்த்தியாக வளர்ந்து பசுமை போர்த்திக் காட்சி தரும் பிரதேசத்தில், ஆலயத்தை ஒட்டி பாறைப் பகுதிகளின் மேலாக தாமிரபரணி சலசலத்து ஓட, மிக ரம்யமான சூழலில் அமைந்திருக்கிறது அருள்மிகு சொரிமுத்து ஐயனார் கோயில். இறைவன் சொரிமுத்து ஐயனார் தம் தேவியர்களான பூர்ணா, புஷ்கலை சமேதராகக் கோயில் கொண்டிருக்கிறார். இந்த இடத்தில்தான் பாணதீர்த்தமும், சாயா தீர்த்தமும் அமைந்திருக்கின்றன.

ஆலயத்தின் தலவரலாறு:

முற்காலத்தில் தென்பகுதியில் பண்டமாற்று வணிகமுறை நடைமுறையில் இருந்தது. தற்போது சொரிமுத்து ஐயனார் கோயில் அமைந்திருக்கும் இடத்துக்கு அருகில் சந்தை நடைபெறுவது வழக்கம்.

ஒருமுறை சந்தைக்கு ஓட்டிக்கொண்டு வந்த வண்டி மாடுகளின் காலடி பட்ட ஓரிடத்தில் ரத்தம் ஊற்றாகப் பெருகியது. அதைக் கண்ட வணிகர்கள் பெருத்த அச்சமுற்றனர். அவர்களின் அச்சத்தைப் போக்கவும், அந்த இடத்தில் நிறைந்திருக்கும் தெய்வ சாந்நித்யத்தை வெளிப்படுத்தவும் ஓர் அசரீரி ஒலித்தது.

அந்த அசரீரி கூறியதன் பின்னணியில்தான் இந்த ஆலயம் அமைந்திருக்கிறது.

அந்தப் பின்னணி..?

தொடரும்



அதிகாரநந்திக் காட்சி வரலாற்று சிறப்பு வாய்ந்தது. ரிஷபத்தின் முகமும் (காளையின் முகம்) சிவ னின் உருவமும் கொண்ட அதிகார நந்தி, ஞானத்தின் தலைவனாகக் கருதப்படுகிறார். அகிலத் தையே காக்கும் ஈஸ்வரனை தானே சுமக்கும் அதிகாரம் பெற்றவர் என்பதால் அதிகார நந்தி என்று அழைக் கப்படுகிறார்.

சிவபெருமானின் வாகனமான நந்தி பகவான். வேதங்களின் முதல்வனாகப் போற்றப்படுகின்றார். 'நந்தி' என்ற சொல்லுக்கு 'மகிழ்ச்சி' என்று பொருள். நான்கு மறைகளையும் ஈசன், நந்தி தேவருக்குத் தான் முதலில் கூறியதாக புராணங்கள் கூறுகின்றன. கயிலைக்கு நிகராகப் போற்றப்படும் மயிலை கபாலீசுவரர் கோயிலில் சிவனாரை சுமக்கும் பேறு பெற்ற அதிகார நந்தியைப் பற்றிய தன் நினை வலைகளை இங்கே பகிர்ந்துகொள்கிறார் ஓவியர் மணியம் செல்வன்.

பொறுப்பாசிரியர்

மயிலாப்பூர் கபாலீஸ்வரர் கோயிலில் பங்குனி மாதம் பிரம்மோற்சவம் நடைபெறும். ஒவ்வொரு உற்சவமும் அப்படியே மனதில் பதிந்துவிடுவது போல் மிகச் சிறப்பாக நடைபெறும். நான் உணர்வு பூர்வமாக இதை அனுபவித்திருக்கிறேன். கொள்ளுத் தாத்தா காலத்தில் இருந்தே நாங்கள் மயிலாப்பூ ரில்தான் வசித்து வருகிறோம்.

ஆரம்பக் காலத்தில் மன்னர்கள் ஆலயங்களை எழுப்பி, சிறப்பான முறையில் வழிபாடுகள் நடைபெறச் செய்தார்கள். பின்னர் செல்வந்தர்கள் அந்தப் பொறுப்பை ஏற்றுக்கொண்டார்கள். அதற்குப் பிறகு பலரும் தங்கள் வழிபாடாகக் கருதி ஆலயத் திருப்பணிகளையும் பூஜை, உற்சவங்களையும் நடத்தி வருகிறார்கள்.

மயிலாப்பூர் கோயில் பங்குனி மாதம் பிரம்மோற்சவத்தின்போது மூன்றாவது நாள் நடைபெறும் உற்சவம் அதிகாரநந்தி உற்சவம். அன்றைய தினம் அதிகாலை ஐந்து மணிக்கே சுவாமி யாக சாலைக்கு எழுந்தருள்வார். சில பூஜைகளுக்குப் பிறகு அதிகாரநந்தி வாகனத்தில் எழுந்தருளி சரியாக ஆறு மணிக்கெல்லாம் கோபுர வாசலில் தரிசனம் கொடுப்பார். இந்த உன்னதமான வைபவத்தைக் காணக் கண் கோடி வேண்டும் என்று பாபநாசம் சிவன் பாடியிருக்கிறார்.



வெள்ளி அதிகார நந்தி சேவையை தரிசிக்க ஆயிரக்கணக்கான பக்தர்கள்

மயிலை கபாலீசுவரர் கோயில்
அதிகார நந்தியின் கதை

மணியம் செல்வன்

உட்பட அதிகார நந்தியின் பொலிவு குன்றாமல் பராமரித்து வருகிறார்கள். எத்தனை வேலைகள் இருந்தாலும், வருடத்தில் குறிப்பிட்ட சில நாள்களை ஒதுக்கி வைத்து இந்த உன்னதமான பணியில் தங்களை ஈடுபடுத்திக்கொள்கிறார்கள். அதனால்தான் நூறு வருடங்களுக்கு முன்பு இருந்த அதே பொலிவுடன் காணப்படுகிறது.

எல்லா கோயில்களிலும் சிற்பங்கள், வாகனங்கள் அழகாகத்தான் இருக்கும். ஆனால், மயிலாப்பூர் அதிகார நந்தியின் கலையம்சம் மிகவும் வியப்பாகத்தான் இருக்கிறது. அதன் கண்கள், நகங்கள், ஆபரணங்கள் என்று அத்தனை தத்ரூபமான கலைநயத்துடன் இருக்கும். ஒவ்வொரு ஆபரணமும் தனித் தனியாகச் செய்து அணிவித்ததுபோல் காட்சி தரும். அருகில் சென்று பார்க்கும்போது அத்தனை அழகாகக் காட்சி தரும்.

என் அப்பா ஒவ்வொரு வருடமும் அதிகார நந்தி சேவையை போட்டோ எடுப்பார்கள்.

மயிலாப்பூர் அதிகார நந்தியைப் போல் மற்ற கோயில்களில் இருப்பதாகத் தெரியவில்லை. அந்த அளவுக்கு அர்ப்பணிப்பு இருந்திருக்கிறது. இது தனிப்பட்ட ஒருவரின் சாதனை கிடையாது. குழுவாக இணைந்து செயல்பட்ட பலரின் சாதனை.

ஆண்டாளைப் போலவும் சபரியைப் போலவும் அர்ப்பணிப்பு மனதுடன் என் கொள்ளுத் தாத்தா மற்றவர்களுடன் சேர்ந்து மிகுந்த ரசனையுடன் உருவாக்கித் தந்ததுதான் மயிலாப்பூர் கபாலீசுவரர் கோயில் வெள்ளி அதிகார நந்தி.

கோயில்களில் பல வாகனங்கள் இருக்கலாம். ரிஷபம், யானை, குதிரை என்று இருந்தாலும் அதிகார நந்திக்கு தனிச் சிறப்பு உண்டு. அந்த வாகனத்தில் சுவாமி எழுந்தருளி நடனமாடும்போது ஏற்படக் கூடிய பரவசத்துக்கு ஈடு இணையே இல்லை.

ஊர் கூடி தேர் இழுப்பது என்று சொல்வார்கள். அப்படித்தான் கோயில் திருவிழாக்களும். ஊர்கூடித் தான் உற்சவங்களை நடத்துவார்கள். சுவாமியை பார்த்துப் பார்த்து அலங்கரிப்பது, அவர் எழுந்தருளப் போகும் வாகனத்தை அழகுபடுத்துவது என்று பலருடைய பங்களிப்பும் இருக்கும். அந்த வகையில் கபாலீசுவரர், அதிகாரநந்தி வாகனத்தில் எழுந்தருளி கோபுர வாசலை அடையும்போது பக்தர்களின் பரவசத்தைக் காணும்போது, இந்தப் புண்ணிய கைங்கர்யத்தில் எங்கள் குடும்பத்துக்கும் ஒரு சிறு பங்கு இருக்கிறது என்ற எண்ணம் தோன்றும்போதெல்லாம், அந்த அரிய பேற்றினை அருளிய கபாலீசுவரரை கரம் கூப்பி வணங்கவே செய்கிறேன்.

வருவார்கள். அப்படி ஓர் அற்புதமான வாகனம் அதிகார நந்தி வாகனம்.

பாட்டும் நடனமுமாக மிக எழிலார்ந்த கோலத்தில் சுவாமி பவனி வரும் வெள்ளி அதிகார நந்தி சேவையின் கதையைப் பார்ப்போம்.

நூறு வருடங்களுக்கு முன்பு எப்படி அதிகாரநந்தி சேவை நடைபெற்றதோ அதேபோல் அந்தப் பொலிவு சற்றும் குறையாமல் இன்றைக்கும் நடைபெற்று வருகிறது.

இந்த அதிகார நந்தி வாகனத்தை என் அப்பாவின் தாத்தாதான் இந்த வாகனத்தை மிக கம்பீரமாகச் செய்தார். என்னுடைய அப்பாவின் கொள்ளுத் தாத்தா 1886ல் வைத்தியத் தொழில் செய்வதற்காக தன்னுடைய குமாரர் குமாரசாமி என்பவருடன் தண்டரையிலிருந்து சென்னைக்கு வந்தார். பொன்னம்பல வாத்தியார் தெருவில் ஒரு வீட்டில் குடியேறி வைத்தியத் தொழிலைத் தொடங்கினார். இன்றைக்கும் அந்த வீடு அங்கே இருக்கிறது. என் கொள்ளுத் தாத்தாவான குமாரசாமி என்பவர்தான் 1917ம் வருடம் மயிலாப்பூர் கபாலீசுவரர் கோயிலுக்கு அதிகார நந்தி வாகனத்தை செய்து அர்ப்பணித்தார். இதற்கு அவர் தன்னுடைய சேமிப்புப் பணத்துடன் அந்தப் பகுதியில் இருந்த மற்றவர்களின் நன்கொடையையும் சேர்த்துச் செய்ததுதான் அதிகார நந்தி வாகனம்.

தாத்தாவுக்கு ஆன்மிகத்திலும் இசையிலும் ஆர்வம் அதிகம். எங்கள் வீட்டிலேயே பஜனைகளும் இசை நிகழ்ச்சிகளும் நடைபெறும்.

இன்றைக்கும் வருடம்தோறும் எங்கள் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் இளைஞர்கள்

பிரிவு உபசார விழா!

சக்தி குழுமத்தின் செய்திகளைத் தாங்கி வந்த பத்திரிகையான 'செய்திமடல்' ஆசிரியராகத் தம் பணியைத் தொடங்கிய கவிஞர் பெ.சிதம்பரநாதன், 1996-ம் வருடம் முதல் 'ஓம்சக்தி' கலை இலக்கிய ஆன்மிக மாத இதழின் இணையாசிரியராகப் பொறுப்பேற்று, கடந்த இருபத்தி ஐந்து வருடங்களாக இரண்டு இதழ்களையும் மிகச் சிறப்பான முறையில் கொண்டு வந்திருக்கிறார்.

இதழ்ப் பணிகளுடன் நின்றுவிடாமல், அருட்செல்வரின் உரைகளையும், கட்டுரைகளையும் புத்தகமாகக் கொண்டு வரும் பொறுப்பையும் ஏற்று திறம்படச் செயல்பட்டார். அருட்செல்வருடன் ஆன்மிக மற்றும் இசை விழாக்களிலும் பங்கு பெற்றதுடன், வெளிநாட்டுப் பயணங்களிலும் உடன் சென்றிருக்கிறார். அருட்செல்வருடன் ஏற்பட்ட அனுபவங்கள் குறித்து 'சுவடு மறையாத பயணம்' என்ற நூலும் எழுதியுள்ளார்.

தம்முடைய முதுமையின் காரணமாக கடந்த 31.3.2021 அன்றுடன் பணியிலிருந்து ஓய்வு பெற்றார். அவருக்கு கடந்த 1.4.2021 அன்று சக்தி சுகர்ஸ் தலைமை அலுவலகத்தில் பிரிவு உபசார விழா நடைபெற்றது. விழாவில் சக்தி சுகர்ஸ் சேர்மன் டாக்டர் ம.மாணிக்கம் அவர்கள் கலந்துகொண்டு ஓம்சக்தி இணையாசிரியர் பெ.சிதம்பரநாதன் அவர்களின் பணிகளைப் பெரிதும் பாராட்டி, பொன்னாடை அணிவித்து கௌரவித்தார்கள். விழாவில் தலைமை அலுவலக உயர் அலுவலர்கள் அனைவரும் கலந்துகொண்டு சிறப்பித்தனர். கவிஞர். பெ. சிதம்பரநாதன் மற்றும் அவரது குடும்பத்தாரும் நீண்ட ஆயுளுடனும் நல்ல ஆரோக்கியத்துடனும் வாழ ஓம்சக்தி ஆசிரியர்க் குழுவினரின் பிரார்த்தனைகளும் வாழ்த்துகளும்.

– பொறுப்பாசிரியர்

அழகன் முருகனின் ஆற்றுப்படை

ஓம் சிவாய நம:

ஓம் மகேஸ்வராய நம:

ஓம் காலகாலாய நம:

நக்கீரர் ஒவ்வொரு மலரையும் சமர்ப்பிக்கும் முன் உச்சரித்த அந்த மந்திர ஒலி அந்தப் பகுதி எங்கும் எதிரொலித்தது. 'ஓம் காரம்' உரத்து ஒலிக்க அந்த செந்தமிழ்ப் புலவன் செய்யும் சிவபூஜையை பஞ்சபூதங்களும் பார்த்தபடி இருந்ததன். மலையில் ஓடும் அந்த ஓடை தன் சலசலப்பை அடக்கிக்கொண்டு சத்தமின்றிப் பூனைபோல நகர்ந்தபடியிருந்தது. மரங்களைக் காற்று தழுவியும் கூட கிளைகள் ஓசையின்றி அசையும் கலையைக் கற்றுக்கொண்டுவிட்டன. நக்கீரர் ஒரு கணம் சுற்றிப் பார்த்தார். பிரபஞ்சமே தன் பூஜையை உற்றுநோக்குகிறது என்ற உணர்வு அவருள் எழுந்தது. அதில் ஒரு பெருமையும் பிறந்தது.

நெற்றிக்கண் திறப்பினும் குற்றம் குற்றமே என்று வாதாடியபோது இருந்த மாயமும் ஆணவமும் மீண்டும் சிந்தை உள்ளே மலரட்டுமா என்று அவரின் சிந்தையின் உத்தரவுக்குக் காத்திருந்தன.

"அடடா, இது என்ன... பெருமைப்படும் நேரமா இது? ஏற்கெனவே பட்ட மமதை யினால் அல்லவா இன்று சிவ அபராதம் ஏற்பட்டு நோய் பற்றியிருக்கிறோம்... மீண்டும் அப்படி ஒரு எண்ணமா..."

நக்கீரர் மீண்டும் பூஜையில் தன் மனதைக் குவிக்க முயன்றார்.

ஓம் கால பைரவாய நம:

ஓம் மகா பலாய நம:

ஓம் மகாபுஜாய நம:

காற்றில் ஒரு வருடலின் ஓசை கேட்டது. நிமிர்ந்து பார்த்தார்.

மரத்திலிருந்து ஓர் இலை தன்னை விடுவித்துக்கொண்டு காற்றில் அசைந்து ஆடத் தொடங்கியது. இலை உதிர்ந்தால் கீழே விழவேண்டியதுதானே... இது எதற்கு இப்படி அழகு காட்டி காற்றில் நாட்டியமாடுகிறது என்று வியந்து பார்த்தார்.

அவர் கவிமனம் ஒரு கணம் திசைமாறியது. அந்த மரம் இந்தப் பிறப்பு. இலை ஆன்மா. அது அற்றுவிட்டால் பூமியை நோக்கி அதாவது பரப்பிரம்மத்தை நோக்கி ஓடி வருவது அல்லவா இயற்கை. ஆனால் ஆன்மாவோ அதை மறுத்து ஆசையாகிய காற்றில் அலைப்பாய்கிறது என்று தோன்றியது.

ஒரு வழியாக இலை கீழே விழுந்தது. விழுந்த இடம் ஓடையின் கரை. பாதி இலை நீரில் பாதி இலை பாறையில். பாறையில் விழுந்த இலை பறவை ஆனது.





நீரில் கிடந்த பாகம் மீனாக ஆனது. ஆகா... இது என்ன மாயம்... பாதி மீனும் பாதிப் பறவையும்... ஒன்று விண்ணை நோக்கிப் பறக்க விரும்புகிறது, மற்றொன்று நீரில் சென்று மூழ்க விரும்புகிறது. அது எப்படி ஒரே இலை இரண்டாகிறது... ஏன் ஆகாது ஒரே மனத்தில் இறைவனும் ஆசையும் இருப்பதில்லையா... ஒரே மனத்தில் அன்பும் பொறாமையும் இருப்பதில்லையா... ஒரே பாற்கடலில் அமுதமும் விஷமும் இருப்பதில்லையா...

கவி மனம் மாயக்காட்சியில் மயங்கி சிவபூஜையை விட்டுவிட்டு வியந்து நின்றது. அப்போது அவர் முன் தோன்றியது கற்கிமுகி என்னும் பூதம்.

"நக்கீரரே, சிவபூஜை தவறியதால் உம்மைச் சிறையில் அடைக்கிறேன்" என்றது.

நக்கீரர் திடுக்கிட்டார்.

"பூதமே என்ன இது அநியாயம்... நான் கவிஞன்... என் மனம் கவிதையில் உழல்வது தவறா... அப்படியே இருந்தாலும் இதுகாறும் நான் தீயவற்றை சிந்திக்க வில்லையே... தத்துவம் அல்லவா என் நெஞ்சை நிறைத்திருந்தது. அது எப்படிப் பாவமாகும்?"

கற்கிமுகி சிரித்தாள்.

"கவிதை என்றாலும் அதற்குக் காலம் இருக்கிறது. அந்தப் பரமேஸ்வரனின் சந்நிதியில் முக்கியம் கவிமனமோ தத்துவமோ இல்லை. சரணாகதி மட்டுமே... அவனை விட உயர்ந்தது இந்த உலகில் எதுவுமே இல்லை. அவன் முன் நிற்கும்போது அவனைப் புகழலாம். அவன் உருவை நினைக்கலாம். அவன் பெருமையைப் பாடலாம். அவன் அழகில் மயங்கலாம். அதை விடுத்து வேறு சிந்தனைகள் நிச்சயம் சிவ அபராதம்தான்"

கற்கிமுகி மேலும் விளக்கம் கொடுக்க முடியவில்லை. நக்கீரரைப் பிடித்து ஒரு சிறையில் அடைத்தாள்.

நக்கீரருக்கு அது சிறையா அல்லது மனிதக் கூட்டத்தை அடைத்து வைக்கும் கூண்டா என்று சந்தேகம் வந்தது. எல்லோரும் நக்கீரரைக் கண்டதும் 'ஓ' வென்று அலறினர். நக்கீரர் அதிர்ந்தார்.

"நானும் உங்களைப் போன்ற மனிதன் தானே... பார்ப்பதற்கு சிவனடியார்கள் போன்று திருநீறுபூசியிருக்கிறீர்கள். ஏன் இப்படி அலறுகிறீர்கள்... " என்று கேட்டார்.

அதற்கு அங்கிருந்தவர்கள், "ஐயா, நாங்கள் உம்மைக் கண்டு அலறவில்லை. எம்மை நினைத்து அழுகிறோம்" என்றனர்.

நக்கீரர், "அதுதானே உலக இயல்பு. அடுத்தவர்களுக்காக நாம் அழுது பழகியிருந்தால் அடுத்த கணம் நாம் தேவர்களாகியிருப்போமே..."

"ஐயா, இந்த வியாக்யானம் எல்லாம் காலன் நம் கண்ணுக்குத் தெரியும்வரைதான். தெரிந்துவிட்டால் புலம்புவதைவிட்டால் வேறு வழி... நம்மைச் சிறையில் அடைத்திருக்கும் பூதம், ஆயிரம் பேர் சேர்ந்ததும் அவர்களைக் கொன்று தின்றுவிடுவதாக சங்கல்பம் செய்திருக்கிறது. இதுவரை 999 பேர்தான் இருந்தோம். சிறு ஆசுவாசம் இருந்தது. இப்போது உம்மோடு ஆயிரமானோம். மரணம் எங்கள் கண்ணுக்குத் தெரிந்துவிட்டது."

"சிவ சீலர்களே... சிறைப்பட்டும் சிலகாலம் நீர்க்குமிழிபோல உடையப்போகும் வாழ்வில் ஆசுவாசமாக இருந்தோம் என்கிறீர்களே... இப்படித்தான் உலக மனிதர்கள் அனைவரும் மரணம் வரும் என்று தெரிந்தும் வாழ்வில் இன்பத்தை நோக்கியே ஓடுகிறார்கள். இருக்கும் வரைக்கும் அனுபவித்துவிடத் துடிக்கிறார்கள். காலன் வந்து அழைக்கும்போதுகூட இன்னும் கொஞ்ச காலம் என்று தவணை கேட்கிறார்கள். அது கிடைக்காமல் போகும்போது துன்பம் மிகுகிறது. நாமோ சிவத்தை சிந்தையில் வைத்தவர்கள்... நாம் அழலாமா... காலன் துரத்தியபோது மார்க்கண்டேயன் என்ன செய்தான்... அதுவல்லவா விவேகம்..."

"நக்கீரரே அப்படியானால் நாம் இப்போது சிவனை வணங்க வேண்டுமா..."

"சரிதான்... சிவ பூஜையில் அபராதம் என்பதுதானே நம் மேல் இருக்கும் வழக்கு. அதற்கு பயந்து சிவ சந்நிதிக்கே செல்வதா... அது விதிமீறிய செயல் அல்லவா..."

"அப்படியானால் நம் கதி..."

"இருக்கிறது. ஒரு வழி இருக்கிறது. எவன் நாம் அழைத்ததும் ஓடி வருவானோ... எவன் சிவனுக்கு இணையானவனோ... எவன் சிவத்திலிருந்து தோன்றி சிவனுக்கே புத்தி சொன்னவனோ அவன் நினைத்தால் நாம் விடுதலை ஆகலாம்."

"புரியவில்லையே... அது யார்... அவன் பெருமைகள் என்ன... சீக்கிரம் சொல்லுங்கள்... காலம் கடப்பதற்குள் அவன் கருணையைப் பெறுவோம்."

"நாம் வறியவர்கள் என்றால் அவன் வள்ளல். அதுவும் பன்னிரு கரங்களால் வாரி வழங்குபவர். அன்பர்தம் உள்ளமெல்லாம் அவன் குடியிருக்கும் இடம் என்றாலும் அவனைத் தேடிச் சென்று பற்றிக்கொள்ள ஆறு இடங்கள் உண்டு. அவை அவன் வீடுகள். பக்தர்கள் படை எடுப்பதால் படை வீடுகள். அவனுக்கோ ஆறுமுகங்கள். ஆறுமுகனுக்கு ஆறு படைவீடுகள் என்பது எவ்வளவு பொருத்தம்.

வாருங்கள்... நம் ஆன்ம வறுமையை நீக்கியருள அவன் திருவருளை நாடுவோம். நான் அவன் பால் உங்களை ஆற்றுப்படுத்துகிறேன். இது ஆற்றுப்படை. அருந்தமிழ்க் காவியங்களில் அழகுக் குழந்தை. நான் பாடப்போவதோ, 'திருமுருகாற்றுப்படை."

சிவனடியார்கள் அனைவரும் நக்கீரரின் முகம் பார்த்து நின்றனர். தங்களைக் காக்கப்போகும் அந்த காப்பு புறப்படும் அவர் விழிகளைப் பார்த்துக்கொண்டிருந்தனர்.

நக்கீரர் ஒரு கணம் கண்ணை மூடினார். அவர் கண்களில் அழகுத் தமிழ் தோன்றியது. அந்தத் தமிழே அழகனாகவும் மாறியது.

நக்கீரர் நாவிலிருந்து தமிழ் புறப்பட்டு நதியாகப் பாயத் தொடங்கியது.

"உலகம் உவப்ப வலன்ஏர்பு திரிதரு
பலர்புகழ் ஞாயிறு கடல்கண் டாஅங்கு...."

உலகம் உவப்பத் திருமுருகாற்றுப்படை நக்கீரரின் நாவில் பிறந்தது. ஒவ்வொரு படைவீடும் அதில் மிளிர்ந்தது. அவற்றில் ஒவ்வொன்றையும் இனி சிந்திப்போம். அருந்தமிழால் முருகனை தியானிப்போம். வாருங்கள்.

– **சிந்திப்போம்**

சென்ற இதழ் தொடர்ச்சி...

குமரியின் மூக்குத்தி 2

வாகீச கலாநிதி கி.வா.ஜகந்நாதன்



வைர மூக்குத்திக்கு மற்ற ராணிகள் கூறிய ஏற்பாட்டைக் கண்ட பட்டத்து தேவி, இன்று மூக்குத்திக்கு வந்த போட்டி, நாளை பட்ட மகிஷி பதவிக்கும் வந்துவிடக்கூடாதே என்பதற்காக சக்கரவர்த்திக்கு ஒரு யோசனை கூறினாள். பட்டத்து தேவி அணியும் அந்த வைர மூக்குத்தியை அவள் தன் மூத்த மகளுக்குச் சீதனமாகக் கொடுத்துவிடுவதென்றும், இப்படியே மகளுக்குத் தாய் கொடுக்கும் சீதனமாகவே அது பரம்பரையாக இருந்து வரவேண்டுமென்றும் ஒரு சம்பிரதாயத்தை ஏற்படுத்தி விட்டாள். அம்பிகை கனவில் வந்து சொன்னதாகவும் வேறு காரணங்கள் இருப்பதாகவும் பட்டத்து ராணி சொல்லி இந்தத் தீர்மானத்துக்கு அரசனுடைய உடன்பாட்டையும் பெற்று விட்டாள்.



அதன்படி இந்த மூக்குத்தி அடுத்த தலைமுறையில் சோழன் மகளும் பாண்டிய அரசன் தேவியுமாகிய ஒருத்தியிடம் சென்றது. பெரும்பாலும் சோழர்கள் பாண்டிய குலத்தில் பெண் கொடுப்பதும் வாங்குவதும் தொடர்ச்சியாக வருவது உனக்குத் தெரிந்ததுதானே? அந்த வழக்கப்படியே இந்த மூக்குத்தி, சோழன் அரண்மனையிலும் பாண்டியன் அரண்மனையிலும் மாறி மாறித் தன் ஒளியை வீசத் தொடங்கியது.

"கேளாய், சந்திரவம்சத்தில் தோன்றிய சக்கரவர்த்தியே! இனிமேல்தான் முக்கியமான கதையைச் சொல்லப்போகிறேன், கவனமாய்க் கேள்" என்று கூறிய பதுமை தன் கதையைத் தொடர்ந்து சொல்லலாயிற்று.

ஒரு சமயம் பராந்தக பாண்டியன் என்னும் அரசன் பாண்டிய நாட்டை ஆண்டு வந்தான். அவனுடைய பட்டத்து தேவியாகிய உலகமுழுதுடையாள் மூக்கில் அந்த மூக்குத்தி ஒளிவிட்டது. அவள் மதுரை மாநகரில் எழுந்தருளியிருக்கும் மீனாட்சியம்மையை நாள்தோறும் தரிசிக்காமல் இருப்பதில்லை. மாதம் ஒரு முறை வெள்ளிக்கிழமையன்று இங்கே வந்து கன்னியாகுமரி அம்பிகையைத் தரிசித்துச் செல்வாள். அதுவரையில் இந்த மூக்குத்தி தாயிடமிருந்து பெண்ணுக்குத் தடையின்றி வந்து கொண்டே இருந்தது. இப்போது உலகமுழுதுடையாளுக்கு மைந்தன் பிறந்தான். மறுபடி இரண்டு பிள்ளைகள் பிறந்தார்கள். அதற்குப் பிறகும் பெண்ணே பிறக்காமல் இருக்கவே அந்த மூக்குத்தி பல பேருடைய ஆசையைத் தூண்டியது. அவளுடைய மூத்த மகனாகிய அரிமர்த்தனனுடைய மனைவி அது தனக்குத்தான் கிடைக்கப் போகிறதென்று எண்ணியிருந்தாள். பட்ட மகிஷிக்குப் பெண் குழந்தை இல்லையாதலால், அந்த மூக்குத்தியைப் பெறும் உரிமை, அடுத்தபடி பட்டமகிஷி ஸ்தானம் வகிக்கப்போகும் தனக்குத்தான் என்று அவள் எண்ணியதில் நியாயம் இருக்கத்தான் இருந்தது. இந்த ஆசையை அவள் பேச்சுவாக்கில் ஒருநாள் அந்தப்புரத்தில் வெளியிட்டு விட்டாள். அதிலிருந்து தீப் பற்றிக் கொண்டது. பாண்டிய அரசர் காது வரைக்கும் அது சென்றது. உண்மையாகவே இது புதிய கலகத்துக்கு விதை என்று எண்ணி அவன் கவலைப்பட்டான்.

பட்டமகிஷிக்கு அடுத்த ராணிக்கு ஒரு மகள் இருந்தாள். "தாயிடமிருந்து மகளுக்குச் செல்வதுதான் சம்பிரதாயமே ஒழிய மருமகளுக்குப் போவது தவறு. மகாராணிக்குச் சொந்தப் பெண் இல்லாவிட்டாலும் பெண் முறையில் இருப்பவள் நான். என்னுடைய பெரியம்மாவுக்கு நான் பெண் தானே? ஆதலால், மூக்குத்தியைப் பெறும் உரிமை எனக்குத்தான்" என்றாள் அவள்.

இந்த மூக்குத்தி ஒரே இடத்தில் இருக்கிறது. சோழர் அரண்மனையிலும் பாண்டியர் அரண்மனையிலும் மாறி மாறி இருந்து வருகிறது. இங்கிருக்கும் பெண் அங்கே போனால் உடன் போயிற்று; அங்கிருக்கும் பெண் இங்கே வந்தால் உடன் வந்தது.

மற்றவர்கள் பார்த்தார்கள். தங்களுக்குக் கிடைக்காமல் தங்களோடு இருக்கும் வேறு ஒருத்திக்குப் போவதாவது என்ற பொறாமை அவர்களுக்கு. அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள்.

"இந்த மூக்குத்தி ஒரே இடத்தில் இருக்கிறது. சோழர் அரண்மனையிலும் பாண்டியர் அரண்மனையிலும் மாறி மாறி இருந்து வருகிறது. இங்கிருக்கும் பெண் அங்கே போனால் உடன் போயிற்று; அங்கிருக்கும் பெண் இங்கே வந்தால் உடன் வந்தது. இப்போது இங்கிருக்கும் பெண் அங்கே போக வழி இல்லை. பெண் இல்லையே ஒழிய மூக்குத்தி இருக்கிறது. அதனால், சோழநாட்டு இளவரசனுக்கு யாரை மணம் புரிவிக்கிறார்களோ, அந்தப் பெண்ணுக்கே போக வேண்டியது இது" என்றார்கள்.

"கையில் இருப்பதை வேண்டாம் என்று கொடுத்து விடுவதா?" என்று உரிமை கொண்டாடியவர்களில் ஒருத்தி கேட்டாள்.

"அப்படி அன்று; அப்படிப் போனது மறுபடியும் அங்கிருந்து இங்கே பெண் வரும்போது இங்கே தானே வரப்போகிறது?" என்றாள் மற்ற ராணிகளில் ஒருத்தி.

"அப்படியானால் என்னையே சோழர்குலத்தில் வாழ்க்கைப்படுத்தி மூக்குத்தியையும் கொடுத்து விடுவது" என்று இரண்டாம் ராணியின் பெண் சொன்னாள்.

"உன்னைச்சோழஇளவரசன்கல்யாணம் பண்ணிக் கொள்ள வேண்டுமே!" என்று மற்றவர்கள் சிரித்தார்கள்.

"ஏன், நான் முறையுடையவள் அல்லவா?"

"நன்றாகச் சொன்னாய்! பட்டமகிஷியின் வயிற்றில் பிறந்தாலொழிய உனக்கு முறை எப்படி உண்டாகும்?" என்று கேட்டாள் ஒருத்தி.

இப்படியாக மறுபடியும் அந்த மூக்குத்தி பாண்டியனுடைய அந்தப்புரத்தில் குழப்பத்தை விளைவித்தது. அரசி உலகமுழுதுடையாள் யோசனையில் ஆழ்ந்தாள். பராந்தக பாண்டியனுக்கு ஒன்றும் விளங்கவில்லை. "இப்போதே அதைப்பற்றிய கவலை எதற்கு?" என்று மேலுக்கு அவன் சொல்லி விட்டான். ஆனாலும் நாளைக்கு இந்தச் சிக்கல் வந்தால் எப்படியாவது முடிவு காணத்தானே வேண்டும் என்ற கவலை மாத்திரம் அவன் உள்ளத்துள் இருந்தது.

மகாராணி இந்தச் சிக்கலைப் பற்றி யோசித்தாள். ஒரு முடிவும் அவளுக்குத் தோன்றவில்லை. ஒரு நாள், வெள்ளிக்கிழமை, இங்கே தேவி கன்னியாகுமரியைத் தரிசிக்க வந்திருந்தாள். "தாயே, இதற்கு நீதான் ஒரு வழி காட்ட வேண்டும்" என்று அவள் பிரார்த்தித்தாள்.

அப்போது தேவியின் மூக்கில் இருந்த மூக்குத்தி பழையதாகப் போனபடியால் கீழே விழுந்துவிட்டது. தான் பிரார்த்தனை செய்யும் போது அது விழவே, மகாராணி அதையே தேவியின் குறிப்பாக ஏற்றுக் கொண்டாள். அவள் உடம்பு புளகம் போர்த்தது. கண்ணீர் தாரை தாரையாக வந்தது. கீழே விழுந்து வணங்கி எழுந்தாள். சரசர வென்று தன மூக்குத்தியைக் கழற்றினாள். கங்கை நீர் அங்கே அபிஷேகத்துக்கு வைத்திருந்தார்கள். அதைக் கொண்டு வரச் செய்து இதைக் கழுவினாள்.

"தாயே, இதை நீ ஏற்றுக்கொள். பாண்டிய குலத்தால் காப்பாற்றப் பெறும் குமரியென்று ஒரு வியாஜத்தை வைத்துக் கொண்டாலும் உண்மையில் நீதான் எங்களைக் காப்பாற்றுகிறாய். உலகத்துக்கெல்லாம் தாயாகிய நீ பாண்டியனுக்குக் குமரியாக அவதாரம் செய்தாய். இன்னும் குமரியாகவே இருக்கிறாய். நீதான் இதை ஏற்றுக்கொள்ளுவதற்கு உரிய குமரி. என்னைப் போன்றவர்கள் நாசியில் இது இருந்தால் உலக மணத்தோடு இனைந்து காம, குரோத, லோப, மோக. மத, மாத்சரியங்களை உண்டாக்கும். உன் நாசியில் இருந்தால் ஞான மணம் வீசும்.

அரண்மனையும், குலமும், நாடும் மாறி மாறிச் சென்று நிலையின்றி வாழும் இதற்கு, இனிமேல் நிலையுள்ள வாழ்வு கிடைக்கட்டும். எவள் எப்போதும் குமரியோ அவளை அடைந்தால் இதற்கு ஊர் சுற்றுகிற வேலை இல்லாமற் போய்விடும். தாயே! எங்கள் கவலை ஓய்ந்தது; சிக்கல் தீர்ந்தது. உடம்பிலுள்ள ஆதாரங்களில் உள்ள கிரந்திகளாகிய முடிச்சைப் பேதிக்கும் லலிதாம்பிகை அல்லவா நீ? இந்த முடிச்சையும் பேதித்து விட்டாய். தாயே! எங்கள் குலத்துக்குக் குமாரியே! எனக்கும் நீதான் குமாரி. இந்தா! நீ கன்னியாக இருந்தபடியே இந்தச் சீதனத்தை ஏற்றுக்கொள்" என்று கங்கையால் கழுவிய அதைத் தன் கண்ணீராலும் கழுவி அர்ச்சகர் கையில் அளித்தாள்.

அவர் பிரமித்துப் போனார். என்றும் இல்லாதபடி அம்பிகையின் பழைய மூக்குத்தி இன்று விழுந்த போது உண்டான ஏக்கம் இப்போது நீங்கிவிட்டது. அது அம்பிகையின் திருநாசியில் நட்சத்திரத்தை போல் ஒளிவிடத் தொடங்கியது. பாண்டியன் இந்த முடிவை ஏற்றுக் கொண்டான். உலகமே ஏற்றுக்கொண்டது. அத்தகைய மூக்குத்தியை நீ உன் கண்ணாலும் கருத்தாலும் அழுக்கு ஆக்கலாமா? சொல். அது பாவம் அல்லவா?

பராக்கிரம பாண்டியன் கண்ணைத் திறந்து பார்த்தான். பதுமை விளக்கு ஒளிர்ந்துகொண்டே யிருந்தது. லலிதா சஹஸ்ரநாமம் முடியும் தறுவாயில் இருந்தது. 993ஆம் நாமமாகிய "ஓம் அஞ்ஞான த்வாந்த தீபிகாயை நம:" (அஞ் ஞானமாகிய இருட்டைப் போக்கும் தீபம் போல் உள்ளவள்) என்பதைச் சொல்லிக் குங்குமத்தை அம்மையின் திருவடியில் இட்டார் அர்ச்சகர்.

பாண்டியன் கண்ணில் நீர் அரும்பியது. "ஆம், தாயே! நீ என் அஞ் ஞானத்தை இப்போது போக்கி விட்டாய். இந்த விளக்குப் போக்கியதா? நீதான் போக்கினாயா? அல்லது உன் திருநாசியில் உள்ள அணி, மாயையை உண்டாக்கிப் பின்பு துடைத்துவிட்டதா? எனக்கு ஒன்றும் விளங்கவில்லை. நான் மனசால் பாவியாகிவிட்டேன். இதற்குப் பிராயச்சித்தம் செய்யத்தான் வேண்டும்" என்று சொல்லிக் கன்னத்தில் அறைந்துகொண்டான்.

"ஓம் லலிதாம்பிகாயை நம:" என்று அர்ச்சகர் அர்ச்சனையை நிறைவேற்றினார்.

பிறகு பாண்டியன் தான் செய்த அபசாரத்துக்குப் பிராயச்சித்தம் செய்தான். பல அரிய வைரங்களைத் தொகுத்து ஆபரணங்கள் செய்து அம்பிகைக்குப் பூட்டினான். அவன் தான் நினைத்த பிழைக்கு இரங்கித் தன் கண்ணிலிருந்து கண்ணீர் முத்துகளை உதிர்த்தபோதே அம்பிகை அவனை மன்னித்து விட்டாளே!

ஏஆர்சி ரிட்ரெடிங் கம்பெனி (பி) லிமிடெட்

மதிப்பிற்குரிய வாடிக்கையாளர்களின் தொடர்ந்த நல் ஆதரவினால்
பொன்விழா ஆண்டை கடந்து சேவை செய்வதில்
பெருமிதமும் மகிழ்ச்சியும் கொள்கிறோம்

மேலும் தங்களது தொடர்ந்த ஆதரவினை எப்பொழுதும் போல் கொடுத்து
ஆதரிக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

உழைப்பு! தரம்! சிக்கனம்! இவற்றின் சின்னம்

ARC

டிரக்குகள், இலகுரக வாகனங்கள் மற்றும் கார் ஆகியவற்றின் டயர்களை
MRF ப்ரீக்யூர்ட் முறையில் ரிட்ரெடிங் செய்வதில் நாங்கள் வெற்றிநடை
போட்டு முன்னணியில் திகழ்கின்றோம்.

மேலும் கன்வென்சனல் முறையில் டிரேக்டர் உட்பட எல்ல வகையான டயர்களையும்
ரிட்ரெடிங் செய்வதற்கும், ரேடியல் டயர்களை ரிட்ரெடிங் செய்வதற்கும் தேவையான
அனைத்துச் சிறப்பு திறனையும் எங்களது நிறுவனங்கள் பெற்றுள்ளன.

பதிவு அலுவலகம் :

ஏஆர்சி ரிட்ரெடிங் கம்பெனி (பி) லிமிடெட்

(ஏபிடி - சக்தி குரூப்)

64, டாக்டர் நஞ்சப்பா சாலை, கோயமுத்தூர் - 18

தொலைபேசி : 0422-2234500, 2234600

கிளை அலுவலகம் :

10-ஏ/1, திருவனந்தபுரம் ஹைரோடு, திருநெல்வேலி - 627 002

போன் : 2502403

படம் : த.ஸ்ரீநிவாசன்

ஒரு மனிதனின் வெற்றியை நிர்ணயிப்பது எது?

சுவாமி தயானந்த சரசுவதி

ஆசைகளை நிர்வகிப்பது:

ஆசைகள் நிரம்பிய வாழ்வு என்பது தனி மனித இயல்பு. ஆனாலும், அனைத்து ஆசைகளும் நிறைவேறுவதில்லை.

விரும்பத் தகுந்த மற்றும் விரும்பத் தகாத ஆசைகள் இரண்டையும் சம பாவத்துடன் பார்க்கும் மனநிலை ஆசைகளை நிர்வகிப்பதில் தான் அடங்கியுள்ளது. ஆக, ஆசைகளை நிர்வகிப்பது என்றால் என்ன? அது உன்னுடைய செயல்பாட்டின் விளைவை சமநிலையில் ஏற்றுக்கொள்ளும் திறனைப் பொறுத்துள்ளது. 'நித்யம் ச சமசித்தத்வம் இஷ்டாநிஸ்தோபபதிக' அதாவது அமைதியான மனதுடன் விரும்பத் தகுந்த மற்றும் விரும்பத் தகாத ஆசைகளை சமபாவத்துடன் ஏற்றுக்கொண்டால், நீ எப்போதும் வெற்றியாளனாக இருப்பாய். உன்னுடைய ஆசைகள், உன்னுடைய சந்தோஷத்தை பாதிக்காத வகையில் அவற்றை நீ கையாளவேண்டும். ஆனால், உன்னுடைய ஆசைகளின் நிறைவுதான் உனக்கு சந்தோஷத்தைத் தரும் என்று நினைத்தால் நீ தோல்வியாளனாகத்தான் இருப்பாய்.

செயலும் அதன் விளைவுகளும்:

என்னுடைய செயல்பாட்டின் விளைவை ஆரோக்கியமான முறையில் ஒத்துக்கொள்வதே நான் ஒரு வெற்றியாளன் என்பதற்கு சான்று. ஒவ்வொரு செயலும் எனக்கு நான்கு வகையான விளைவுகளை அல்லது முடிவுகளைக் கொடுக்கும். அது என் எதிர்பார்ப்புக்கு இணையாகவோ, கூடுதலாகவோ, குறைவாகவோ அல்லது எதிர்மறையாகக் கூட இருக்கலாம். நான் பேருந்தில் செல்ல நினைக்கிறேன். அதேபோல் நான் சாலையைக் கடந்து பேருந்தில் ஏறிச் சென்றால் அது என் எதிர்பார்ப்புக்கு இணையானது; நான் சாலையைக் கடந்ததும் எவரேனும் ஒருவர் என்னைத் தன் வாகனத்தில் ஏற்றிச் சென்றால் அது என் எதிர்பார்ப்புக்குக் கூடுதலானது; நான் சாலையைக் கடந்தும் பேருந்தை தவறவிட்டால் அது என் எதிர்பார்ப்புக்குக் குறைவு; சாலையைக்

சென்ற இதழ் தொடர்ச்சி

கடக்கும்போது விபத்து ஏற்பட்டு நான் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டால், அது என் எதிர்பார்ப்புக்கு எதிரானது. இப்படி நான்கு விதமான விளைவுகளில் ஏதேனும் ஒன்றைச் சந்திக்க நாம் தயார்படுத்திக்கொள்ளவேண்டும்.

ஆசை என்பது மனிதர்களின் இயல்பு. அது ஆடம்பரத்துக்காகவும் இருக்கலாம். அத்தியாவசியத் தேவைக்காகவும் இருக்கலாம். அதேபோல் காலத்துக்கேற்ப ஆசைகளுக்கான அளவுகோல்களும் மாறுபடுகின்றன. ஒருகாலத்தில் ஆடம்பர சாதனமாக இருந்த குளிர்சாதனம் இன்றைக்கு அத்தியாவசியமாக மாறிவிட்டது. அதேபோல் மின்ஆக்கி (Invertor) முன்பு ஆடம்பரமாக இருந்து இப்போது அத்தியாவசியமாக மாறிவிட்டது. நாம் நம்முடைய ஆசைகளைக் கையாள்வதில் வல்லவராக இருப்பதே நம் வாழ்க்கையை நிர்வகிப்பதற்கு உதவும்.

நிறைவேறாத ஆசைகளுக்கான காரணங்கள்:

நம் எதிர்பார்ப்புக்கேற்றபடி ஆசைகள் நிறைவேறாதபோது தோல்வியை எதிர்கொள்கிறோம். இதற்கும் ஒரு தீர்ப்புரை உண்டு. நான் தோல்வி அடைந்ததற்கு என்னுடைய முயற்சி பற்றாக்குறையோ அல்லது என்னுடைய முயற்சியைத் தடுக்கும் மனிதர்களோ அல்லது அவர் என்னுடைய போட்டியாளராகவும் இருக்கலாம். இத்தகைய இடையூறுகள் இல்லாமல் நமக்கே தெரியாத ஒரு காரணியும் இருக்கலாம். அதுவே கர்மா என்பது. அந்தக் கர்மா நம்மை முட்டி மோத வைத்து சாதனையாளனாகவும் செய்யும்; நம்மைத் தோல்வியடையவும் செய்யும்.

தடையின்றி உழைப்பதன் பலன்:

ஆசைகள் நிறைவேறச் செய்ய உழைக்கவேண்டும். அதே நேரம் அதனால் ஏற்படக்கூடிய நான்கு விளைவுகளில் ஏதேனும் ஒன்றை சந்திக்கவும் தயாராக இருக்கவேண்டும். இந்த மனநிலை ஏற்பட்டால் பாதிக்கமாட்டோம். மனஅமைதியும் நிலைக்கும். அமைதியான மனநிலை வாய்க்கப் பெற்றவன், எதிர்மறை விளைவுகளைக் கண்டு சோர்ந்து விடாமல், தடையின்றி உழைத்து தன் ஆசைகளை நிறைவேற்றிக்கொள்வதில் வெற்றி பெறுகிறான். நிறைவேறாத ஆசைகள் உன்னை பாதிக்காத வரை நீ அவற்றை வெற்றி கொண்டவனாக இருப்பாய். இல்லாவிடில் நிறைவேறாத ஆசைகள் உன்னை வென்று உனக்கு அழுத்தம் தந்து உன் நிம்மதியைக் குலைத்துவிடும்.



ஆசைகளை நிர்வகிப்பது என்பது அவற்றை நிறைவேற்றுவதற்குச் சமமானது. நிறைவுக்காக மகிழ்ச்சியாக செயல்படவேண்டும். அதில் வெற்றி கிடைக்காவிட்டாலும் மகிழ்ச்சிக்குத் தடை வராது. இது எல்லோருக்கும் பொருந்தும். எந்த ஒரு வேலையாக இருந்தாலும் திட்டமிட்டு அவற்றைச் செயல்படுத்தினால் வெற்றி பெறலாம். ஒருவேளை வெற்றி பெறாவிட்டாலும், அந்த அனுபவ அறிவானது அடுத்த செயலுக்குப் பயன்படும். இதில் வருத்தப்படுவதற்கு எதுவும் இல்லை. மனிதர்கள் அனுபவத்தின் மூலமே பலவற்றைக் கற்றுக்கொள்கிறார்கள். இந்த முறையைப் பின்பற்றி வந்தாலே வெற்றி, தோல்விகளை சமநிலையில் எடுத்துக்கொள்ளும் பக்குவமும், நிர்வகிக்கும் திறமையும் மேம்படுவதுடன், தடைகளைத் தகர்த்தெறியும் நம்பிக்கையும், பகுத்துணர்ந்து செயல்படும் திறனும் வளரும்.

'Need for Personal Reorganisation' என்ற ஆங்கில நூலில் இருந்து சில பகுதிகள்.

தமிழில்: **நிவேதிதா**

இந்தியன் ஜர்னல் ஆஃப் பேசிக் அண்ட் அப்ளைட் மெடிக்கல் ரிசர்ச் இதழில் சமீபத்தில் வெளிவந்த ஆங்கிலக் கட்டுரையின் தமிழ் வடிவம்...

கோவை இ.எஸ்.ஐ. மருத்துவமனையில் கொரோனா நோயாளிகளுக்கு லிபோசொமல் வைட்டமின் சி கொடுத்ததன் விளைவு பற்றிய ஆய்வறிக்கையின் சுருக்கம்...



கொரோனா வைரஸ் எளிதில் பரவக்கூடிய தன்மை உடையதாதலால் அதிக அளவில் பாதிப்பை ஏற்படுத்தி உள்ளது. கொரோனாவால் பாதிக்கப்பட்டவர்கள் இருமும்போது வெளிப்படும் எச்சில் மூலம் அருகில்உள்ளவர்களுக்குஎளிதில்பரவும். இந்த வைரஸ் பல நாள்கள் உயிருடன் இருக்கும் தன்மையுடையதாகும். இந்த நுண்கிருமியானது உடலின் பல உறுப்புக்களை செயலிழக்கச் செய்து இறுதியில் மரணத்துக்கு வழிவகுக்கிறது. வைட்டமின் சி சத்து நிறைந்த உணவு அல்லது மருந்தை உட்கொள்வதால் இந்த கிருமியின் தாக்கத்தில் இருந்து எளிதில் குணம் பெறலாம்.

வைட்டமின் சி:

வைட்டமின் சி நீரில் கரையும் தன்மை உடையது. ஆன்டிஆக்ஸிடன்ட் நிறைந்துள்ளதால் உடல் அணுக்களில் நோய் எதிர்ப்புச் சக்தியை அதிகரிக்கிறது. நெல்லி, சாத்துக்குடி, ஆரஞ்சு, எலுமிச்சை, தக்காளி,கிவி பழம், உருளைக்கிழங்கு, கீரை வகைகள் அனைத்தும் வைட்டமின் சி சத்து நிறைந்த உணவு வகைகளாகும். எளிதில் கரையக்கடியதால் ரத்த அணுக்களில் கலந்து விடுகிறது.

நாள் ஒன்றுக்கு ஆண்கள் 90 மி.கிராம் பெண்கள் 75 மி.கிராம் அளவில் வைட்டமின் சி எடுத்துக் கொள்ளலாம் என்று பரிந்துரைக்கப்படுகிறது. இரைப்பைக் குடல் தொந்தரவு இல்லாதவர்கள் இரண்டு கிராம் வரை வைட்டமின் சி யை எடுத்துக் கொள்ளலாம். அஸ்கார்பிக் அமிலத்தை உடலால் தன்னிச்சையாக உற்பத்தி செய்ய முடியாது. இதன் காரணமாக வைட்டமின் சியை உணவில் சேர்த்துக் கொள்வது அவசியம்.

மிராக்கிள்

என்றாலே அதிசயம்தான்!

கொரோனாவால் பாதிக்கப்பட்ட 100 நோயாளிகளுக்கு லிபோசொமல் வைட்டமின் சி நிறைந்த பானத்தை கொடுத்ததைப் பற்றிய ஆய்வில் அவர்களிடம் பெருமளவில் முன்னேற்றம் உள்ளதாகத் தெரிய வருகிறது. 1கிராம் அளவு வைட்டமின் சி நிறைந்த 200 மி.லிட்டர் பானத்தை நாளுக்கு இருமுறை 2 பாக்கெட்டுகள் வழங்கப்பட்டது. விருப்பப்பட்டவர்களுக்கு கபசுரக் குடிநீர் வழங்கப்பட்டது.

இதன் மூலம் 89 சதவீத நோயாளிகள் மூன்று முதல் நான்கு நாள்களிலேயே குணமடைந்ததாகத் தெரிய வந்தது. கொரோனாவால் ஏற்படக்கூடிய பக்கவாதம்கூட வைட்டமின் சி எடுத்துக்கொள்வதால் தடுக்கப்படுகிறது.

முடிவுரை:

கொரோனா அதிக அளவில் பரவி வரும் இந்தச் சூழ்நிலையில் அதை அழிக்கும் மருந்தும் கண்டுபிடிக்க முடியாத நிலையில், வைட்டமின் சி நிறைந்த உணவு அல்லது மருந்தை உட்கொள்வதால் நோய் எதிர்ப்புச் சக்தி அதிகரித்து கொரோனாவிலிருந்து விரைவில் நிவாரணம் பெற்றுவிடலாம் என்று அறியப்பட்டுள்ளது. இந்த உண்மையை உணர்ந்துகொண்ட சக்தி சுகர்ஸ் தலைவர் டாக்டர். மாணிக்கம் மகாலிங்கம் அவர்கள் மருத்துவர்களின் உதவியுடன் தாயாரித்த 'மிராக்கிள்' என்ற வைட்டமின் சி பானத்தை கோவை மருத்துவமனையில் கொரோனாவால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கியதை அந்த ஆய்வறிக்கையில் குறிப்பிட்டு அவருக்கு தங்கள் நன்றிகளையும் தெரிவித்துக் கொண்டுள்ளனர்.


Happy Solar New Year

Puthandu- Tamilnadu, Baisakhi- Punjab and North, Rongali Bihu-Assam, Vishu- Kerala, Pana Sankranthi- Orissa, Poila Boishakh- Bengal

Let us celebrate with the immunity supporter

Mirakle at 4 packs a day has done the following according to research done.

89 % of patients improved symptomatically on 3-4 days with oral high dose liposomal vit-c (Mirakle)
The tiredness and myalgia improved in 76 % patients on third day.
Anosmia improved in 4 days in 88 % of patients .
Sore throat and cough improved on 3-4 days in 90 % of patients
and diarrhoea improved on 3rd day in 72% of patients

www.mirakle.life

சக்தி சுகர்ஸ் தலைவர் டாக்டர்.மாணிக்கம் மகாலிங்கம் அவர்கள் தங்கள் நிறுவனத்தின் சார்பாக தயாரித்துள்ள வைட்டமின் சி நிறைந்த பானமான 'மிராக்கிள்' (Mirakle) பானத்தின் சார்பாக வெளியிட்ட தமிழ்ப் புத்தாண்டு வாழ்த்து நம்மை மிகவும் கவர்ந்துவிட்டது. ஒவ்வொரு மாநிலத்திலும் புத்தாண்டுக்கு வழங்கப்பெறும் பெயர்களுடன், இந்தப் புத்தாண்டை நோய் எதிர்ப்புச் சக்தியை அதிகரிக்கும் மிராக்கிள் ஊட்டச்சத்து பானத்துடன் கொண்டாட அழைக்கும் வண்ணம் அமைந்திருக்கும் அந்த வாழ்த்து அட்டை இங்கே...

ஆழ்ந்த பக்தி இருந்தால் எதுவும் சாத்தியமே !



பாம்பன் சுவாமிகள் முருகப்பெருமானிடம் ஆழ்ந்த பக்தி கொண்டிருந்தவர். தலங்கள்தோறும் சென்று வழிபட்டு வந்த பாம்பன் சுவாமிகள் ஒருமுறை காஞ்சிக்குச் சென்று ஏகாம்பரநாதர், காமாட்சி அம்மன் ஆலயங்களை தரிசித்துத் திரும்பியபோது, காஞ்சி குமரக்கோட்டத்தில் அருளும் முருகப்பெருமான், ஒரு சிறுவனாக வந்து பாம்பன் சுவாமிகளை குமரக்கோட்டத்துக்கு அழைத்துச் சென்று வழிபடச் செய்த அதிசயம் பாம்பன் சுவாமிகளின் வாழ்க்கையில் நிகழ்ந்திருக்கிறது. அந்த அளவுக்கு முருகப்பெருமானின் பேரருளுக்குப் பாத்திரமானவர் பாம்பன் சுவாமிகள். அவருடைய வாழ்க்கையில் நிகழ்ந்த ஓர் அற்புத சம்பவம்... பாம்பன் சுவாமிகள் முருகப்பெருமானின் தலங்களை தரிசித்திருந்தாலும், அவரால் பழநிக்குச் சென்று பழநி ஆண்டவரை தரிசிக்க முடியவில்லை. அதன் பின்னணியில் அமைந்துள்ள நிகழ்ச்சி இதுதான்.

பாம்பன் சுவாமிகளின் இயற்பெயர் அப்பாவு என்பதாகும். அவர் ஒருநாள் அங்கமுத்து பிள்ளை என்பவரிடம், தான் பழநிக்குச் செல்லப்போவதாகக் கூறினார். எங்கே அவர் பழநிக்குச் சென்றால் திரும்பி வராமல் சந்நியாசம் வாங்கிவிடுவாரோ என்ற எண்ணம் அங்கமுத்து பிள்ளைக்கு. எனவே, அவர் பாம்பன் சுவாமிகளிடம், ‘‘நீ பழநிக்குப் போவதற்கு முருகன் உத்தரவு கொடுத்து விட்டானா?’’ என்று கேட்டார். உடனே பாம்பன் சுவாமிகள் சற்றும் தயங்காமல், ‘‘ஆம், நான் பழநிக்கு வருவதற்கு முருகப் பெருமான் உத்தரவு கொடுத்துவிட்டான்’’ என்று கூறினார். அன்று மதியம் அவர் பக்திப் பாடல்களைப் பாடிக்கொண்டு இருந்தபோது, அவருக்கு நேராக வானத்தில் காட்சி கொடுத்தார் முருகப்பெருமான். அழகின் இலக்கணமான முருகப்பெருமானின் தோற்றம் அச்சுறுத்தும் வண்ணம் இருந்தது. தன் வலக் கை சுட்டு விரலை நீட்டி, ‘‘நானா உன்னைப் பழநிக்கு வரும்படி அழைத்தேன்? ஏன் அப்படி சொன்னாய்?" என்று கோபத்துடன் அச்சுறுத்துவது போல் கேட்டார். ஆனாலும் முருகனின் அந்தத் தோற்றம் கண்டும் சற்றும் அச்சம் கொள்ளாத பாம்பன் சுவாமிகள், ‘‘நான் எதற்காகப் பொய் சொன்னேன்? உன் அருள் பெற்று துறவறம் மேற்கொள்ள வேண்டும் என்று விரும்பினேன். அப்படியிருக்க அது தவறாகுமா’’ என்று கேட்டார்.

"என் பக்தனான நீ பொய் சொன்னது தவறுதான். இனி என் உத்தரவு கிடைக்கும் வரை நீ பழநிக்கு வரவே கூடாது’’ என்று உத்தரவும் போட்டு விட்டார். பாம்பன் சுவாமிகள் மகாசமாதி அடையும் வரை அவருக்கு பழநிக்குச் சென்று முருகப்பெருமானை தரிசிக்கும் பாக்கியம் கிடைக்கவே இல்லை. அப்படியிருந்தும் பழநி முருகப்பெருமானை நேரில் தரிசித்தது போன்ற அனுபவத்தில் பாம்பன் சுவாமிகள் `பழநிப் பதிகம்' என்று பத்து பாடல்களை இயற்றி அருளினார். அவற்றில், பழநி முருகப் பெருமானின் திருவுருவத்தை அப்படியே வர்ணிக்கும் வகையில் அமைந்த ஒரு பாடல் இதோ உங்களுக்காக...

முண்டிதம் இல் சிறு சிகையும் இடையில் அணி கவுசனையும்
முழு மதியம் என மிளிரும் முகமும் ஒருகைத்
தண்டும் உரம் உறு புரியும் இளமை உடை உருவும் எழில்
தர இலக இருடி சுரர் அடிகள் எவரும்
கண்டு நலன் அடையவென அமிர்தம் மழை பொழி பெரிய
கருவி கவி பழநிமலை உறை பெரியவன்
தொண்டன் என உள எனது மனதில் உளன் இரவு பகல்
துணையும் அவன் அணைவும் அவன் நினைவும் அவனே.

நேரில் செல்லவில்லை என்றாலும் பழநியாண்டவரின் தோற்றத்தை அப்படியே வர்ணித்துப் பாடக்கூடிய அளவுக்கு முருகபக்தியில் ஆழ்ந்திருந்தார் பாம்பன் சுவாமிகள். ●

உங்கள் மனம் மகிழும்
வாகனத்தை தேர்ந்தெடுப்பீர்
FORCE
MOTORS
TRAX CRUISER
புதிய
TRUMP 40
3 சிலிண்டர் MERCEDES
Derived Engine மற்றும் Gear Box
4,4,4
FORCE
GURKHA E.O.V.
BUILT FOR WAR
Traveller
SIMPLY WORLD CLASS
Luxury
கல்வி மற்றும் வர்த்தக நிறுவனங்களுக்கு
ஏற்றதொரு வாகனம்
Available in 9 to 20 Seats
விவசாயிகளின்
செல்வ வெற்றிக்கு
BALWAN
400, 450 & 500
FORCE
MAN
MAN FORCE TRUCKS Pvt. Ltd.
MAN TRUCKS
The New Force in India
NM நா. மகாலிங்கம் & கம்பெனி
68, Dr. நஞ்சப்பா ரோடு, கோவை-18. ✆ 2239800, 2239808
செல் : 98438-84900, 98438 84920 பொள்ளாச்சி : ✆ 224096, 98438 84931
திருப்பூர் : ✆ 2478665, 98438-84902 ஈரோடு : 98438 84940

ராசிபலன்

(அஸ்வினி, பரணி கார்த்திகை 1– ம் பாதம்)

செயல் வீரன் என்று மற்றவர்களால் பாராட்டபடக்கூடிய அளவு திறன் மிக்க மேஷ ராசி அன்பர்களே, உங்கள் ராசிநாதன் செவ்வாய் பகவான் உங்கள் ராசிக்கு 3 - ல் சஞ்சரிப்பதால் இதுவரை இருந்த தடைகள், பிரச்னைகள் நீங்கி வாழ்வில் சுபம் உண்டாகும். நன்மைகள் பல நடக்கும். உங்கள் ஆளுமைத் திறன் வெளிப்படும். உடல் ஆரோக்கியம் மேம்படும். முகப்பொலிவு கூடும். குடும்ப விஷயங்களில் விட்டுக் கொடுத்துச் செல்வது நல்லது. பொருளாதார நிலையில் ஏற்றத் தாழ்வு வந்து நீங்கும். பேச்சில் அதிக கவனம் தேவை. உடன் பிறப்புகளால் மனகசப்புகள் இருந்தாலும் ஆதாயம் உண்டு. மனதில் தைரியம், தன்னம்பிக்கை அதிகரிக்கும். எதிலும் உற்சாகத்துடனும், தன்னம்பிக்கையுடனும் செயலபட்டு வெற்றி பெறுவீர்கள்.

தாயால் அனுகூலம் உண்டு. தாய் மற்றும் உறவுகளால் மகிழ்ச்சி ஏற்படும். வீடு, வாகனம், சொத்து தொடர்பான விஷயங்கள் சாதகமாக அமையும். மன அமைதி உண்டாகும். குழந்தைகளால் மகிழ்ச்சி உண்டு. குழந்தைகளின் செயல்பாடுகள் பெருமைப்படக்கூடியதாக இருக்கும். பூர்வ புண்ணிய பலனை முழுமையாக அனுபவிக்கும் காலம் இது. குழந்தை இல்லாதவர்களுக்கு குழந்தை பாக்கியம் கிடைக்கும். பூர்வீக சொத்தால் ஆதாயம் உண்டு. நீண்டநாள் பிரார்த்தனையை நிறைவேற்றுவீர்கள். குலதெய்வ மற்றும் இஷ்டதெய்வ அனுகூலம் உண்டு. மனைவி வழிவருமானமும், மனைவிவழி உறவுகளால் ஆதாயமும் உண்டு.

சிறு பிரச்னைகள் இருந்தாலும் அதை சமாளிக்கும் ஆற்றலும் உண்டு. தந்தையால் அனுகூலம் உண்டு. தொழில் மற்றும் உத்தியோகத்தில முன்னேற்றம் உண்டு. உங்கள் செயல்பாடு மற்றவர்களால பாராட்டப்படும். நீண்ட நாள் ஆசைகள், கனவுகள் நிறைவேறும்.

அதிர்ஷ்ட நாள்கள்; மே 3, 4, 5, 6, 7, 22, 23, 24.

சந்திராஷ்டம நாள்கள்; மே 26, 27

பரிகாரம்; ஸ்ரீ துர்கைக்கு பூஜை செய்து வழிபடுவது நன்மை தரும்.

(கார்த்திகை 2,3,4– ம் பாதம், ரோகிணி, மிருகசீரிடம் 1,2 – ம் பாதம்)

தான் மட்டுமல்லாது தன்னைச் சார்ந்தவர்களும் நலம் பெற நினைக்கும் ரிஷப ராசி அன்பர்களே, உங்கள் ராசிநாதன் சுக்கிர பகவான் உங்கள் ராசிக்கு 12 - ல் சஞ்சரிப்பதால் மிகுந்த கவனமாக செயல்பட வேண்டிய காலம் ஆகும். உங்கள் ஆளுமைத் திறனுக்கு சவால்கள் உருவாகும். எதிலும் அவசர முடிவெடுக்காமல் நன்மை, தீமைகளை பகுத்தறிந்து, லாப நஷ்டங்களை ஆராய்ந்து செயல்படுங்கள். வீண் பண விரயம், மருத்துவ செலவினங்கள் வர வாய்ப்புள்ளதால் கவனம் தேவை. பேச்சில் பொறுமை அவசியம். குடும்ப விஷயங்களில் பெரியவர்களின் ஆலோசனை அவசியம். கொடுக்கல் வாங்கலில் அதிக எச்சரிக்கை தேவை. மற்றவர்களிடம் வீண்வாக்கு வாதத்தை தவிர்க்கவும். உடன் பிறப்புகளால் சஞ்சலங்கள் இருந்தாலும் ஆதாயம் உண்டு.

எடுக்கும் முயற்சிகளில் வெற்றி உண்டு. தங்க நகை ஆபரணங்களை கவனமாக கையாளுங்கள். தாய் உடல் நிலையில் கவனம் தேவை. தாய் மற்றும் உறவுகளால் மனக் கசப்புகள் உருவாகும் என்றாலும் பாதிப்பு எதுவும் இருக்காது. குழந்தைகளால் மாத முற்பகுதியில் பிரச்சினை இருந்தாலும், மாதப் பிற்பகுதியில் நலமே விளையும். குலதெய்வ மற்றும் இஷ்ட தெய்வ வழிபாடு நன்மை தரும். எதிர்பாராத அதிர்ஷ்டம் உண்டு. கணவன் மனைவிக்கிடையே கருத்து வேறுபாடு வர வாய்ப்புள்ளதால் ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்துச் செல்வது நல்லது.

குடும்ப விஷயத்தில் வெளியாள்களின் தலையீட்டை தவிர்ப்பது நல்லது. தந்தை உடல் நலனில் கவனம் தேவை. தந்தையுடன் மனஸ்தாபங்கள் வந்து நீங்கும். தொழில் மற்றும் உத்தியோகத்தில் அதிக கவனம் தேவை. உயரதிகாரிகள் மற்றும் சக ஊழியர்களை அனுசரித்துச் செல்வது நல்லது. உங்கள் பணிகளில் அதிக கவனம் செலுத்துங்கள்.

அதிர்ஷ்ட நாள்கள்; மே 5,6,7, 8, 9, 24, 25

சந்திராஷ்டம நாள்கள்; மே 1,2,3, 28, 29, 30

பரிகாரம்; ஸ்ரீ மத் ராமானுஜருக்கு பூஜை செய்து வழிபடுவது நன்மை தரும்.

மே மாத ராசி பலன்கள் 2021

மேஷம் முதல் மீனம் வரை 12 ராசிகளுக்கான ராசிபலன் அதிர்ஷ்டக் குறிப்புகள் மற்றும் எளிய பரிகாரங்களுடன் கணித்துத் தந்திருக்கிறார் விஞ்ஞான ஜோதிடர் **ஆம்பூர் வேல்முருகன்**

மிதுனம்

(மிருகசீரிடம் 3,4– ம் பாதம், திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 – ம் பாதம்)

சூழ்நிலைக்கேற்ப தன்னை எளிதில் மாற்றிக்கொள்ளக் கூடிய மிதுன ராசி அன்பர்களே, உங்கள் ராசி நாதன் புதன் பகவான் உங்கள் ராசிக்கு 11-ல் சஞ்சரிப்பதால் எண்ணிய எண்ணங்கள், நீண்ட நாள் ஆசைகள், கனவுகள் நிறைவேறும். நண்பர்களால் ஆதாயம் உண்டு. எடுக்கும் முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். பல வகையில் தனவரவும் உண்டாகும். குடும்ப விஷயங்களில் கவனம் தேவை. யாருக்கும் வாக்குறுதி தர வேண்டாம். உடன் பிறப்புகள் உங்கள் செயல்களுக்கு உறுதுணையாக இருப்பார்கள். புதிய தங்க நகை ஆபரணங்கள் வாங்கும் சூழல் உருவாகும். அண்டை அயலாரின் ஆதரவு கிடைக்கும். வெளியூர்ப் பயணங்களால் ஆதாயம் உண்டு.

தாயால் அனுகூலம் உண்டு. தாய் மற்றும் உறவுகளால் மகிழ்ச்சி உண்டு. புதிய வீடு, வாகனம், சொத்து வாங்குவதற்கான முயற்சிகள் கைகூடும். குழந்தைகளால் மகிழ்ச்சி உண்டு. பூர்வபுண்ணிய பலம் அதிகரிக்கும். தடைகள், பிரச்சினைகள் நீங்கும். பூர்வீக சொத்துக்களால் லாபம் உண்டு. நீண்டநாள் பிரார்த்தனையை நிறைவேற்றுவீர்கள். குலதெய்வ மற்றும் இஷ்டதெய்வ அனுகூலம் உண்டாகும். எதிரிகள் விலகிச் செல்வார்கள். வியாபாரத்தில் கூட்டாளிகளால் ஆதாயம் உண்டு. வியாபாரம் தொடர்பான புதிய ஒப்பந்தங்களால் லாபம் உண்டு. இதுவரை அஷ்டமச்சனியோடு அஷ்டம குருவாக சஞ்சரித்த குருபகவான் தற்போது ஒன்பதில் சஞ்சரிப்பதால் எல்லா வகையிலும் அனுகூலமான பலன்கள் ஏற்படும்.

தொழில் மற்றும் உத்தியோகத்தில் உயர்வு ஏற்படும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு அலுவலகத்தில் சுமூகமான சூழல் நிலவும். இருப்பினும் எதிலும் அளவுக்கு மீறி செயல்படாமல் இருப்பது நல்லது.

அதிர்ஷ்ட நாள்கள்; மே 7, 8, 9, 10, 11, 12, 25 ,26 ,27

சந்திராஷ்டம நாள்கள்; மே 4, 5, 31

பரிகாரம்; ஸ்ரீ ஆஞ்சநேயருக்கு பூஜை செய்து வழிபடுவது நன்மை தரும்.

கடகம்

(புனர்பூசம் 4–ம் பாதம், பூசம், ஆயில்யம்)

கலைகளில் ஆர்வம் மிக்க கடக ராசி அன்பர்களே, உங்கள் ராசிநாதன் சந்திர பகவான் உங்கள் ராசிக்கு 10 - ல் சஞ்சரிப்பதாலும், சூரிய பகவான் திக் பலம் பெற்று இருப்பதாலும், எதிலும் உங்கள் திறமையை வெளிப்படுத்தி பெயர், புகழ், செல்வாக்கு பெறுவீர்கள். குடும்பத்தில் மகழ்ச்சி பெருகும். பொருளாதார நிலையில் இருந்த தடைகள் நீங்கி பொருளாதார நிலை உயரும். உங்கள் பேச்சக்கு மதிப்பு கூடும். புதியவர்கள் நண்பர்கள் ஆவார்கள். அவர்களால் ஆதாயம் உண்டு. விலகிச் சென்ற உறவுகள் விரும்பி வரும். உடன்பிறப்புகள் உதவிகரமாக இருப்பார்கள். ஆபரணச் சேர்க்கை உண்டாகும். வெளியூர்ப் பயணங்கள் சாதகமாக அமையும். தாய்வழி உறவுகளால் ஆதாயம் ஏற்படும்.

வீடு, வாகனம் தொடர்பான விஷயங்கள் சாதகமாக அமையும். குழந்தைகள் உடல் நிலையில் கவனம் தேவை. ஏதேனும் உடல் பாதிப்பென்றால் காலம் தாழ்த்தாமல் உடனடியாக மருத்துவரை அனுகுவது நல்லது. குழந்தை களையும், குழந்தைகளின் நட்பு வட்டத்தையும் கண்காணிப்பில் வைத்து வழி நடத்திச் செல்வது நல்லது. எதிரிகளால் பிரச்னை வந்து நீங்கும். எதிர்பாராத அதிர்ஷ்டம் உண்டு. கணவன் மனைவிக்கிடையே கருத்து வேறுபாடு வர வாய்ப்புள்ளதால் ஒருவருக்கொருவர் விட்டுச் கொடுத்துச் செல்வது நல்லது. தம்பதிகளுக்கு இடையே வெளியாள்களின் தலையீட்டை தவிர்ப்பது அவசியம். வியாபாரத்தில் கூட்டாளிகளால் பிரச்னை, இழப்புகள் ஏற்பட வாய்ப்புள்ளதால் கண்காணிப்பில் வைத்துக் கொள்வது நல்லது. சிறு தடைகள், பிரச்னைகள் உருவாகும். தந்தை உடல் நலனில் கவனம் தேவை. தொழில் மற்றும் உத்தியோகத்தில் உயர்வு ஏற்படும். தொழில் ரீதியாக வெளியூர்ப் பயணங்கள் செல்ல நேரிடும்.

அதிர்ஷ்ட நாள்கள்; மே 10, 11, 12, 13, 14, 25, 26, 27

சந்திராஷ்டம நாள்கள்; மே 6, 7

பரிகாரம்; ஸ்ரீ திருப்பதி ஏழுமலையானுக்கு பூஜை செய்து வழிபடுவது நன்மை தரும்.

(மகம், பூரம், உத்திரம் 1–ம் பாதம்)

சாதிக்கும் திறனும், அதிகாரத் தோரணையும் மிக்க சிம்ம ராசி அன்பர்களே, உங்கள் ராசிநாதன் சூரிய பகவான் உங்கள் ராசிக்கு 9 - ல் உச்சம் பெற்று சஞ்சரிப்பதால் வாழ்வில் இருந்த தடைகள் பிரச்னைகள் நீங்கி, அதிர்ஷ்டமும், யோகமும் ஏற்படும். குடும்பத்தில் இருந்த கவலைகள் மறைந்து மகிழ்ச்சி அதிகரிக்கும். உங்கள் பேச்சால் அனைவரையும் வசீகரிப்பீர்கள். பொருளாதார நிலையில் உயர்வு ஏற்படும். உடன் பிறப்புகளால் ஆதாயம் உண்டு. எடுக்கும் முயற்சிகள் அனைத்தும் வெற்றி அடையும். உற்ற நேரத்தில் தேவையான உதவிகள் கிடைக்கும். தாய் உடல்நலனில் கவனம் தேவை. தாய் மற்றும் உறவுகளால் மனஸ்தாபங்கள் வந்து நீங்கும். வீடு, வாகனத்தை சீர்படுத்தும் வகையில் செலவினங்கள் அதிகரிக்கும்.

புதிய நிலம், வீடு, வாகனம் வாங்கும்போது ஆவண விஷயங்களில் கவனம் தேவை. குழந்தைகளால் மகிழ்ச்சி உண்டு. காதல் முயற்சிகள் வெற்றி பெறும். எதையும் சாதிக்கும் திறமையும், ஆற்றலும் உருவாகும். கணவன் மனைவிக்கிடையே இருந்த மனக் கசப்புகள் நீங்கி அன்பும், ஆதரவும் அதிகரிக்கும். வாழ்க்கைத்துணை வழியில் வருமானம் உண்டு. வியாபாரத்தில் கூட்டாளிகளால் ஆதாயம் உண்டு. புதிய ஒப்பந்தங்களால் லாபம் உண்டாகும். தந்தையால் அனுகூலம் உண்டு. இருப்பினும் தந்தையின் கோபத்திற்கு ஆளாக நேரிடும். வீண்வாக்குவாதங்களைத் தவிர்த்து அமைதி காப்பது நல்லது. பிதுர் வழிபாடு நன்மை தரும். தொழில் மற்றும் உத்தியோகத்தில் உயர்வு ஏற்படும்.

உங்கள் புகழ், செல்வாக்கு, அந்தஸ்து உயரும். திடீர் பணவரவு உண்டாகும். உங்கள் செயல்களில் இருந்த தடைகள் நீங்கி எளிதாக நிறைவேறும். உங்கள் லட்சியம் நிறைவேறும். நண்பர்களால் ஆதாயம் உண்டு. எதிலும் நன்மை உண்டாகும். தெய்வ அருள் கிடைக்கும்.

அதிர்ஷ்ட நாள்கள்; மே 3, 4, 5, 12, 13, 14, 15, 16, 17

சந்திராஷ்டம நாள்கள்; மே 8, 9.

பரிகாரம்; ஸ்ரீ அம்பாளுக்கு பூஜை செய்து வழிபடுவது நன்மை தரும்.

(உத்திரம் 2, 3, 4 – ம் பாதம், அஸ்தம், சித்திரை 1, 2 – ம் பாதம்)

பிறருக்கு நன்மை செய்வதில் ஆர்வம் உடைய கன்னி ராசி அன்பர்களே, உங்கள் ராசிநாதன் புதன் பகவான் உங்கள் ராசிக்கு 8-ல் சஞ்சரிப்பதால் எதிலும் கவனம் தேவை. அவசர முடிவுகளை தவிர்க்கவும். பொறுமை, நிதானம் அவசியம். விட்டுக் கொடுத்துச் செல்வதால் வீண் பிரச்னைகளைத் தவிர்க்கலாம். பொருளாதாரத்தில் ஏற்றத்தாழ்வு ஏற்படுமென்பதால் சேமிப்பிலும், சிக்கனத்திலும் அதிக கவனம் செலுத்துவது நல்லது. பேச்சில் அதிக எச்சரிக்கை அவசியம். உடன் பிறப்புகளால் ஆதாயம் உண்டு. எடுக்கும் முயற்சிகள் வெற்றியடையும். வெளியூர்ப் பயணங்களால் ஆதாயம் உண்டு. மனோபலம் அதிகரிக்கும். தைரியம், தன்னம்பிக்கை, உற்சாகம் அதிகரிக்கும்.

தாய்வழி உறவுகளால் மனகசப்புகள் உருவாகும். வாடகை வீட்டில் இருப்பவர்களுக்கு உரிமையாளரால் பிரச்னைகள் வரும். பொறுமை தேவை. வீடு, வாகனத்தால் பிரச்னைகள், செலவுகள் உண்டாகும். குழந்தை உடல்நலனில் கவனம் தேவை. தேவையற்ற சிந்தனையையும், மனக்குழப்பத்தையும் தவிர்ப்பது நல்லது. நீண்டநாள் பிரார்த்தனையை நிறைவேற்றுவதால் குலதெய்வ மற்றும் இஷ்டதெய்வ அனுகூலம் உண்டாகும். குடும்பத் தேவைக்காக கடன் வாங்கும் சூழல் ஏற்படலாம். உடல் ஆரோக்கியத்தில் அதிக கவனம் தேவை. கணவன் மனைவிக்கிடையே கருத்துவேறுபாடு வர வாய்ப்புள்ளதால் ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்துச் செல்வது நல்லது. வியாபாரத்தில் கூட்டாளிகளிடம் கவனம் தேவை.

புதிய ஒப்பந்தங்களை தவிர்க்கவும். உங்களுக்கு தொடர்பில்லாத விஷயங்களில் தலையிட வேண்டாம். தந்தையுடன் கருத்து வேறுபாடுகள் வந்து நீங்கும். தொழில் மற்றும் உத்தியோகத்தில் கவனமுடன் இருப்பது நல்லது. பணிச்சுமை அதிகரிக்கும்.

அதிர்ஷ்ட நாள்கள்; மே 5, 6, 7, 15, 16, 17, 18, 19

சந்திராஷ்டம நாள்கள்; மே 10, 11, 12.

பரிகாரம்; ஸ்ரீ தன்வந்திரி பகவானுக்கு பூஜை செய்து வழிபடுவது நன்மை தரும்.

துலாம்

(சித்திரை 3, 4 – ம் பாதம், சுவாதி, விசாகம் 1, 2, 3 – ம் பாதம்)

வல்லவனுக்கு புல்லும் ஆயுதம் என்பதை உணர்ந்து செயல்படும் துலாராசி அன்பர்களே, உங்கள் ராசிநாதன் சுக்கிர பகவான் உங்க ராசிக்கு 7 - ல் இருப்பதால் இதுவரை இருந்த பிரச்னைகள், தடைகள் நீங்கி உங்கள் வாழ்க்கையில் நல்ல மாற்றம், முன்னேற்றம் ஏற்படும். குடும்பத்தில் வீண் வாக்குவாதம் வர வாய்ப்புள்ளதால் கவனம் தேவை. பொருளாதார நிலையில் ஏற்றத்தாழ்வு வந்து நீங்கும். உடன் பிறப்புகளால் ஆதாயம் உண்டு. தங்க ஆபரணங்களின் சேர்க்கை உண்டாகும். தாய் உடல் நிலையில் கவனம் தேவை. தாய் மற்றும் உறவுகளால் மனஸ்தாபங்கள் வந்து நீங்கும். குழந்தைகளால் மகிழ்ச்சி உண்டாகும். நீண்டநாளாக குழந்தை பாக்கியம் இல்லாதவர்களுக்கு குழந்தை பாக்கியம் உண்டாகும்.

நீண்டநாள் பிரார்த்தனையை நிறைவேற்றுவீர்கள். குலதெய்வ மற்றும் இஷ்டதெய்வ அனுகூலம் உண்டு. எதிரிகளால் பிரச்னை வந்து நீங்கும். உடல் ஆரோக்கியம் மேம்படும். வியாபாரத்தில் கூட்டாளிகளால் ஆதாயம் உண்டு. புதிய ஒப்பந்தங்களால் ஆதாயம் உண்டு. வாழ்க்கையில் தடைகள், பிரச்னைகள் வந்து நீங்கும். தந்தையின் செயல்பாடுகள் உங்கள் உயர்வுக்கு உறுதுணையாக இருக்கும். மூத்தோர்களின் உதவியும், குருவின் ஆசியும் கிடைக்கும். தொழில் மற்றும் உத்தியோகத்தில் உயர்வு கிடைக்கும். உத்தியோகத்தில் உயரதிகாரி மற்றும் சக ஊழியர்கள் உங்களுக்கு சாதகமாக இருப்பார்கள்.

நண்பர்களிடம் கவனம் தேவை. வாழ்க்கைத் துணைவழி உறவுகள் உங்களுக்கு உதவிகரமாக இருப்பார்கள். வாழ்க்கைத்துணையால் லாபமும், விரயமும் சமமாக இருக்கும். இந்த மாதம் உங்கள் வாழ்வில் ஒரு நல்ல மாற்றத்தையும், முன்னேற்றத்தையும் தரும்.

அதிர்ஷ்ட நாள்கள்; மே 7, 8, 9, 17, 18, 19, 20, 21, 22

சந்திராஷ்டம நாள்கள்; மே 13, 14

பரிகாரம்; ஸ்ரீ மந் நாராயணனுக்கு பூஜை செய்து வழிபடுவது நன்மை தரும்.

விருச்சிகம்

(விசாகம் 4 – ம் பாதம், அனுஷம், கேட்டை)

தன்னுடைய சுய முன்னேற்றத்தில் ஆர்வமுடைய விருச்சிக ராசி அன்பர்களே, உங்கள் ராசிநாதன் செவ்வாய் பகவான் உங்கள் ராசிக்கு 8 - ல் இருப்பதால் எதிலும் கவனம் தேவை. பொறுமை, நிதானம் அவசியம். தேவையில்லாத டென்ஷன், கவலையை தவிர்ப்பது நல்லது. எதிர்மறைச் சிந்தனையைத் தவிர்த்து நேர்மறை சிந்தனையை வளர்த்துக் கொள்வது முக்கியம். குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும். பொருளாதார நிலை தேவைக்கேற்ப இருக்கும். உங்கள் பேச்சுக்கு மதிப்பு, மரியாதை குறையுமென்பதால் கவனம் தேவை. மனதில் தைரியம், தன்னம்பிக்கை அதிகரிக்கும். எதிலும் உற்சாகத்துடன் செயல்பட்டு வெற்றி பெறுவீர்கள். உடன் பிறப்புகளால் ஆதாயம் உண்டு. தாய் உடல்நிலையில் கவனம் தேவை.

தாய் மற்றும் உறவுகளால் மனஸ்தாபங்கள் வந்து நீங்கும். வீடு, வாகனம் தொடர்பான விஷயங்களில் பிரச்னை வர வாய்ப்புள்ளதால் கவனம் தேவை. வாகனப் பயணங்களில் கவனம் தேவை. இரவு நேர பயணங்கள் மற்றும் நீண்டதூர பயணங்களை தவிர்ப்பது நல்லது. குழந்தைகளால் மகிழ்ச்சி உண்டாகும். குழந்தைகளின் செயல்பாடுகள் பெருமைப்படக்கூடியதாக இருக்கும். எதிரிகளால் பிரச்னை வந்து நீங்கும். கணவன் மனைவிக்கிடையே பிரச்னை வர வாய்ப்புள்ளதால் ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்துச் செல்வது நல்லது. குடும்ப விஷயத்தில் மூன்றாவது நபர்களின் தலையீட்டை தவிர்ப்பது நல்லது. வியாபாரத்தில் கூட்டாளிகளிடம் கவனம் தேவை.

புதிய ஒப்பந்தங்களால் விரயம் ஏற்படும். வாகன பயணங்களில் எச்சரிக்கையுடன் இருப்பது நல்லது. உத்தியோகத்தில் பணிச்சுமை அதிகரிக்கும். நண்பர்களிடம் அனுசரணையாக நடந்துகொள்ளுங்கள். மற்றவர்களின் தவறுகளை பெரிதுபடுத்த வேண்டாம்.

அதிர்ஷ்ட நாள்கள்; மே 10, 11, 12, 20, 21, 22, 23, 24

சந்திராஷ்டம நாள்கள்; மே 15, 16, 17

பரிகாரம்; ஸ்ரீ காலபைரவருக்கு பூஜை செய்து வழிபடுவது நன்மை தரும்.

தனுசு

(மூலம், பூராடம், உத்திராடம் 1 – ம் பாதம்)

நேர்மறை எண்ணத்துடன் செயல்பட்டு வெற்றி பெறும் தனுசு ராசி அன்பர்களே, உங்கள் ராசிநாதன் குரு பகவான் உங்கள் ராசிக்கு 3 -ல் சஞ் சரித்தாலும், ராகு பகவானின் 6- ம் இட சஞ்சாரம் மிகவும் சாதகமாக உள்ளதால் வாழ்வில் தடைகள், பிரச்னைகள் வந்தாலும், விடாமுயற்சியால் வெற்றி பெறுவீர்கள். வீண் பயம், எதிர்காலம் பற்றிய பயம் விட்டு நேர்மறை சிந்தனையுடன் செயலாற்றுங்கள். பேச்சில் நிதானமும் கவனமும் தேவை. குடும்ப விஷயங்களில் விட்டுக் கொடுத்துச் செல்வதால் வீண் பிரச்னைகளைத் தவிர்க்கலாம். அண்டை, அயலாரால் மனக்கசப்புகள் வந்து சரியாகும். வெளியூர்ப் பயணங்களில் கவனம் தேவை. தாய் உடல் நலனில் கவனம் தேவை.

வீடு, வாகனம் தொடர்பான பிரச்னைகள் வந்து நீங்கும். மன அமைதியின்மையை தவிர்ப்பதும், யோகா, தியானத்தில் கவனம் செலுத்துவதும் நல்லது. குழந்தைகளால் மகிழ்ச்சி உண்டு. குழந்தைகளின் செயல்பாடுகளால் உங்கள் கௌரவம் அதிகரிக்கும். எதிரிகளால் பிரச்னை வந்தாலும் சமாளித்து விடுவீர்கள். உடல் ஆரோக்கியம் மேம்படும். திருமண முயற்சிகள் கைகூடும். வியாபாரத்தில் கூட்டாளிகளால் ஆதாயம் உண்டு. புதிய ஒப்பந்தங்களால் நன்மை உண்டாகும். எதிர்பாராத அதிர்ஷ்டம் ஏற்படும். தந்தையால் அனுகூலம் உண்டு. தந்தை உங்கள் உயர்வுக்கு உறுதுணையாக இருப்பார். பெரியவர்களின் ஆசியும், உதவியும் கிடைக்கும்.

தொழில் மற்றும் உத்தியோகத்தில் உயர்வு ஏற்படும். உங்கள் திறமை வெளிப்படும். நல்ல வாய்ப்புகள் தேடி வரும். இருப்பினும் உயரதிகாரிகள் மற்றும் சக ஊழியர்களை அனுசரித்துச் செல்வது நல்லது. நண்பர்களால் ஆதாயம் உண்டு. ஆசைகள் நிறைவேறும். ஆன்மிக ஈடுபாடு அதிகரிக்கும்.

அதிர்ஷ்ட நாள்கள்; மே 12, 13, 14, 22, 23, 24, 25

சந்திராஷ்டம நாள்கள்; மே 18, 19

பரிகாரம்; ஸ்ரீ முருகப்பெருமானுக்கு பூஜை செய்து வழிபடுவது நன்மை தரும்.

மகரம்

(உத்திராடம் 2, 3, 4– ம் பாதம், திருவோணம், அவிட்டம் 1, 2– ம் பாதம்)

சுய முன்னேற்றமும், கட்டுப்பாடுமே வாழ்க்கையை வளமாக்கும் என்பதை உணர்ந்து செயல்படும் மகர ராசி அன்பர்களே, உங்கள் ராசிக்கு யோகாதிபதியாகி சுக்கிரன், புதன் இணைந்து 4-ல் இருப்பதால் எந்த சூழ்நிலையிலும் இறையருள் உங்களைக் காக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி உண்டாகும். உங்கள் பேச்சுக்கு மதிப்பு, மரியாதை உயரும். பொருளாதார நிலை தேவைக்கு ஏற்ப உயரும். எதிர்மறை சிந்தனைகளைத் தவிர்த்து நேர்மறை சிந்தனைகளை வளர்த்துக் கொள்ளுங்கள். எடுக்கும் முயற்சிகள் சிறிது தாமதமானாலும் வெற்றி பெறும். தாய் மற்றும் உறவுகளால் பிரச்னைகள் வந்து நீங்கும். வீடு, வாகனத்தை பழுது பார்ப்பீர்கள்.

புதிய வீடு, வாகனம் வாங்குவதற்கான முயற்சி கள் கைகூடும். குழந்தைகளின் உடல் நலனில் கவனம் தேவை. குழந்தைகளையும் குழந்தைகளின் நட்பு வட்டத்தையும் கண்காணிப்பில் வைத்துக் கொள்வது நல்லது. பூர்வீக சொத்து விஷயங்களில் பிரச்னை வந்து நீங்கும். குல தெய்வ மற்றும் இஷ்ட தெய்வ வழிபாடு நன்மையை ஏற்படுத்தும். வாடகை வீட்டில் இருப்பவர்களுக்கு வீட்டு உரிமையாளரால் பிரச்னைகள் உருவாகும். எதிரிகள் நிலை தடுமாறுவார்கள். வியாபாரத்தில் கூட்டாளிகளால் ஆதாயம் உண்டு. எதிர்பாராத அதிர்ஷ்டமும், தனவரவும் உண்டு. தந்தையின் செயல்கள் உங்களுக்கு சாதகமாக இருக்கும்.

குடும்பப் பெரியவர்கள் மற்றும் குருவின் ஆசி கிடைக்கும். தொழில் மற்றும் உத்தியோகத்தில் உயர்வு ஏற்படும். உங்கள் புகழ், செல்வாக்கு உயரும். நீண்டநாள் ஆசைகள் நிறைவேறும். நண்பர்களால் ஆதாயம் உண்டு. பணப்புழக்கம் அதிகரிக்கும். முக்கிய பிரமுகர்களின் அறிமுகமும், நட்பும் கிடைக்கும்.

அதிர்ஷ்ட நாள்கள்; மே 1, 2, 3, 15, 16, 17, 25, 27, 28, 29, 30

சந்திராஷ்டம நாள்கள்; மே 20, 21, 22 முற்பகல் வரை

பரிகாரம்; ஸ்ரீ நரசிம்மருக்கு பூஜை செய்து வழிபடுவது நன்மை தரும்.

கும்பம்

(அவிட்டம் 3, 4- ம் பாதம், சதயம், பூரட்டாதி 1, 2, 3- ம் பாதம்)

பொறுமையே பெருமை தரும் என்பதை உணர்ந்து செயல்படும் கும்ப ராசி அன்பர்களே, உங்கள் ராசிக்கு யோகாதிபதியாகிய சுக்கிரன், புதன் பகவான் உங்கள் ராசிக்கு 3 - ல் சஞ்சரிப்பதால் எடுக்கும் முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். தெய்வ அனுகூலம் உண்டு. தேவையற்ற வீண் டென்ஷன், எதிர்காலம் பற்றிய பயம் ஆகியவற்றைத் தவிர்ப்பது நல்லது. குடும்பத்தில் சிறு,சிறு பிரச்னைகள் வந்து சரியாகும். பொருளாதார நிலையில் கவனம் தேவை. வீண் டென்ஷன், கோபம் தவிர்ப்பது நல்லது. உடன் பிறப்புகளால் ஆதாயம் உண்டு. சுக போகங்களில் அதிக நாட்டத்தைத் தவிர்க்கவும். எடுக்கும் முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். புதிய தங்க ஆபரணங்கள் சேரும். தாய்க்கு மருத்துவ செலவினங்கள் உண்டாகும்.

வீடு, வாகனம், சொத்து தொடர்பான விஷயங்களில் பிரச்னை வந்து நீங்கும். வாகனப் பயணங்களிலும் கவனம் தேவை. இரவு நேர பயணங்கள் மற்றும் நீண்டதூர பயணங்களைத் தவிர்ப்பது நல்லது. குழந்தைகளால் மகிழ்ச்சி உண்டு. குழந்தைகளின் செயல்பாடுகள் பெருமைப்படக் கூடியதாக இருக்கும். நீண்டநாள் பிரார்த்தனைகளை நிறைவேற்றுவீர்கள். குலதெய்வ மற்றும் இஷ்டதெய்வ வழிபாடு நன்மை தரும். எதிரிகளால் பிரச்னை வந்து நீங்கும். புதிய ஒப்பந்தங்கள் லாபத்தை தரும். வியாபாரத்தில் கூட்டாளிகளால் ஆதாயம் உண்டு. எதிர்பார்த்த அதிர்ஷ்டம் உண்டு.

தந்தையால் அனுகூலமான பலன்கள் ஏற்படும். தந்தை உங்கள் செயல்களுக்கு உறுதுணையாக இருப்பார். தொழில் மற்றும் உத்தியோகத்தில் கவனம் தேவை. உயரதிகாரிகள் மற்றும் சக ஊழியர்களை அனுசரித்துச் செல்வது நல்லது. நண்பர்களால் ஆதாயம் உண்டு.

அதிர்ஷ்ட நாள்கள் ; மே 1, 2, 3, 17, 18, 19, 25, 27, 29, 30

சந்திராஷ்டம நாள்கள்; மே 22 பிற்பகல் முதல் 23, 24 முற்பகல் வரை

பரிகாரம்; ஸ்ரீ விநாயகப்பெருமானுக்கு பூஜை செய்து வழிபடுவது நன்மை தரும்.

மீனம்

(பூரட்டாதி 4- ம் பாதம், உத்திரட்டாதி, ரேவதி)

தானும் மகிழ்ந்து மற்றவர்களையும் மகிழ்விக்கும் மீன ராசி அன்பர்களே, உங்கள் ராசிக்கு 3-ல் ராகு பகவான் பலம் பெற்று சஞ்சரிப்பதால் எத்தனை தடைகள், பிரச்னைகள் வந்தாலும், அத்தனையும் தாண்டி வெற்றி பெறுவீர்கள். இருப்பினும் பணம், கொடுக்கல் வாங்கலில் கவனம் தேவை. வீண் விரயங்கள், மருத்துவ செலவினங்கள் உண்டாகும். குடும்பத்தில் வீண்வாக்குவாதத்தைத் தவிர்ப்பது நல்லது. ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்துச் செல்வதால் வீண் பிரச்னைகளைத் தவிர்க்கலாம். பேச்சில் கவனம் தேவை. பொருளாதார நிலையில் ஏற்றத்தாழ்வு வந்து நீங்கும். எடுக்கும் முயற்சிகள் வெற்றி அடையும். தைரியம், தன்னம்பிக்கை, உற்சாகம் அதிகரிக்கும்.

தாயின் அன்பும், ஆதரவும் கிடைக்கும். வீடு, வாகனம், சொத்து தொடர்பான விஷயங்கள் சாதகமாக அமையும். குழந்தைகளால் மகிழ்ச்சி உண்டு. குழந்தைகளின் செயல்பாடுகள் பெருமைப்படக்கூடியதாக இருக்கும். பூர்வீக சொத்தால் ஆதாயம் உண்டு. நீண்டநாள் பிரார்த்தனையை நிறைவேற்றுவீர்கள். குலதெய்வ மற்றும் இஷ்ட தெய்வ அனுகூலம் கிடைக்கும். எதிரிகளால் பிரச்சினை வந்து நீங்கும். கணவன் மனைவிக்கிடையே அன்பும், ஆதரவும் அதிகரிக்கும். வியாபாரத்தில் கூட்டாளிகளால் ஆதாயம் உண்டு. புதிய ஒப்பந்தங்கள் நன்மையைத் தரும். எதிர்பாராத அதிர்ஷ்டமும் தனவரவும் உண்டு. தந்தையால் அனுகூலம் உண்டு. தந்தை உங்கள் உயர்வுக்கு உறுதுணையாக இருப்பார்.

இருப்பினும் தந்தை உடல்நலனில் கவனம் தேவை. தொழில் மற்றும் உத்தியோகத்தில் பிரச்னை வர வாய்ப்புள்ளதால் கவனம் தேவை. உயரதிகாரிகள் மற்றும் சக ஊழியர்களை அனுசரித்துச் செல்வது நல்லது. பொறுமை, நிதானம் அவசியம்.

அதிர்ஷ்ட நாள்கள்; மே 1, 2, 3, 4, 5, 20, 21, 28, 29, 30

சந்திராஷ்டம நாள்கள்; மே 24, 25

பரிகாரம்; ஸ்ரீ ராகவேந்திரருக்கு பூஜை செய்து வழிபடுவது நன்மை தரும். ●

N.MAHALINGAM & COMPANY

68, Dr, Nanjappa Road, Near Central Bus Stand Coimbatore - 641 018.
Email : homeappliances@nmanco.com, godrej@nmandco.com
Ph: 2239834 / 2239841 / 2239803 / 2239811, Mob : +91 98438 40000

ஓம் சக்தி

ஆருயிர்களுக்கு எல்லாம் – நான் அன்பு செயல் வேண்டும்.

– வள்ளலார்

மலர்:39 | மே 2021 | இதழ்:4

நிறுவனர்: **நா.மகாலிங்கம்**
ஆசிரியர் - வெளியிடுபவர்: **ம.மாணிக்கம்**
Editor & Publisher : **M.MANICKAM**

அச்சிடுபவர்: **த.ராஜ்குமார்**
Printer : **T.RAJKUMAR, Rukmani Offset Press**
ருக்மணி ஆப்செட் பிரஸ், 32, சிட்கோ இண்டஸ்ட்ரியல் எஸ்டேட், கோவை - 641 021.

பொறுப்பாசிரியர்: **எஸ்.கண்ணன்கோபாலன்**

நிருபர்: **இரா.பொன்னாண்டான்**
தலைமை வடிவமைப்பு: **கே.எம்.பிரசன்னா**
வடிவமைப்பு: **எஸ்.காமராஜ்**
அலுவலக நிர்வாகம்: **ஆர்.குமாரசாமி**

கதை, கவிதைகளில் வரும் பெயர்களும், சம்பவங்களும் கற்பனையே. படைப்புகளைச் சுருக்கவோ, திருத்தி அமைக்கவோ ஆசிரியருக்கு உரிமை உண்டு.

ஓம் சக்தியில் பிரசுரமாகும் படைப்புகளின் கருத்துகள் அவற்றின் எழுத்தாளர்களுக்கு உரியவையே தவிர, பத்திரிகை அவற்றிற்குப் பொறுப்பேற்காது.

தனிப் பிரதி ரூ.15/-
ஆண்டு சந்தா ரூ.180/-
ஆயுள் சந்தா ரூ.2500/-
(10 ஆண்டுகள்)

சந்தா தொகையை **"SAKTHI SUGARS LTD. A/c OMSAKTHI"** என்ற பெயரில் டி.டி.யாகவோ அல்லது மணியார்டர் மூலமாகவோ அனுப்ப வேண்டிய முகவரி: **ஆசிரியர், ஓம் சக்தி, சக்தி சுகர்ஸ் லிமிடெட், 180, ரேஸ்கோர்ஸ் ரோடு, கோயம்புத்தூர் – 641 018,**
போன்: **0422 4322222**
வெளியிட்டோர்: **சக்தி சுகர்ஸ் லிமிடெட்.**

E-mail : omsakthieditorial@gmail.com

வாசகர் கடிதங்கள்

ஆனந்தம் தந்த ஓம்சக்தி.

புதிய வடிவில் வெளிவந்த ஏப்ரல் மாத 'ஓம் சக்தி'யின் அட்டைப்படம் பார்த்து மெய்சிலிர்த்துப் போனேன். வித்தியாசமான பல ஆன்மிகக் கட்டுரைகளை அள்ளி வழங்கி, என் சிந்தையை ஆனந்தப்படுத்திய ஓம்சக்திக்கு வாழ்த்துகள்!

உஷா முத்துராமன், மதுரை.

வடிவத்தில் மாற்றம் கண்டேன்; வண்ணத்தில் நிறைவு கொண்டேன்; உள்ளத்தில் உவகை பொங்கி; எண்ணத்தில் வந்து நின்ற மகான்கள் வள்ளலாரும், காந்தியும் வாழ்த்திட, அருட்செல்வர் மகிழக் கண்டேன்.

ராம பழனியப்பன், கோவை.

'கல்வியின் பயன்...' படக்கதை என்ற புதிய பகுதியில், கதையைச் சொல்லிச் செல்லும் விதமும், அதற்குரிய படவிளக்கமும் மிகவும் அருமை. ஓம்சக்தி வாசகர்களின் பாராட்டை நிச்சயம் பெறுவார் புவனா தியாகராஜன், வாழ்த்துகள்!

மனோகரன், திருச்செங்கோடு.

'ஒரு மனிதனின் வெற்றியை நிர்ணயிப்பது எது?' என்ற தலைப்பில் சுவாமி தயானந்த சரசுவதி அவர்களின் ஆங்கிலக் கட்டுரையை மிக நேர்த்தியாக மொழிபெயர்த்திருந்தார் நிவேதிதா பிரேம்நாத். பணி சிறக்க வாழ்த்துகள்.

ரங்கராஜன், சென்னை 17

'கோடிக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பு லெமூரியாவில் வாழ்ந்த மனிதர்களைப் பற்றியோ, அவர்கள் பேசிய மொழியைப் பற்றியோ தெளிவாக வரையறை செய்ய முடியாது' என்ற அருட்செல்வரின் கருத்தை, உலக மொழிகள் ஒப்பீட்டு ஆராய்ச்சியாளர் சாத்தூர் சேகரன் அவர்களையும் ஏற்றுக்கொள்ளச் செய்தது, லெமூரியாவைப் பற்றிய அருட்செல்வரின் ஞானத்தை வெளிப்படுத்தியது.

மு. தென்னரசன், சென்னை.

'சக்தி களஞ்சியம்', 'ஆன்மிகம்', 'இலக்கியம்', 'மகான்கள்', 'திருவிழா', 'மருத்துவம்', 'மகளிர் பகுதி', 'உடல்நலம்' எனப் பழமை மாறாமல், புதுப்பொலிவுடன் மிக நேர்த்தியான வடிவமைப்பில் வெளிவந்துள்ளது ஏப்ரல் மாத 'ஓம்சக்தி'!

இரா. செல்லமுத்து, வாணியம்பாடி.

சித்திரை மாதத்தின் அருமை, பெருமைகளையும் அதன் ஆன்மிகப் பின்னணிகளைப் பற்றியும் 'சீர்மிகு சித்திரையே வருக... வளங்கள் பல தருக..!' கட்டுரை பல சிறப்புத் தகவல்களைத் தாங்கி வந்தது மனதிற்கு நிறைவைத் தந்தது.

கணேஷ்பாபு, ஸ்ரீவில்லிபுத்தூர்.

விசாகனை வழிபட வினைகள் யாவும் அகலும்...

அழகன் என்றாலே முருகன். தமிழர்களின் பக்தி மணம் கமழும் நெஞ்சங்களில் என்றும் நிறைந்திருப்பவர் தமிழ்க்கடவுள் முருகன். முருகப்பெருமானின் அவதாரத் திருநாளாக வைகாசி விசாகம் திகழ்கிறது.

▸ திருப்பரங்குன்றம், திருச்செந்தூர், பழனி, சுவாமிமலை, திருத்தணி, பழமுதிர்ச்சோலை ஆகிய முருகப்பெருமானின் அறுபடை வீடுகள் மட்டுமல்லாமல் தமிழகம் முழுவதும் உள்ள முருகன் திருக்கோயில்களிலும் வைகாசி விசாகத் திருவிழா வெகு விமர்சையாகக் கொண்டாடப்படுகிறது.

▸ விசாக நட்சத்திரம் என்பது ஆறு நட்சத்திரங்களின் கூட்டமாகும். விசாக நட்சத்திரத்தில் அவதரித்ததால் முருகப்பெருமானை 'விசாகன்' என்று அழைக்கின்றனர். 'வி' என்றால் மயில் என்றும், 'சாகன்' என்றால் பயணிப்பவன் என்றும் பொருள் கொண்டு, மயில் மீது பயணம் செய்யும் 'மயில்வாகனன்' என்றும் அழைக்கப்படுகிறார்.

▸ பக்தர்கள் தங்கள் வாழ்வில் உயர்ந்த நிலையை அடையவேண்டி வைகாசி விசாகத் திருநாளில் பால்குடம் எடுத்தும், பல வகையான காவடிகளை எடுத்தும், விரதம் மேற்கொண்டும் தமிழ்க்கடவுள் முருகப்பெருமானை வழிபடுகின்றனர்.

▸ முருகப் பெருமானின் அவதார நோக்கமே அசுரன் சூரபத்மனையும், அவனது படைகளையும் அழித்து தேவர்களைக் காப்பதுதான். சூரபத்மனை அழித்து, ஒரு பகுதியை மயிலாகவும், இன்னொரு பகுதியைச் சேவற்கொடியாகவும் ஏற்றுக்கொண்டு அவனை ஆட்கொண்டார்.

▸ பரமசிவனின் நெற்றிக் கண்ணிலிருந்து உருவான ஆறு அக்னிப் பொறிகளை சரவணப் பொய்கையில் உள்ள தாமரை மலர்களில் கங்கை அன்னை கொண்டுபோய் சேர்க்க, அவை ஆறு குழந்தைகளாக உருமாறின. கார்த்திகை பெண்களால் வளர்க்கப்பட்டதால், முருகனுக்கு, 'கார்த்திகேயன்' என்ற திருநாமமும்

உண்டு.

‘சுக்குக்கு மிஞ்சிய மருந்தும் இல்லை; சுப்பிரமணியருக்கு மிஞ் சிய தெய்வமும் இல்லை’ என்பது பழமொழி. அறுபடை வீடுகள் மட்டுமல்லாமல், குன்றிருக்கும் இடங்களில் எல்லாம் குமரக் கடவுள் கோயில் கொண்டிருக்கிறார்.

கவசங்களில் சிறந்த கவசம் கந்த சஷ்டி கவசம் என்பர் ஆன்றோர். தினமும் முருகப்பெருமானை ஒருமுகப்பட்ட மனதுடன் தியானித்து கந்தசஷ்டி கவசம் பாராயணம் செய்து வந்தால் தீராத நோய்களும் நீங்கும் என்பது பக்தர்களின் பூரணமான நம்பிக்கை.

ஏழாவது படைவீடு என்று சிறப்பித்து அழைக்கப்படும் மருதமலையில் ஆதிமூலஸ் தானத்தில் முருகப்பெருமான், வள்ளி, தெய்வானை ஆகியோர் சுயம்பு வடிவில் காட்சி தருகின்றனர். இந்தக் கோயிலின் தெற்கு மூலையில்தான் பாம்பாட்டிச் சித்தர் குகைக்கோயில் அமைந்துள்ளது. இங்குதான் பாம்பாட்டி சித்தருக்கு முருகன் பாம்பு வடிவில் காட்சி தந்தார் என்பது தலவரலாறு.

விசாக நட்சத்திரத்தின் அதிபதி முருகப்பெருமான். அன்று முருகப் பெருமானை சூரியன் வழிபடுகிறார். புத்திரதோஷத்தால் துன்பப்படுபவர்கள் வைகாசி விசாகத்தன்று விரதம் இருந்து முருகன் கோயிலுக்குச் சென்று தரிசித்து வந்தால் தோஷம் நீங்கும். குழந்தைப்பேறு இல்லாதவர்கள் விரதம் மேற்கொண்டு முருகன் கோயில்களுக்குச் சென்று வழிபட்டு வந்தால் குழந்தைப்பேறு உண்டாகும் என்பது ஐதிகம்.

ரசித்து ருசிப்போம்

சிறு தானியங்களிலேயே அதிக அளவாக கம்பில்தான் 11.8 சதவிகிதம் புரோட்டீன் உள்ளது.

100 கிராம் கம்பில் கால்சியம் – 42 கி, இரும்புசத்து – 12 மி.கி, வைட்டமின் பி – 0.38 மி.கி, ரிபோபிளேவின் – 0.21 மி.கி, நியாசின் – 2.8 மி.கி உள்ளது.

கம்பில் அதிக அளவு பொட்டாசியம் மற்றும் மெக்னீசியம் சத்துக்கள் நிறைந்துள்ளதால், உயர் ரத்த அழுத்தம் போன்ற பிரச்சினைகள் ஏற்படாமல் தடுக்கும்.

கம்பில் அதிக அளவு நார்ச்சத்து மற்றும் குறைந்த அளவு கிளைசெமிக் இன்டெக்ஸ் உள்ளதால் இதனை உண்ணும்பொழுது உங்களுக்கு சர்க்கரை நோய் ஏற்படாமல் காக்க உதவும்.

கம்பு அதிகம் உட்கொள்வதன் மூலம், ரத்தத்தில் இருக்கும் செல்கள் ஆக்ஸிஜன் உறிஞ்சுவதை அதிகப்படுத்துவதால், தோலில் சுருக்கங்கள் ஏற்படுவது தடுக்கப்படுகிறது. மேலும் தோல் பளப்பளப்பாக இருக்க உதவுகிறது. மேலும் முதுமை அடைவதையும் தாமதப்படுத்துகிறது.

கம்பு இனிப்பு அடை

தேவையான பொருள்கள்

கம்பு - 2 கப்,

வெல்லம் - 1/2 கப்,

உப்பு - தேவையான அளவு

நல்லெண்ணெய் - தேவையான அளவு

கம்பை தண்ணீரில் நன்றாகக் கழுவி, இரண்டு மணிநேரம் ஊறவைக்கவும். பின்னர் தண்ணீர் சேர்க்காமல் கெட்டியாக அரைத்துக்கொள்ளவும். அரைத்த மாவில் தேவையான அளவு உப்பு சேர்த்துப் பிசைந்து வைக்கவும். வெல்லத்தை சிறிது தண்ணீரில் போட்டு கரைத்து வடிகட்டி, அரைத்து வைத்த கம்பு மாவில் ஊற்றி பிசைந்துகொள்ளவும். பிறகு சின்னச் சின்ன அடைகளாக தோசைக்கல்லில் போட்டு சுற்றிலும் நல்லெண்ணெய் விட்டு, இரண்டுபுறமும் நன்றாக வேகவைத்து எடுத்து சூடாக இருக்கும்போதே பரிமாறவும். சத்தான மாலைச் சிற்றுண்டி தயார்.

கம்பு பருப்பு சாதம்

தேவையான பொருள்கள்

கம்பு - 200 கிராம்;

துவரம்பருப்பு - 25 கிராம்;

பாசிப் பயிறு - 25 கிராம்,

தண்ணீர் - தேவையான அளவு;

மஞ்சள் தூள் கால் டீஸ்பூன்;

மிளகாய்த் தூள் அரை டீஸ்பூன்,

இரண்டு வெங்காயம் - நீளமாக நறுக்கியது; இரண்டு தக்காளி சிறு துண்டுகளாக நறுக்கியது,

உப்பு தேவையான அளவு,

கறிவேப்பிலை, கொத்தமல்லி சிறிது.

தாளிக்க...

நல்லெண்ணெய் - 2 டீஸ்பூன்,

கடுகு கால் டீஸ்பூன்.

பொடிக்க...

மிளகு அரை டீஸ்பூன்,

சீரகம் அரை டீஸ்பூன்,

மிளகாய் வற்றல் - 2,

பூண்டு - 4.

செய்முறை:

கம்பையும், பருப்பு வகைகளையும் கழுவி அரை மணி நேரம் ஊற வைக்கவும். மிளகு, சீரகம், மிளகாய் வற்றலை மிக்ஸியில் பொடித்து கடைசியில் பூண்டு சேர்த்து ஒரு சுற்று விட்டு எடுக்கவும். குக்கரில் எண்ணெய் காய வைத்து கடுகு, கறிவேப்பிலை தாளித்து வெங்காயம் சேர்க்கவும். வதங்கியதும் தக்காளி, மஞ் சள் தூள், மிளகாய்த் தூள், அரைத்த பொடி சேர்த்து வதக்கவும்.

தேவையான அளவு தண்ணீரும் உப்பும் சேர்த்து கொதிக்க விடவும். கொதித்ததும் கம்பு, பருப்பையும், கொத்தமல்லி தழையும் சேர்த்து ஐந்து விசில் வரும்வரை வேகவிடவும். தேங்காய்த் துவையலுடன் பரிமாறலாம். கம்பை நன்றாகக் குழைய வேகவைத்தால் அதன் சுவை அதிகரிக்கும்.

கம்பங்கூழ்

தேவையான பொருள்கள்

ரவையாக அரைத்த கம்பு - 1 கப்,

தண்ணீர் - 3 கப்,

ரவையாக உடைத்த கம்பங்குருணையை நன்றாகக் கழுவி, 10 நிமிடங்கள் ஊறவைத்து, 3 கப் தண்ணீர் விட்டு குக்கரில் ஆறு விசில் வரும் வரை வேகவிடவும். வெந்து ஆறியதும் உருண்டைகளாகப் பிடித்து வைக்கவும். பிறகு தேவையான அளவு உருண்டைகளை எடுத்து உப்பு போட்ட மோரில் கரைத்து, பொடியாக நறுக்கிய வெங்காயம் சேர்த்துக் குடிக்கலாம். மீதமுள்ள உருண்டைகளை தண்ணீரில் போட்டு ப்ரிட்ஜில் வைக்கவும். தினமும் தண்ணீர் மாற்றினால் மூன்று நாள்கள் வரை பயன்படுத்தலாம்.

உண்பதற்கான

● உடலில் சக்தி உற்பத்தியாவதற்கும், செல்கள் வளர்ச்சியடைவதற்கும், உடல் உறுப்புகள் ஆரோக்கியமாக செயல்படுவதற்கும் உணவே காரணமாகிறது. அந்த உணவைத் தேர்ந்தெடுப்பதில் நாம் மிகுந்த கவனம் செலுத்த வேண்டும்.

● இயற்கை வைத்தியத்தில் தாதுஉப்புகள் அதிகம் உள்ள இளசான கீரைகள், புதிதாய்ப் பறித்த பச்சைக் காய்கறிகள், பழங்கள் போன்றவை முதல் தரமான உணவுகளாகும்.

● புரதப் பொருள்கள், மாவுப் பொருள்கள், சர்க்கரைப் பொருள்கள், கொழுப்புப் பொருள்கள் உள்ள தானியங்கள், பயறுகள், கிழங்குகள், பருப்புகள் ஆகியவை அடுத்த நிலையில் உள்ள உணவுகளாகும். இந்த இரண்டு வகையான உணவுகளையுமே எடுத்துக் கொள்வது அவசியம்.

● உணவு சாப்பிடுவதற்கு முன்பாக கை, கால்களை குளிர்ந்த நீரில் கழுவ வேண்டும். பின்னர் கால்களை மடக்கி தரையில் அமர வேண்டும். கால்களை மடக்கி அமர்ந்தால் கல்லீரல் மற்றும் செரிமான சுரப்பிகள் வேலை செய்யும். சர்க்கரை நோய் வருவது தவிர்க்கப்படும்.

●காலை உணவை அதிகமாக எடுத்துக்கொள்ள வேண்டும். ஒரு நாளுக்குத் தேவையான முழு சக்தியையும் காலை உணவே அளிக்கிறது. எந்தக் காரணம் கொண்டும் காலை உணவைத் தவிர்க்கக் கூடாது.

● பழங்கள், காய்கறிகள், கீரைகள், தேங்காய், முளைகட்டிய தானியங்கள், முளைகட்டிய பயறுகள் ஆகியவை உடலுக்கு ஏற்ற உணவுகள்.

● இரவு முடிந்தவரை அரிசி உணவைத் தவிர்த்து, கோதுமை, ரவை, ராகி, சிறுதானியங்கள் உள்ளிட்ட உணவுகளை எடுத்துக் கொள்வது நல்லது. இதனால், சர்க்கரை வியாதி வராமல்

விதிமுறைகள்

தடுக்க முடியும்.

● உணவு உண்ணும்போது இடை யிடையே தண்ணீர் குடிக்கக் கூடாது. இதனால், செரிமானத்துக்காக வயிற்றில் சுரக்கும் அமிலத்தின் செயல்திறன் குறையும். செரிமானம் தாமதப்படும்.

● சாப்பிடும்போதோ சாப்பிடும் முன்போ பழங்கள் சாப்பிடக் கூடாது. அதனால் வாய்வுத் தொந்தரவு ஏற்படும். சாப்பிடுவதற்கு ஒரு மணிநேரம் முன்பு அல்லது சாப்பிட்ட இரண்டு மணி நேரத்துக்குப் பின் பழங்களை எடுத்துக்கொள்ளலாம்.

● சாப்பிட்டதுமே தேநீர் அருந்தக்கூடாது. தேயிலையில் அதிக அளவு அமிலங்கள் உள்ளதால் உணவில் உள்ள புரதக் கூறுகளுடன் சேர்ந்து, செரிமானத்தை தாமதப்படுத்திவிடும்.

● புகைப் பழக்கமே மிகவும் தவறானது. அதிலும் உணவு சாப்பிட்ட உடனே பிடிக்கும் ஒரு சிகரெட் பத்து சிகரெட் பிடிப்பதற்குச் சமமான விளைவை ஏற்படுத்துவதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

● உணவு சாப்பிட்ட உடனே நடப்பதைத் தவிர்க்கவேண்டும். சாப்பிட்ட உடன் நடப்பது நல்லது என்ற கருத்து தவறானது. சாப்பிட்ட பிறகு சில நிமிடங்கள் உட்கார்ந்து ஓய்வு எடுத்துக் கொண்ட பிறகு நடக்கலாம். இரவு உணவுக்குப் பிறகு இப்படிச் செய்வது நல்லது. சாப்பிட்ட உடனே நடந்தால் உணவில் உள்ள சத்துகள் உணவு மண்டலத்தை அடைய முடியாமல் போய் விடும். சாப்பிட்ட சத்துக்கள் உடலில் சேராது.

● சாப்பிட்ட உடனே படுத்துத் தூங்கக்கூடாது. அப்படி செய்தால் உண்ணும் உணவு செரிமானம் ஆகாமல் நெஞ்செரிச்சல், வாய்வுத் தொல்லை போன்ற பிரச்னைகளை ஏற்படுத்துவதுடன், நோய்க்கிருமிகள் தோன்றுவதற்கும் காரணமாகும். ●

உண்மையாக

நடப்பது மட்டும் போதுமா?

படித்ததில் பிடித்தது...

நான் பள்ளியில் படிக்கும்போது ஒருநாள் வகுப்புக்குத் தாமதமாகச் சென்றேன். காரணம், அதற்கு முந்தின தினம்தான் பள்ளி வேலையாக அருகிலுள்ள நகரத்துக்குச் சென்றிருந்தேன். இரவு வருவ தற்கு மிகவும் தாமதமாகி விட்டது. அசதியில் தூங்கிவிட்டதால் நான் பள்ளிக்குச் செல்வதும் தாமதமாகிவிட்டது. ஆசிரியரிடம் பள்ளி வேலையாக மாவட்ட கல்வி அலுவலர் அலுவலகத்துக்குச் சென்று வந்ததால் தாமதமாகிவிட்டது என்று கூறினேன். ஆனால், நான் எந்த வேலையாகச் சென்றேனோ அந்த வேலையை முடித்ததற்கான அத்தாட்சிக் கடிதத்தை வாங்க மறந்துவிட்டேன். நான் உண்மையைச் சொல்லியும்கூட ஆசிரியரின் தண்டனைக்கு ஆளானேன். மறுநாள் வீட்டிலிருந்த புத்தக அடுக்கில் காந்தியின் சத்திய சோதனை புத்தகத்தை எடுத்து மனம் போன போக்கில் புரட்டத் தொடங்கினேன். ஒரு பக்கத்தில் நான் படித்த ஒரு நிகழ்ச்சி உண்மையாக இருந்தால் மட்டும் போதாது. எச்சரிக்கையாகவும் இருக்கவேண்டும் என்ற உண்மையை எனக்கு உணர்த்தியது.

காந்தியின் வார்த்தைகளிலேயே அந்தப் பகுதியைப் பார்ப்போம்...

'நான் உயர்நிலைப் பள்ளியில் படித்துக்கொண்டிருக்கும்போது கிரிக்கெட்டும், தேகாப்பியாச வகுப்பும் கட்டாயமாக இருந்தன. எனக்கு அவற்றில் விருப்பமில்லை. மேலும் என் தந்தைக்கு பணிவிடை செய்வதில் எனக்கு இருந்த ஆர்வமும் அதற்கு ஒரு காரணம். ஒரு சனிக்கிழமையன்று காலையில் நான் பள்ளிக்குச் செல்லவேண்டும். மதிய உணவுக்கு வீட்டுக்கு வந்துவிட்டு, மறுபடி யும் மாலை நான்கு மணிக்கு தேகாப்பியாச வகுப்புக்குச் செல்லவேண்டும். நான் என் தந்தைக்கு பணிவிடை செய்வதில் மும்முரமாக இருந்ததால் நேரம் போனதே தெரியவில்லை. திடீரென்று தேகாப்பியாச வகுப்பு நினைவு வந்தவனாக வகுப்பில் கலந்துகொள்ள நான் பள்ளிக்கூடம் சென்றேன். அப்போது அங்கிருந்த பிள்ளைகள் எல்லோரும் போய்விட்டிருந்தனர். மறுநாள் வகுப்புக்கு வந்த ஆசிரியர், நான் வரவில்லை என்று குறித்திருந்ததைப் பார்த்து என்னை விசாரித்தார். நான் நடந்ததைக் கூறினேன். ஆனால், அவர் ஏற்க மறுத்து அபராதம் விதித்தார். நான் உண்மையாக இருந்தும் நேரம் பார்ப்பதில் எச்சரிக்கையாக இல்லாத காரணத்தினால் தேகாப்பியாச வகுப்புக்குத் தாமதமாகச் செல்லவும் அபராதம் செலுத்தவும் நேரிட்டது'.

உண்மையாக மட்டுமல்ல எச்சரிக்கையாகவும் இருக்கவேண்டும் என்பதை உணர்த்திய இந்தச் சம்பவம் மிகவும் பிடித்திருந்தது. ●

வாசகர்களே,

இதேபோல் நீங்கள் படித்த ஏதேனும் ஒரு புத்தகத்தின் ஒரு சிறு பகுதி உங்கள் மனதுக்குப் பிடித்திருக்கலாம். அந்தப் பகுதி உங்கள் வாழ்க்கையில் மாற்றத்தையும் ஏற்படுத்தி இருக்கலாம். அதுபோன்ற நல்ல விஷயங்களை மற்றவர்களுடன் பகிர்ந்துகொள்ளுங்களேன்.

அனுப்பவேண்டிய முகவரி: பொறுப்பாசிரியர், ஓம் சக்தி மே/பா. சக்தி சுகர்ஸ் லிமிடெட், ஏபிடி காம்ப்ளெக்ஸ், புது எண். 72,மவுண்ட் ரோட், கிண்டி, சென்னை 600032 (தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம் அருகில்) போன்: 044 – 22350238 / 42328097

Sakthi
as pure as mother's love
தாய்மையின் வலிமையுடன்
சக்தி பால்
தாய் பாசம் போல் தூய்மையானது
Sakthi
MILK
Pasteurised, Homogenised Standardised Milk
SUPREME
Sakthi
MILK
SPECIAL
Pasteurised, Homogenised, Standardised Milk
Sakthi
MILK
SELECT
Pasteurised Toned Milk
500ml
Available in: 250 ml, 500 ml & 1 litre
பால் | தயிர் | பனீர் | வெண்ணெய் | நெய் | டெய்ரி ஒயிட்னர் | ஸ்கிம்டு பால் பவுடர்
ABT FOODS
www.sakthidairy.com, Follow us on SAKTHI DAIRY For trade enquiry: 1800 102 3040 (Toll Free)

தசரத சக்கரவர்த்தியின் குலகுரு வசிஷ்ட முனிவர். முக்காலத்தையும் ஞானதிருஷ்டியால் அறியும் வல்லமை பெற்றவர். ஒருநாள் வசிஷ்டரிடம் தசரதர், ``அறுபதினாயிரம் ஆண்டுகள் பகைவர்கள், அசுரர்கள் இவர்களிடமிருந்து இந்த உலகத்தை, அதன் மக்களைப் பாதுகாத்து வந்தேன். என் காலத்திற்குப் பிறகு இந்த உலகம் பாதுகாப்பிற்கு ஓர் அரசனில்லாமல் கலக்கம் அடையுமே'' என வருத்தப்படுகிறார்.

தசரதருக்கு அப்பொழுது குழந்தைகள் இல்லை. தசரதரின் வருத்தத்தை கேட்ட வசிஷ்டர் சற்று தியான நிஷ்டையில் அமர்கிறார். அந்த தியான யோகத்தில், வசிஷ்டரின் ஞான திருஷ்டியில் திருமால் தேவர்களிடம், ``நீங்கள் வருந்த வேண்டாம். நான் பூமியில் கோசல நாட்டின் தலைநகரான அயோத்தியில் ராமனாகவும், என் சங்கு சத்ருக்னனாகவும் சக்கரம் பரதனாகவும், அனந்தன் லட்சுமணனாகவும் என் தம்பியராகப் பிறப்பார்கள். அப்பொழுது நான் உங்கள் துயரைப் போக்குவேன்'' என அருள் செய்வது தெரிந்தது.

சற்று நேரத்தில் தியானம் கலைந்து சகஜ நிலைக்குத் திரும்பிய வசிஷ்டர், `மன்னா, நீங்கள் கலங்க வேண்டாம். ஏழேழு உலகங்கள் உட்பட்ட இந்த அண்டம் முழுவதையும் காக்கும் வல்லமை படைத்த புதல்வர்கள் உனக்குப் பிறக்க உள்ளார்கள். அதற்காக குற்றம், குறையில்லாமல் புத்திர காமேஷ்டியாகத்தை நீ செய்ய வேண்டும்'' என்று தசரதருக்கு ஆலோசனை வழங்குகிறார். முனிவர் ரிஷ்யசிருங்கரின் தலைமையில் நாரதர் மிகுந்த சிரத்தையுடன் புத்திரகாமேஷ்டி யாகத்தைச் செய்ய, ராமன், லட்சுமணன், பரதன், சத்ருக்கனன் என்ற நான்கு புதல்வர்கள் அயோத்தியில் அவதரிக்கிறார்கள். தன்னுடைய ராம அவதாரத்திற்குத் திருமால் ஏன் கோசல நாட்டின் தலைநகரமான அயோத்தி நகரைத் தேர்வு செய்கிறார்?

இதற்கான காரணத்தைக் கவிச்சக்கரவர்த்தி கம்பர் கீழ்க்கண்டவாறு விளக்குகிறார்:

தசரதரின் ராஜ பண்பு

சரயு நதி அரவணைத்துச் செல்லும் கோசல நாடு பல சிறப்புகளைப் பெற்றது. அந்நாட்டின் அரசரான தசரதரிடம் இறைவனிடமுள்ள உண்மை அறிவு, இறை அருள், கருணை, தருமம், அமைதி, குற்றம் காண முடியாத வீரம், கொடை உள்ளம், நீதிநெறி தவறாத ஆட்சிமுறை ஆகிய ராஜகுணங்கள் அளவிற்கு அதிகமாகவே இருந்தன.

ஆதிம் மதியும், அருளும், அறனும், அமைவும்,
ஏதில் மிடல் வீரமும், ஈகையும், எண் இல் யாவும்,
நீதிந் நிலையும், இவை, நேமியினோர்க்கு நின்ற
பாதி; முழுதும் இவற்கே பணி கேட்ப மன்னோ

தசரதச் சக்கரவர்த்தியின் குடை மற்றும் செங்கோலின் கீழ் அனைத்து உயிர்களும் மேடு பள்ளம் இல்லாமல் ஒரே நிலையில் நிலைத்து வாழ்ந்து மகிழ்ந்தன. இதனை அறிஞர்கள்,

கம்பனின் பார்வையில்
திருமால் விரும்பிய அயோத்தி

``தசரதரின் வெண்கொற்றக் குடை குளிர்ந்த நிழலைக் கொடுத்து, இருளைக் கெடுத்தது. இவ்வாறு நன்மை கொடுக்கும் தசரதரின் வெண்கொற்றக் குடையிருக்க, ஆகாயத்தில் குடையாக குளிரைக் கொடுத்து, இருளைக் கெடுக்கும் சந்திரன் தேவையில்லாதது'' என்று சிலாகித்தார்கள்.

மண்ணிடை உயிர்தொறும் வளர்ந்து, தேய்வு இன்றி,
தண் நிழல் பரப்பவும், இருளைத் தள்ளவும்,
அண்ணல்தன் குடை மதி அமையும்; ஆதலான்,
விண்ணிடை மதியினை 'மிகை இது' என்பவே.

தசரத மன்னரின் சுயநலமில்லாமை

தசரதருக்கு குழந்தைகள் இல்லை என்பது உண்மைதான். ஆனால் வாரிசு இல்லை என அவர் வருந்தவில்லை. தசரதருடைய கவலையெல்லாம், அதுவரை மிகவும் பாதுகாப்பாக வாழ்ந்த முனிவர்கள், தவசிரேஷ்டர்கள், மக்கள், அந்தணர்கள், பசுக்கள், பட்சிகள் போன்ற உயிரினங்கள் அவருக்குப்பிறகு தலைவனில்லாமல் துன்பப்படுவார்களே! பகைவர்கள் தாக்குவார்களே என்ற அச்சத்துடன் வாழவேண்டியிருக்குமே என்ற பொதுநல கவலைதான். ஆகவேதான் வசிஷ்டரிடம் வருத்தப்படுகிறார் தசரதர்.

அருந் தவ முனிவரும், அந்தணாளரும்,
வருந்துதல் இன்றியே வாழ்வின் வைகினார்;
இருந் துயர் உழக்குநர் என் பின் என்பது ஓர்
அருந் துயர் வருத்தும், என் அகத்தை' என்றனன்

கோசல நாட்டில் நிலவிய தெய்வாம்சம்

தசரதனின் ஆட்சியில் நாடெங்கும் புகை கலந்த மேகங்கள் எங்கும் பரவியிருந்தன. அப்புகை சாதாரண புகையல்ல, பூஜை, புனஸ்காரங்களுக்கு பயன்படுத்திய அகிலின் வாசனைப் புகையும், சமையலறைகளில் பெண்களின் கைவண்ணத்தில் செய்யப்பட்ட சமையல் பொருள்களிலிருந்தும் புறப்பட்ட வாசனைப் புகையும், கரும்பு ஆலைகளிலிருந்து உண்டாகும் இனிமையான புகையும், எப்பொழுதும் நடக்கும் நான்கு மறைகளில் கூறப்பட்ட யாகங்களிலிருந்து கிளம்பும் புனிதப் புகையும் மேகங்களில் கலந்து எங்கும் பரவி யிருந்தன.

அகில் இடும் புகை அட்டில் இடும் புகை
நகல் இன் ஆலை நறும் புகை நான்மறை
புகலும் வேள்வியில் பூம் புகையொடு அளாய்
முகிலின் விம்மி முழங்கின எங்கணும்.

நாட்டு மக்களின் ஒழுக்கம்

கோசல நாட்டின் மக்களிடம் தீச் செயல்கள் என்ற குற்றமில்லை. அவர்களிடம் குடியிருந்தது சத்தியம் ஒன்றே. அதனால் அங்கே சினத்திற்கு இடமில்லாமல் போய்விட்டது. நீதிநெறிகள் மட்டுமே அவர்கள் மனதில் உயர்ந்து நின்றன. அதனால் கோசலநாட்டு மக்கள் ஏற்றத்தை மட்டுமே கண்டு வந்தார்கள். அந்நாட்டின் கற்புக்கரசிகளால் பருவ மழை தவறாமல் பொழிந்தது.

கூற்றம் இல்லை ஓர் குற்றம் இலாமையால்;
சீற்றம் இல்லைதம் சிந்தையின் செய்கையால்;
ஆற்றல் நல்லறம் அல்லது இல்லாமையால்
ஏற்றம் அல்லது, இழிதகவு இல்லையே
பொற்பின் நின்றன பொலிவு பொய் இலா,
நிற்பின் நின்றன நீதி மாதரார்,
அற்பின் நின்றன அறங்கள் அன்னவர்,
கற்பின் நின்றன கால மாரியே.

கல்வியறிவும் செல்வச் செழிப்பும்

நாட்டு மக்களில் கல்வியறிவு இல்லாதவர்கள் என பகுத்துக் கூறத்தக்கவர்கள் யாருமில்லை. அனைத்து மக்களும் கல்வியறிவு பெற்றிருந்தார்கள். கல்வியறிவால் அனைத்துச் செல்வங்களையும் அந்நாட்டு மக்கள் பெற்றிருந்ததால், அங்கு ஏழை பணக்காரன் என்ற ஏற்றத்தாழ்வுகள் இல்லை.

கல்லாது நிற்பார் பிறர் இன்மையின். கல்வி முற்ற
வல்லாரும் இல்லை; அவை வல்லர் அல்லாரும் இலை;
எல்லாரும் எல்லாப் பெருஞ் செல்வமும் எய்தலாலே.
இல்லாரும் இல்லை; உடையார்களும் இல்லை மாதோ

ஈகையும் விருந்தும்

அந்நாட்டுப் பெண்கள் சிறந்த கல்வியும், செல்வமும் பெற்றிருந்ததால், வருந்தி வருவோர்க்கு `இல்லை' என்று கூறாமல் மனதார கொடை வழங்குவதும், விருந்தினர்களுக்குப் பசியாற உனவு அளிப்பதையும் தவிர வேறு செயல்கள் புரியவில்லை.

பெருந் தடங் கண் பிறைநுதலார்க்கு எலாம்,
பொருந்து செல்வமும் கல்வியும் பூத்தலால்,
வருந்தி வந்தவர்க்கு ஈதலும், வைகலும்,
விருந்தும், அன்றி, விளைவன யாவையே?

அயோத்தி நகரத்தின் மேன்மை

கூறும்போது வாய் இனிக்கும் மதுரமான அயோத்தியா நகரத்தில், உலகத்தில் உள்ள அனைவரும், கடும் தவம் செய்து உயர்கதியை அடைந்தவர்களும், உயர்கதியை அடையத் தவம் செய்யும் முனிவர்களும் மீண்டும் மீண்டும் பிறப்பதற்கு ஏங்கும் நிலையைக் காணும்போது, அந்நகரத்தின் சிறப்பைப் பற்றி கூறவே வேண்டாம்.

செவ்விய மதுரம் சேர்ந்த நல் பொருளின் சீரிய கூரிய தீம் சொல்
வவ்விய கவிஞர் அனைவரும் வடநூல் முனிவரும் புகழ்ந்தது வரம்பு இல்
எவ் உலகத்தோர் யாவரும் தவம் செய்து ஏறுவான் ஆதரிக்கின்ற
அவ் உலகத்தோர் இழிவதற்கு அருத்தி புரிகின்றது அயோத்தி மா நகரம்

``அந்த அயோத்தி நகரத்தைக் காண்கிறேன். இந்த நகரம் என்ன பூமி தேவியின் பொலிவான முகமா? அந்த பொலிவான திருமுகத்தில் திகழும் மங்கலத்திலகமா? அல்லது பூமித் தாயின் கருணைக் கருவிழியா? அல்லது மங்கல நாணா? அல்லது பூமா தேவியின் மார்பில்

தவழும் வாசம் பரப்பும் மணிமாலையா? அல்லது அத் தாயின் உயிர் நாடியா? மஹாலக்ஷ்மியைத் தாங்கி நிற்கும் தாமரை மலரா? திருமாலின் மார்பில் ஜொலிக்கும் கௌஸ்துபம் போன்ற தங்கப் பேழையா? பூலோக வைகுந்தமா? புரியவில்லையே. என் கண்ணுக்கு இப்படி பலவாக கட்சியளிக்கிறதே அயோத்தி நகரம்! இதில் எது என்று நான் உரைப்பேன்'' என அயோத்தியைப் புகழ்கிறார் கம்பர்.

நிலமகள் முகமோ திலகமோ கண்ணோ நிறைநெடு மங்கல நாணோ
இலகுபூண் முலைமேல் ஆரமோ உயிரின் இருக்கையோ திருமகட்கு இனிய
மலர்கொலோ மாயோன் மார்பினன் மணிகள் வைத்தபொற் பெட்டியோ வானோர்
உலகின்மேல் உலகோ ஊழியின் இறுதி உறையுளே யாதென உரைப்பாம்

இமயமலையில், தோன்றி, வழிந்துபெருகியோடும் சரயு நதி ஜீவநதி; என்றும் இடைவற்றாமல் ஓடுகிறது. அதற்கு அந்த நதி பாயும் கோசல நாட்டு மன்னர்களின் நல்லொழுக்கம் ஒப்புவமையாகிறது. பிரசித்தி பெற்ற சூரியகுலத்தைச் சேர்ந்த அந்த அரசர்கள் ஒருவர் பின் ஒருவராக நெடுங்காலமாக அரசாட்சி செய்கிறார்களாம்; அவர்களுடைய கால்வழிகள் இடைவற்றாமலிருக்கிறது. ஒழுக்கமும் அப்படியே இடையறாது பெருகி வந்திருக்கிறது என்பதை நதியை வருணிக்கும் போது கம்பன் தன் புனைவைப் பார்க்கமுடிகிறது.

இரவி தன்குலத் தெண்ணிபல வேந்தர்தம்
புரவு நல்லொழுக் கின்படி பூண்டது
சரயு வென்பது தாய் முலையன்ன திவ்
வரவு நீர்நிலத்தோங்கு முயிர்க்கெல்லாம்

இப்படிப்பட்ட அரசர்கள் ஆளும் ராஜ்யத்தை வளம் பெறச் செய்து அழகு மிளிரும்படி செய்யும் ஜீவநதியான சரயு நதி பாலூட்டி சீராட்டிக் குழந்தைகளை வளர்க்கும் தாயைப் போன்றது. சரயு என்பது 'தாய் முலை அன்னது' என்று கூறுவது அவரது கவி பாடும் திறனின் உயர்நிலை அல்லவா!

உயிர்களை வினை பலவகைப் பிறப்புகளாக மாற்றுவது போலச், சரயு நதி தன் ஓட்டத்தால் முல்லையைக் குறிஞ்சியாகவும், மருதத்தை முல்லையாகவும், நெய்தலை மருதமாகவும் மாற்றி, அந்த நிலங்களின் பொருட்களை எல்லாம் இடம் மாறச்செய்தது.

முல்லையைக் குறிஞ்சியாக்கி,மருதத்தை முல்லையாக்கி
புல்லிய நெய்தல் தன்னைப் பொருவறு மருதமாக்கி
எல்லையில் பொருள்களெல்லாம் இடைதறுமாறு நீரால்
செல்லுறு கதியிற்செல்லும் வினைஎனச் சென்றதன்றே

இந்த சரயு நதிக்கரையில்தான், தசரதன் தனக்கு மகப்பேறு வேண்டி புத்திர காமேஷ்டி யாகம் செய்துள்ளான். கோசல நாடும், தசரதரின் ஆட்சிமுறையும்தான் திருமால், `அயோத்தி நகரை விரும்பித் தேர்ந்தெடுத்து, ``அயோத்தி நகரில் வந்து அவதரிப்பேன்'' என்று தேவர்களுக்கு அருள் செய்கிறார் என்கிறார் கம்பர்.

'வளையொடு திகிரியும். வடவை தீதர
விளைதரு கடுவுடை விரிகொள் பாயலும்.
இளையவர்கள் என அடி பரவ ஏகி. நாம்.
வளைமதில் அயோத்தியில் வருதும்' என்றனன்.

●

பிரம்ம கமலம்

மலர்களில் குறிஞ்சி மலர் பன்னிரண்டு வருடங்களுக்கு ஒருமுறை மலரும் என்பார்கள். அதேபோல் வருடத்துக்கு ஒருமுறை மட்டுமே மலரும் பூவே பிரம்ம கமலம். பிரம்மனின் நாபிக் கமலத்தில் இருந்து பூ தோன்றுவதுபோல தோற்றமளிப்பதால் இதற்கு பிரம்மகமலம் எனப் பெயர் வந்ததாக கூறப்படுகிறது. இமயமலைப் பகுதிகளில் மட்டுமே காணக்கிடைக்கும் இந்தப் பிரம்ம கமலம் மலரை தற்போது தமிழகத்திலும் காண முடிகிறது.

ஒரு செடியை வளர்க்கவேண்டும் என்றால், அதன் விதை அல்லது கிளையை நட்டு வைக்க வேண்டும். ஆனால், இந்த பிரம்மகமலம் செடியில் இருக்கும் ஒரு இலையைப் பிடுங்கி நிலத்தில் நட்டு வைத்தாலே அது செடியாக மாறும் அதிசய திறன் கொண்டது. இலைகளே வளரும் கணுக்களாக செயல்பட்டு நிலத்தில் வேர் விட்டு வளர்கிறது. இந்தச் செடிக்கு அதிக தண்ணீர் தேவை இல்லை. குறைந்த தண்ணீரில் கூட அழகாக வளரும்.

கொடியாக படரும் செடியில் பூக்கும் பூக்கள் பார்க்க நட்சத்திரம் போன்ற தோற்றம் கொண்டது. அளவில் பெரியதாக பளிச்சிடும் வெண்மை நிறத்தில் காட்சியளிக்கிறது. இதன் மணம் எட்டு ஊருக்கு வீசும் என்கிறார்கள். மேலும், அந்த மணம் ஒருவித மன அமைதியை கொடுக்குமாம். இரவு நேரங்களில் பூப்பதால் மகரந்தச் சேர்க்கைக்காக பூச்சிகளை ஈர்க்கவே அதன் மணம் உதவும். மேலும், இரவிலும் பளிச்சிடும் அதன் வெண்மை நிறம் பூச்சிகளை தன்பால் ஈர்க்க உதவுகிறது.

நானும் என் வீட்டில் இந்தச் செடியை வைத்துவிட்டு பிரம்மகமலம் மலர்வதற்காகக் காத்திருக்கிறேன்.

– **ஜெ.லேகாவர்ஷினி,** மூன்றாம் ஆண்டு இளம்அறிவியல் (வேளாண்மை) வானவராயர் வேளாண்மை கல்லூரி, மணக்கடவு.

With Best Compliments from

A B T LIMITED

Divisions

ABT PARCEL SERVICE | **ABT** MARUTI | **ABT** WIND ENERGY | **ABT** BUS SERVICE

ABT PUMP | **ABT** INFO.NET | **ABT** EXPPRESS

Corporate Office : 180,Race Course Road,Coimbatore - 641 018. Phone : 0422 - 4333666 Fax : 0422-4333100

Website: www.abtlimited.com **E-mail : corporate@abtlimited.com**

பக்தி எப்போதும் தொடர்ந்திருக்கவேண்டும்!

மனிதப் பிறப்பின் லட்சியமே கர்மவினைகளைப் போக்கிக்கொண்டு பரம்பொருளுடன் ஐக்கியமாவதுதான். அதற்கு நம் எண்ணம், சொல், செயல் எல்லாமே நல்லனவாக இருக்கவேண்டும். அதற்கு உரிய மனநிலை, மனம் பக்குவப்பட்டவர்களுக்கே வாய்க்கும்.

மனம் பக்குவப்படவேண்டுமானால், அதற்கு ஒரே வழி மனதை பக்தி மார்க்கத்தில் செலுத்துவதுதான். அதிலேயே மனதை நிலைநிறுத்தவும் வேண்டும். அப்போதுதான் பக்தியின் முழுமையான பலன் நமக்குக் கிடைக்கும்.

பக்தி என்பது ஏதேனும் ஒரு கோரிக்கை நிறைவேறவேண்டும் என்பதற்கான பிரார்த்தனையாக இருப்பதில் தவறில்லை. ஆனால், அந்தக் கோரிக்கை நிறைவேறியதும் நாம் பக்தி செலுத்துவதை மறந்துவிடக்கூடாது.

ஒரு கதையைப் பார்ப்போம்.

எந்த ஒரு பொருளையும் பொன்னாக்கும் ரசவாத வித்தையைக் கற்றுக்கொள்ள விரும்பிய ஒருவன், பல காலமாக முயற்சி செய்துகொண்டிருந்தான். ஒருவழியாக ஒரு சித்த புருஷரை சந்தித்தான். அவரிடம் தன்னுடைய விருப்பத்தைத் தெரிவித்தான். சித்த புருஷர்கள் எதையும் வெளிப்படையாக சொல்லித் தரமாட்டார்கள். மறைமுகமாகவே உணர்த்துவார்கள். சீடர்கள்தான் அதைப் புரிந்துகொள்ளவேண்டும்.

அந்த சித்த புருஷர், ஒரு தாம்பாளத்தில் தானியங்களைப் பரப்பி, அதை வெயிலில் வைத்து உலர்த்தும்படிக் கூறி, உலர்த்துவதற்கு ஒரு குச்சியையும் தந்துவிட்டுப் போனார். அந்த சீடனும் அப்படியே செய்தான். சற்று நேரத்துக்குப் பிறகு தாம்பாளமும் தானியங்களும் தங்கமாகி விட்டன. உடனே அவன் தானியங்களை தாம்பாளத்துடன் எடுத்துக்கொண்டு, குச்சியை அங்கேயே போட்டுவிட்டுச் சென்றுவிட்டான். ஆனால், உண்மையில் எந்தப் பொருளையும் தங்கமாக்கும் சக்தி அந்தக் குச்சிக்குத்தான் இருந்தது. அவன் நாடி வந்த பலன் பாதியிலேயே போய்விட்டது. அதேபோல்தான் பக்தியின் மூலம் நமக்கு அவ்வப்போது சில கோரிக்கைகள் நிறைவேறினாலும், நாம் அத்துடன் நின்றுவிடாமல், பக்தி மார்க்கத்தில் மனதை ஈடுபடுத்திக்கொண்டே இருக்க வேண்டும். ●

இரா.பொன்னாண்டான்

முருகனே தமிழாக..!

சிவன் நெற்றிக் கண்ணின்
சினமானவன்.
சில்லென்ற சரவணப் பொய்கையின்
குளிரானவன்.
அம்பிகையின் ஆரத் தழுவலில்
ஆறுமுகமானவன்.
அந்த பிரமனோ
இவன் மாணவன்.

குறுமுனிக்கு தமிழ் தந்த
குன்றமர் குமரன்.
கூற்றுவனாய் நின்ற சூரன்
குடல் கிழித்த அமரன்.
வினையறுக்க விசாகத்தில்
வேலொடு உதித்த சேயவன்.
வினையாலே குதித்த
அருணகிரி கவிக்கு தாயவன்.

அவ்வைக்கு சுட்ட பழம் காட்டியே
அகந்தை கொன்றான்.
அவனும் பழம் வேண்டியே
கந்தை அணிந்து நின்றான்.
திருத்தணியும் குன்றமும்
திருமணம் கமழும்.
திருமுருகாற்றுப் படையெங்கும்
அவன் நறுமணம் பரவும்.

இங்கு,
தமிழே முருகனாய்
தவழ்ந்ததுவே...
தாயார் சக்தியே
வேலாய் நின்றதுவே...

முக்திக்கும் பக்திக்கும்
முதல்வா... முருகா...
மூவரும் தேவரும் போற்றும்
அன்னையின் புதல்வா...
வினையறுக்க வேண்டும்
உன் வேலாயுதம்...
நான் பாடவேண்டும்
பல்லாயிரம்... பல்லாயிரம்..!

எஸ்.கண்ணன்கோபாலன் ■ படங்கள் : கே.எம்.பிரசன்னா

'ஆறுவது சினம்' என்றார் ஔவைப் பாட்டி. சினமென்பது சேர்ந்தாரைக் கொல்லும் என்றார் வள்ளுவப் பெருந்தகை. எனவே நாம் கோபத்தை அறவே தவிர்க்கவேண்டும். ஆறுவது சினம் என்பது நமக்கு மட்டும்தான் என்று எண்ணிவிட வேண்டாம். தெய்வங்களுக்கும் அது பொருந்தும்தான்!

அதற்குச் சாட்சியாகத் திகழ்வதுதான் திருத்தணி என்னும் தணிகைமலை.

அழகன் என்றும் குமரன் என்றும் நம்மால் கொண்டாடப்பெறும் முருகன், ஒருமுறை கடும் சினம் கொண்டான். அவன் கொண்ட அந்தச் சினமானது சூரபத்மனை சம்ஹாரம் செய்தது. அதன் பயனாக நமக்கு செந்தூர் என்னும் ஒரு படைவீடு கிடைத்தது.

அம்மையப்பரிடம் ஒரு பழம் காரணமாய்ச் சினம் கொண்டான். பழநி என்னும் படைவீடு கிடைத்தது இந்த உலகுக்கு.

பிரணவப் பொருள் அறியாத பிரமன் பேரில் சினம் வந்தது. அதன் காரணமாக அந்த ஞானக்குமரன் தன் அப்பன் பரமனுக்கே பிரணவப் பொருள் உரைத்த சுவாமிமலை என்னும் படைவீடு கிடைத்தது நமக்கு.

அந்த அழகன் சினம் கொண்ட காரணத்தினால் மூன்று படைவீடுகள் கிடைத்தாலும், அவன் கொண்ட சினம் தணிய அவனுக்கு ஓர் படைவீடு வேண்டாமா என்ன? அப்படி அவன் கொண்ட சினம் தணிந்த ஒரு படைவீடும் உருவாகவே செய்தது.

ஐந்தாவதாக அமைந்த அந்தப் படைவீடுதான் இதோ இப்போது நாம் தரிசித்துக் கொண்டிருக்கும் திருத்தணிகை மலை.

அந்தத் திருத்தணிகையில் முருகப்பெருமான் சினம் தணிந்து அமர்ந்த காரணத்தினால், நம்முடைய வல்வினைகளும், வருத்தும் பிணிகளும் அவன் அருளால் தணிந்து போகின்றன. அப்படி அவன்

தணிகை மலையில் அருளும் அழகன்!

நமக்கு அருள்புரியத்தான் இங்கே கோயில் கொண்டான் போலும்!

முருகப்பெருமான் கொண்ட சினத்தையே தணிவிக்க வேண்டுமானால், அந்தத் தணிகைமலை எத்தனை தவம் செய்திருக்க வேண்டும்? அந்தத் தவம் முருகப்பெருமானின் சினம் தணியவேண்டும் என்பதற்காக மட்டுமல்ல, தானும் முக்தி நிலை அடையவேண்டும் என்பதற்காகவும்தான்.

அந்த மலைக்கு மட்டும் முருகனின் சினம் தணிவிக்கவும், தனக்கும் முக்தி நிலை வாய்க்கவும் வேண்டிய அவசியமும் அதன்பொருட்டு தவம் இருக்கவேண்டியதான அவசியமும் ஏன் ஏற்படவேண்டும்? அதற்கும் ஓர் அழகான காரணம் இருக்கவே செய்கிறது.

அந்த அழகான காரணம்...

முருகனை மணம் முடிக்கவேண்டும் என்ற விருப்பத்தில் இச்சா சக்தியான வள்ளியம்மை அருகில் இருந்த வள்ளிமலையில் அவதரித்து இருந்ததுதான்!

முருகப்பெருமானின் சினம் தணியவேண்டும் என்பதற்காக அந்த மலை தவம் செய்யத் தொடங்கிய அந்த வேத காலத்தில்தான் குமார சம்பவமும் நிகழ்ந்தது.

அந்த மலையின் தவம் தொடங்கியபோது, அந்த ஞானக்குமரன் சூரபத்மனை ஒடுக்க தன் பரிவாரங்களுடன் செந்தில்பதிக்குப் போர் முடிக்கப் போயிருந்தான்.

அழகு முருகனின் வரவை எண்ணி ஏங்கியபடி தவம் இயற்றுகிறது அந்த மலை.

காலம் கனிகிறது.

திருச்சீர் அலைவாய் என்னும் திருச்செந்தூர் திருத்தலத்தில் முருகப்பெருமான் சூரபத்மனை வெற்றி கொண்டு ஆட்கொண்ட இனிய வெற்றி முழக்கம் தணிகை மலையிலும் எதிரொலித்தது. அந்த இனிய முழக்கத்தைக் கேட்டு, விரைவிலேயே வந்துவிடுவான் முருகன் என்ற எண்ணத்தில் பூரித்துக் கிடந்தது தணிகை மலை.

அந்த வெற்றிக்குமரனும் வருகிறான். அவன் இந்த மலையைத் தேடி வருவதற்குள், அவன் கரத்தில் மின்னும் வேலுக்கு, சுவாமிமலையில் வேதம் சொன்ன ஞானமும், செந்தூர்ப்பதியில் சூரனை வெற்றி கொண்ட வீரமும், பரங்குன்றத்தில் தெய்வயானையை மணம் புரிந்த காதலும் என்னும் பல பெருமைகள் சேர்ந்துவிட்டன.

அந்த வீரம், ஞானம் காதல், அனைத்தும்

ஒன்றாக இணைந்த வேலுடன் வரும் முருகப்பெருமானின் அருளுடன் இந்த தணிகைமலையும் மற்றுமொரு காவியம் படைக்கிறது.

அதுதான் இச்சாசக்தியான வள்ளியை குமரன் திருமணம் செய்து கொண்டு தன்னோடு சங்கமிக்கச் செய்த இனிய செய்தி.

அந்த வள்ளியின் கதைதான் எல்லோருக்கும் தெரியுமே!

நமக்கெல்லாம் நடந்த பிறகுதான் தெரியும்.

அது நடக்கும் முன்னரே அந்தத் திருத்தணிகை மலையும், அருகிலுள்ள வள்ளி மலையும் அந்தச் செய்தியைத் தெரிந்து வைத்திருந்தன.

அதனால் திருத்தணிகை தானே ஒரு திருமண மேடையாகி மாப்பிள்ளையாகப் போகும் மால்மருகனின் வரவுக்காகக் காத்திருந்தது. அருகிலுள்ள வள்ளிமலையோ இச்சாசக்தியான வள்ளியைத் தன் மருங்குகளில் செழித்திருந்த தினைப்புனத்தில் வளர்த்து வந்தது.

'எந்த நேரத்திலும் குமரேசன் வருவான்; குறமகள் வள்ளியைச் சந்திப்பான்; வேடனாக, விருத்தனாக அவளுடன் விளையாடி அவளை மணம் புரிவான். அந்தத் திருக்காட்சியை நாம் காணத் தவறிவிடக்கூடாது என்ற களிப்பிலும் ஆர்வ எழுச்சியிலும், தேவாதி தேவர்களில் சிலர் அந்தத் திருத்தணிகை மலைச் சாரலில் மரங்களாகவும் மலர்க் கொடிகளாகவும் முளைத்தெழுந்து காத்திருந்தனர்.

சிலர் அந்த மலையோரத்துச் சுனைகளிலும் வாவிகளிலும் சுந்தர மீன்களாக பிறந்து காத்திருந்தனர்.

முருகனை மணக்கவிருக்கும் அந்த 'வள்ளிக் குறமக'ளோடு விளையாடும் மான்களில் புள்ளிமான்களாகப் பலர் அவதரித்துக் காத்திருந்தனர்.

எல்லோருக்கும் மேலாகத் தம்பியின் திருமணத்தை நடத்தி வைக்க ஆபத்சகாயராக விநாயகப் பெருமானே அங்கு எழுந்தருளி யிருந்தார். (இத்தலத்தில் விநாயகப் பெருமானுக்கு 'ஆபத்சகாய விநாயகர்' என்றே பெயர்).

இப்படித் திரிலோகமும் கல்பகோடி காலமாய்த் தவமிருந்து வள்ளிக்கும் வேலனுக்கும் திருமணம் நடத்திக் காட்டிய அந்தத் திருத்தணிகை மலையின் அடிவாரத்தில் இருந்தபடி மலைக்கோயிலை தலையை உயர்த்திச் சாய்த்துப் பார்க்கிறோம்.

அப்போது அந்த திருத்தலத்தின் இன்னொரு மகிமை நமக்குப் புலனாகிறது.

அது இருள் சூழ்ந்து கிடந்த காலத்தில் இருள்போக்கி அருள்சுரந்த மகிமை..!

அந்த மகிமையை நாம் எந்நாளும் நினைவு கூரும் வகையில் ஆண்டுதோறும் ஓர் பக்திப்பரவசமான விழா காண்கிறது இந்த மலை.

அந்த விழாவின் தொடக்கம்...

சென்ற நூற்றாண்டின் ஆரம்பத்தில் (1912) நிகழ்ந்த அற்புத வரலாறு.

அப்போது இந்த மண்ணில் ஆங்கிலேயர்கள் ஆட்சி செலுத்தி வந்தனர். பாரதம் அனுபவித்த அந்த அடிமை வாழ்வுக் காலத்தில் அரசாங்க அலுவலில் பணிபுரியும் ஊழியருக்கு ஒரு தலைக்குனிவு இருந்தது.

அதாவது ஆங்கில ஆண்டின் முதல்நாள் ஒவ்வோர் இந்திய ஊழியரும் தனக்கு உயர் அதிகாரியாக இருக்கும் ஆங்கிலேயரை சென்று பார்த்து வணக்கம் செலுத்திவிட்டு வரவேண்டுமாம்! இப்படி வணக்கம் செலுத்த வேண்டியவர்களுள், உயர் நிலையிலிருந்த இந்தியர்களும் இருந்தனர்.

இந்த நிலையைக் கண்டு தன்மானம் மிக்கப் பல இந்தியத் தமிழ் அதிகாரிகள் மனம் குன்றினர். ஆனாலும் வருடம் பிறந்ததும் முதல் தேதியன்று தமக்கு மேலதிகாரியாக இருக்கும் ஆங்கிலேயனைக் கண்டு வணங்குவதைத் தவிர்க்க முடியவில்லை.

இந்த நிலையில்தான் இந்த அடிமை உணர்வை மிகச் சாதுரியமாக வெல்ல ஒரு வழியைக் கண்டுபிடித்தனர் தமிழ்நாட்டு அரசு அலுவலர்கள்.

எந்த முதல் தேதி ஆங்கில அதிகாரியை வணங்க வேண்டுமோ, அந்த முதல் தேதி, அரசுக்கெல்லாம் அரசனாக அதிகாரிகளுக் கெல்லாம் நாயகனாகத் துலங்கும் எம்பெருமான் முருகனின் சந்நிதிக்குச் சென்று வழிபட்டால் என்ன?

அந்நியனாயினும் பிற மதத்தைச் சார்ந்தவனா யினும் ஆங்கிலேயனிடம் ஒரே ஒரு நல்ல

குணம் உண்டு. நம் தெய்வ வழிபாட்டில் அவன் குறுக்கிடுவது இல்லை.

அந்த நிலையைப் பயன்படுத்தி ஒவ்வோர் ஆண்டும் முதல் நாளன்று ஆங்கிலேயனை வணங்குவதற்குப் பதில் திருத்தணிக்கு வந்து ஆறுமுகனை வணங்குவது என்று தீர்மானித்தனர், அந்த அதிகாரிகள்.

அதனால் ஆங்கிலேயனை வணங்கும் அவலமும் விலகும்; ஆண்டவனை வணங்குவதால் அருளும் கிட்டும்.

அப்படி தொடங்கியதுதான் இன்று ஒவ்வொரு ஆங்கில ஆண்டின் முதல் தேதியன்றும் மிகக் கோலாகலமாக ஆயிரமாயிரம் மக்கள் கலந்து கொண்டு கொண்டாடும் படி உற்சவ விழா.

இந்த விழாவை 1912-ல் தொடங்கி வைத்தவர், திருப்புகழை ஓலைச்சுவடியிலிருந்து முதன் முதலாக அச்சில் ஏற்றி முருகனின் சேவையில் தன்னை ஈடுபடுத்திக் கொண்ட வ. சு. சண்முகம் பிள்ளை. முருகனின் ஆலயத்துக்குச் செல்லும் ஒவ்வொரு படியிலும் நின்று திருப்புகழைத் தம் பக்த நண்பர்களுடன் பாடி முருகனை ஆங்கில ஆண்டு முதல் தேதி வழிபட்டு அந்தப் படி உற்சவத்தைத் தொடங்கினார்.

பின் 1917-ல் வள்ளிமலை சச்சிதானந்த சுவாமிகள் இந்தப் பணியைத் தொடர்ந்தார். 1921-ல் தம் அடியவர்களுடன் இந்த விழாவில் கலந்துகொண்டு அவர் இதை விரிவுபடுத்தினாராம்.

இந்தக் காலகட்டத்தில் இந்த விழாவை மகிமைப்படுத்தி உதவியவர்கள் வள்ளிமலை, ஈசன்மலை, மௌனகுரு சுவாமிகள் உள்ளிட்ட பல பெரியோர்.

ஆறுமுகன் திருவடியைத் தேடிச் செல்லும் அந்தப் படிகள்தான் என்னமாய் ஓர் அமைதிப் புரட்சி ஆன்மிகப் புரட்சி நடத்தியிருக்கின்றன!

ஆங்கில ஆதிக்கத்தை முதன் முதலாக ஒடுக்கி இந்த பூமியில் விடுதலையை நுகரச் செய்தது யார் என்று கேட்டால் கொஞ்சமும் யோசிக்காமல் சொல்லிவிடலாம் இந்தத் தணிகைமலை படிகள்தான், நம்முடைய தணிகைமலை ஆறுமுகன்தான் என்று! அதற்குச் சாட்சிதான் இன்று ஒவ்வொரு ஆண்டும் முதல் தேதியில் நடக்கும் படி உற்சவ விழா!

அந்தப் படிகளை எண்ணிப் பார்க்கிறோம்.

அந்தப் படிகளின் மகிமையை மட்டுமல்லாது அவற்றின் எண்ணிக்கை அளவையும் எண்ணிப் பார்க்கிறோம்.

மொத்தம் 365 படிகள்!

அந்த எண்ணிக்கை நமக்கு எதை உணர்த்துகின்றன.?

மனிதன் தன் வாழ்வில் ஓர் ஆண்டைக் கடக்க வேண்டுமானால், 365 நாள்களைக் கடக்க வேண்டும். அப்படி நம் வாழ்க்கை நாள்கள் அனைத்தையும் பத்திரமாகக் கடக்கவேண்டுமானால், இந்த 365 படிகளையும் கடந்து தணிகைப் பெருமானின் திருவடிகளில் சரண் அடைந்தாலே போதும்.

அந்த மன உணர்வோடு நாமும் அந்தப் படிகளில் ஏறுகிறோம்.

ஏற ஏற நம்முடைய செவிகள் இரண்டிலும் அருணகிரிநாதரின் திருப்புகழ் ஒலிப்பது போன்ற பிரமை. காலம் காலமாக எத்தனை கோடி பக்தர்கள் அந்தப் படிகளில் நின்று அந்தத் திருப்புகழைப் பாடியிருக்கிறார்கள். ஆரம்பத்தில்

அரசாங்க அதிகாரிகள் மட்டும் ஆரம்பித்த இந்த விழா இன்று அனைத்து மதத்தினருமே இணைந்து நடத்தும் பெருவிழாவாக மாறிப் பெருமை பெற்றிருக்கின்றது. (உதாரணம்:கடையநல்லூர் மஜீத் என்ற முஸ்லீம் அன்பர்) இப்படி எண்ணற்றோர் நாமணக்கப் பாடிப் பாடி மணக்கச் செய்த திருப்புகழின் அந்த எதிரொலிப்பு சர்வசதா காலமும் ரீங்கரித்துக் கொண்டிருப்பது அதோ கேட்கிறதே நமக்கு!

அருணகிரிநாதர் இந்த தணிகைமலைப் பெருமானைப் பற்றி தனிச் சிறப்புடன் 645 திருப்புகழ் பாடல்களைப் பாடியிருக்கிறார்.

தாயுமானவரே, உணர்ச்சி பொங்க 'ஐயா, அருணகிரி அப்பா, உன்னைப் போல் மெய்யாக ஓர் சொல் விளம்பினவர் யார்?' என்று புகழ்ந்து பேசிய அருணகிரிநாதர் இத்தலத்தில் பாடிய திருப்புகழ் விசேஷ காரியசித்திக்கு பாராயணம் செய்யத் தகுந்தவையாம்!

ஒருமுறை வள்ளலாருக்கு தணிகை மலை முருகப்பெருமான் கண்ணாடியில் காட்சி அளித்தாராம்.

அப்படி முருகப் பெருமானின் திருக்காட்சி கண்ட மெய் சிலிர்ப்பில், ராமலிங்க அடிகளார் மெய்யுருக இப்படிப் பாடினாராம்.

'சீர்கொண்ட தெய்வ வதனங்கள்
ஆறும் திகழ் கடம்பம்
தார் கொண்ட பன்னிரு தோள்களும்
தாமரைத் தாள்களும் ஓர்
கார் கொண்ட வேலும் மயிலும் நற்
கோழிக் கொடியும் அருட்கார் கொண்ட
வண்மைத் தணிகாசலமும் வந்து
என் கண்ணுற்றதே!'

இப்படி முருகனின் அருட்காட்சி கண்டு பாடிய ஜோதி ராமலிங்க சுவாமிகள்,

'தணிகை மலையைச் சாரேனோ
சாமியழகைப் பாரேனோ'

என்று குழையக் குழையப் பாடிய பாடல்கள் நம் செவிகளில் தேனூற மெய்யுருகியவாறு தணிகைமலையான் படிகளில் ஏறுகிறோம்

அதுபோல் இந்தத் தணிகை மலையான் மீது தணியாத பக்தி கொண்டு அவனைப் பாடிப் பரவி தணிகைத் திருமுருகன் சந்நிதியில் சடாட்சர மந்திரத்தை நாற்பது நாள் ஓதியுள்ளார் இசை வள்ளல் முத்துசாமி தீட்சிதர்.

படியேறித் தணிகையின் மலையேறிக் கொண்டிருக்கும்போது, நம் மனதில்தான் எத்தனை பக்திப் பரவசம் பெருக்கெடுக்கிறது!

எத்தனை செந்நெறிச் சீலர்கள், இசை ஞானியர் பாடிப் பாடிப் பரவிய எம் தணிகை அழகனின் சந்நிதிக்கு, அன்றாடம் லௌகிக சுகங்களிலேயே மூழ்கிக் கிடக்கும் நாம் செல்லுவதற்கும் பூர்வஜன்மத்தில் புண்ணியம்தான் செய்திருக்கவேண்டும்!

நாம் செல்கிறோம் என்று சொல்லுவதுகூட தவறுதான்...

அவன் அழைக்கிறான். நாம் செல்லுகிறோம் என்பதுதான் சரி!

இந்த மலையடிவாரத்தில் வள்ளியின் அன்பைக் கொண்டவன். அவன் அருளைப் பெற அவன் சந்நிதிக்குச் செல்கிறோம்.

வழக்கமாக முருகப்பெருமானின் மயில் வாகனம் இருக்கவேண்டிய இடத்தில் யானை இருக்கிறதே..?

மயிலின் இடத்தில் யானையா? என்று வியக்கிறோம். கொடி மரத்தடியில் கிழக்கு நோக்கியிருக்கும் யானையின் திரு உருவத்தைப் பார்த்து,

நம் சந்தேகத்தை அங்கிருந்த குருக்கள் ஒருவரிடம் கேட்டோம். மயிலுக்கு பதில் யானை இருப்பதும் பொருத்தமே என்று ஆகமம் கூறுகிறதாம். அதற்கு இன்னொரு சுவையான செய்தியும் கூறினார் குருக்கள்.

அந்த யானை, தேவேந்திரனின் பட்டத்து யானையான ஐராவதமாம்! தன் மகள் தெய்வயானையை முருகப் பெருமானுக்குத் திருமணம் செய்து கொடுத்து அனுப்பும்போது, சீராகக் கொடுத்ததாம் அந்த யானை! அதைத் திருத்தணி மலையில் தன்னோடு வைத்துக் கொண்டிருக்கிறாராம், முருகன்.

அந்த யானை கிழக்கு முகமாக நோக்கியிருக்கிறது. அதற்கும் ஒரு ரசமான காரணம் இருக்கவே செய்கிறது. வள்ளியின் சந்நிதி மேற்குப்புறம் இருக்கிறது. வள்ளிக்கு யானை என்றால் பயம். அதனால் இந்த யானை, கிழக்கு முகமாக இருக்கிறதாம்.

இதைக் கேட்பதற்கு ரசமாக இருந்தாலும் நம் மனதில் வேறு ஒரு விளக்கமும் தோன்றவே

"

சூரசம்ஹாரத்தின்போது முருகப்பெருமானுடன் இணைந்து வீரப்போர் நடத்திய நவவீரர்களும் இந்தத் தணிகை மலையின் இயல்பால் சினம் தணிந்து அருள் வீரர்களாக மாறியிருக்கிறார்கள்!

"

செய்கிறது.

அதாவது:, பிரணவத்துக்குப் பொருள் சொன்னவன் நம் முருகன்.

அந்த பிரணவம் 'ஓம்' என்ற மந்திரத்துள் அடங்கும். 'ஓம் என்று ஓதினாலே நீங்கள் உய்வடைவீர்கள்' என்று மாந்தருக்கு உணர்த்தவே யானையைக் கொடிமரத்தடியில் குடி அமர்த்தி இருப்பானோ முருகன். யானையின் முகத்தோற்றம் 'ஓம்'என்ற எழுத்தை நினைவுபடுத்தும் உருவமாயிற்றே!

அருணகிரிநாதர் மற்றும் வள்ளலாரின் இசையோடு இயைந்த தமிழ் மணத்தை அனுபவித்த பரவசத்துடன் நாம் படிகள் ஏறிச் செல்ல, கொடிமரத்தின் அருகில் யானையின் வடிவில் பிரணவ மந்திரம் நம்மை வரவேற்க,

தணிகை மலையில் வீற்றிருக்கும் அழகனின் சந்நிதிக்குள் பிரவேசிக்கிறோம்.

அங்கே முருகனின் வீரப்படைதான் முதலில் நமக்கு தரிசனமாகிறது.

முன்பிராகாரத்திலேயே வலதுபுறத்தில் சூரனை வெல்ல முருகனுடனும் வீரபாகுத் தேவருடனும் சென்ற நவவீரர்கள் காட்சியளிக்கிறார்கள்.

வீரமும் அருளும் உடன் பிறந்தவை.

வீரமுள்ள இடத்தில் பிறக்கும் அருள்தான் மேன்மை பெற்றதாக இருக்கும்.

சூரசம்ஹாரத்தின்போது முருகப் பெருமானுடன் இணைந்து வீரப்போர் நடத்திய நவவீரர்களும் இந்தத் தணிகைமலையின் இயல்பால் சினம் தணிந்து அருள் வீரர்களாக மாறியிருக்கிறார்கள்!

சுற்றுப் பிராகாரங்களில் நவவீரர்கள் தரிசனம் ஷண்முகர் தரிசனம் மற்றும் அர்த்தநாரீசுவரர், அருணாசலேசுவரர், சிதம்பரேசுவரர் இப்படித் தேவசபையாய்த் தெய்வமூர்த்திகளின் தரிசனம் ஒருபுறம். நிறைவான தரிசனம் காண இரு தேவியருடன் முருகப்பெருமான் எழுந்தருளி இருக்கும் சந்நிதியை நோக்கிச் செல்கிறோம்.

சந்நிதிக்குச் செல்லும் வழியில் ஒரு சந்தனக் கல்லைக் காண்கிறோம். அந்த சந்தனக் கல் தெய்வயானைக்குச் சீதனமாக தேவேந்திரன் கொடுத்தனுப்பிய சந்தனக் கல்லாம். அதில் அரைத்துத்தான் தினந்தோறும் முருகனுக்குச் சந்தனம் உபயோகிக்கப்படுகிறதாம்

இப்படி தெய்வயானைக்கே சீதனங்கள் வந்திருக்கிறது என்றால் , வள்ளிக்குச் சீதனம் இல்லையா?

வள்ளிக்கு இந்தத் திருத்தணிகை மலையே சீதனம்தான்! வள்ளியின் இடத்தில்தானே முருகன் எழுந்தருளியிருக்கிறார்!

அந்தத் தணிகை மலைதான் எத்தனை பேறு பெற்றுவிட்டது?!

பேறு பெற்ற அந்த மலையுடன் சேர்த்து அங்கு திருவளர் தேவியருடன் எழுந்தருளியிருக்கும் திருமுருகன் திருப்பாதம் தொழுது நிற்பதை விடவும் வேறு பேறு இருக்கிறதா என்ன?!

அங்கே தொழுது நிற்கிறோம்.

வலதுபுறம் வள்ளியின் சந்நிதி. இடதுபுறம் தெய்வயானையின் சந்நிதி, நடுவில் நாயகனான குமரக்கடவுள் சந்நிதி.

இரு தேவியரையும் சமமான அருட்பார்வை யுடன் பரிபாலித்து நிற்கிறான் முருகப்பெருமான்.

(அதற்கு அடையாளமாக_ நித்திரைக்கு முருகப்பெருமான் பள்ளியறை போகும்போது ஒரு நாள் வள்ளியும் மறுநாள் தெய்வயானையும் பெருமானோடு பள்ளியறைக்குச் செல்கிறார்கள்!)

நாம் வியந்து போற்றி நிற்கிறோம்

யார் இந்த வள்ளி? யார் இந்த தெய்வயானை? இவர்களை ஆளும் முருகன் யார்?

அந்த மூவரும்தான் பிரபஞ்சம். அவர்களில்லாது பிரபஞ்சமில்லை.

மனித வாழ்வை இயக்குவது மூன்று

சக்திகள். ஒன்று ஞான சக்தி: அடுத்தது இச்சா சக்தி; இன்னொன்று கிரியாசக்தி.

இந்த மூன்று சக்திகளும்தான் முருகப்பெருமானும் இரு தேவியரும்.

வள்ளி இச்சாசக்தி (நம் எண்ணங்களிலுள்ள மதமாச்சரியங்களை விலக்கி அவற்றைப் புனிதப்படுத்துபவள்)

தெய்வயானை கிரியாசக்தி (நம் நற்செயல்களை இயக்குபவள்!)

ஞானசக்தி யார்?

வேறு யார்? சாட்சாத் முருகப்பெருமானே!

இந்த மூன்று சக்திகளும் இணைந்து நிற்பதுதான் வள்ளி தெய்வயானை திருமணம்!

இந்த மகாசக்திகளின் இணைப்பை உலகிற்கு உணர்த்தவே, இந்த மலையில் வள்ளியாய் பிறந்ததும், வனத்தில் விளையாடியதும், தினைப்புனம் காத்ததும் திருவிளையாடல்கள் புரிந்து திருமணக்கோலம் காட்டியதும்!

ஜீவாத்மா தன்னைப் புனிதப்படுத்திக்கொண்டு பரமாத்மாவைச் சேருகிற ஒரு தெய்வத் திருமணம்.

அந்த ஞானச் சங்கமத் தோற்றத்தில். வள்ளி தெய்வயானையோடு முருகப்பெருமான் முகிழ்ந்தருள்புரியும் மோனத் திருக்காட்சியில் சிந்தை கனிந்து நிற்கிறோம்.

அந்தத் திருத்தணி மலையில் ஒரு வள்ளி தினைப்புனம் காத்து முருகனை அடைந்ததாக நமக்குத் தோன்றவில்லை. ஜீவகோடிகளான நாம் ஒவ்வொருவருமே ஒவ்வொரு வள்ளியாய் அவன் சந்நிதியில் நிற்பது போலிருக்கிறது.

நாம் செய்யும் நல்வினைகள் தினைப்புனமாக வளர்ந்து கிடக்கின்றன. நம் தீவினைகளும் அகங்கார ஆணவங்களும் பறவைகளாய்ப் பறந்து வந்து அந்த நல்வினையெனும் தினை அரிசிகளைத் தின்று செல்கின்றன. அப்போது அந்த நல்வினைகளைக் காக்க நமக்கு வேறு எந்த உதவியும் இல்லை. நம் ஐயன் குமரேசன் பேரிலுள்ள பக்தி ஒன்றே நமக்கு ஆயுதம். அந்த ஆயுதத்தால் தீவினைகளை விரட்ட முயல்கிறோம். ஆலோலம் பாடுகிறோம் அவன் தாளை நினைந்து துதிக்கிறோம்.

ஆலோலம் பாடி விரட்டியதும் பறவைகள் ஓடிவிடுவதைப் போல்,

நம் ஐயன் கந்தவேளின் பேரில் கொண்ட பக்தியால் நாம் வல்வினைகளை விரட்டியதும் அவை பறந்தோடுகின்றன.

ஆம்; அந்தக் கந்தவேளின் கருணை அல்லால் வந்த வினை தீர்க்க வகையேது?

அந்தத் திருத்தணி மலையெங்கும் மலைச்சாரல்கள் எங்கும் மருங்குகள் எங்கும் எதிரொலிக்க நம் மனம் ஐயனின் திருப்புகழைப் பாடுகிறது. அவன் மலையில் சஞ்சரிக்கும் வெண் முகில்கள் எல்லாம் நம் பிரார்த்தனைகளை அந்த நம்பிராஜன் மருமகனின் கழல்களில் கொண்டு சேர்க்கின்றன!

‘திசைக் கடல் ஆடும் புலிக் குயிராகும்
திருத்தணி மேவும் பெருமானே!’

என்று தித்திக்கத் தித்திக்க அருணகிரிநாதர் பாடிய திருப்புகழ் அந்தத் திருத்தணி மலையில் இன்னும் ஒலிக்கின்றன!

‘தணிகை மலையை சாரேனோ
சாமி அழகைப் பாரேனோ
‘தணிகாசலம் போய் தழையேனோ
சாமி திருத்தாள் விழையேனோ
பணி காதலித்துப் பிழையேனோ
பாடி மனது குழையேனோ’

என்று உள்ளம் உருக உருகப் பாடிய வள்ளலாரின் அருட்பாவும் அந்த மலையில் எதிரொலித்தபடி இருக்கும் அந்தப் புனிதத் தலத்தில், வல்வினைகள் எல்லாம் இல்லாமல் செய்யும் அழகு முருகனின் திருவடி தரிசனத்தால் நம்முடைய வினைகள் அனைத்தும் விரைந்தோடி இருக்கும் என்ற நம்பிக்கை நம் மனதில் தோன்றி பரவசத்தை ஏற்படுத்த மன நிறைவுடன் திரும்புகிறோம்.

சக்தி பைனான்ஸ்

நம்பிக்கையின் நிகரற்ற கட்டமைப்பு

H.O. : கோயமுத்தூர் - 641 018. போன் : 0422-2231471-4

புதிய மற்றும் பழைய "வாகனங்களுக்கு கடனுதவி திட்டம்"

உங்கள் வளர்ச்சியே எங்கள் மகிழ்ச்சி

20* வருடங்கள் வரையிலான சிறிய மற்றும் கனரக லாரிகள் JCB, Excavator வாகனங்களுக்கும் கடனுதவி அளிக்கப்படும்.

எங்கள் சேவைகளைப் பற்றி சில தகவல்கள்

- ✓ புதிய மற்றும் பழைய வாகனங்களுக்கு கடனுதவி வழங்குதல்
- ✓ மிகப்பழைய மாடல் சரக்கு வாகனங்களுக்கு நிதியுதவி
- ✓ வாகன சீரமைப்பு Tyre, FC, உதிரி பாகங்கள் மற்றும் செலவினங்களுக்கும் கடன் உதவி
- ✓ தேர்டு பார்ட்டி செட்டில்மெண்ட் (Third Party Settlement)
- ✓ பழைய வாகனங்களுக்கும் இன்சூரன்ஸ் சேவையுடன் கூடிய நிதியுதவி
- ✓ வாடிக்கையாளர்களின் தேவைகளை அறிந்து 24 மணி நேர துரித சேவை
- ✓ துரித சேவைக்கு பிரதான இடங்களில் வாடிக்கையாளர் சேவை மையங்கள்
- ✓ எளிய விதிமுறைகள், நம்பிக்கை, நாணயம் மற்றும் கனிவான சேவை.

Registered with Registrar of Newspapers for India No. 42582/83
Licensed to post without Pre-payment under Regn.No. TN/WR/CBE/016/WPP/2021-23

Date of Publication
28th Every Month

Regd. No. : CB/016/2021-23
OM SAKTHI - MAY - 2021

Dr. MAHALINGAM MCET
COLLEGE OF ENGINEERING AND TECHNOLOGY
Enlightening Technical Minds Estd. 1998
An Autonomous Institution (Since 2011)

Dr. MAHALINGAM
COLLEGE OF ENGINEERING AND TECHNOLOGY

Affiliated to Anna University, Chennai; Approved by AICTE ; Accredited by NAAC with Grade 'A++'
Accredited by NBA - Tier1 (Mech, Auto, Civil, EEE, ECE, E&I and CSE)
Udumalai Road, Pollachi - 642 003. Tel: 04259-236030/40/50 Fax: 04259-236070 www.mcet.in

COUNSELLING CODE
2706

MCET has been recognised by MHRD to establish "Institution Innovation Council (IIC)" MIC

NBA NATIONAL BOARD OF ACCREDITATION
TIER 1 ACCREDITED COURSES*

nirf
NIRF INDIA RANKINGS 2019:
MCET Ranked 184th in Engineering Category

Empowering Students to accomplish their dreams

Dr. Mahalingam College of Engineering & Technology (MCET), an engineering institution with two decades of service offers quality education and training.

Programmes

B.E. / B.Tech
(*Tier 1 - Accredited by NBA)

- Mechanical Engg.*
- Automobile Engg.*
- Mechatronics Engg.
- Civil Engg.*
- Electrical & Electronics Engg.*
- Electronics & Communication Engg.*
- Electronics & Instrumentation Engg.*
- Computer Science & Engg.*
- Information Technology

M.E / MCA
- CAD / CAM
- Computer Science & Engg.
- Embedded System Technologies**
- Communication Systems
- Structural Engg.
- Master of Computer Application

Ph.D
- Mechanical Engg.
- Electronics & Communication Engg.
- Computer Science & Engg.
- Civil Engg.
- Physics

**awaiting approval

MCET has the unique position of being the only **Autonomous (since 2011)** Engineering College in Tamil Nadu till date to have been conferred with the **highest grade of A++** by National Assessment and Accreditation Council (NAAC)

MCET has secured Platinum Ranking in 2019 for the Second Consecutive Year in the AICTE-CII Survey of Industry Linked Technical Institutions 2019.

18 CENTERS OF EXCELLENCE
90% STUDENTS OFFERED PLACEMENTS
1309 STUDENTS UNDERWENT INTERNSHIP
MCET CONNECT – INTERACTIVE LEARNING EXPERIENCE THROUGH TABLETS

On Campus Techno-Commercial Ventures (Caresoft Global Pvt. Ltd., VVDN Technologies, ABT Info.net - An Internet Data Centre, ABT Maruti Ltd.)

International Collaboration with Canadian & Australian University

NIA